

திருமந்திரக் கதைகள் - 6
கே.வி.குணசேகரன்

# என்னுரை

திருமந்திரம் ஓர் அருமையான நூல். மெய்யுணர்வைத் தரும் நூல். உலகினதும் உலக மாந்தரினதும் மாயத் தோற்றங்களை விபரிக்கும் நூல். யாவும் போலியானவை அவை எம்மை விட்டு நீங்குபவை என்பதை அறிந்தும் உயிர்கள் மாயாகாரியங்களையே விரும்பி அழிவடைகின்றன. நோய் வரும் வரை நோயைப்பற்றிச் சிந்திப்பதில்லை. நோய் வந்ததும் தான் இறந்து விடுவேன் என்ற அச்சம். உண்மையை ஏற்றுக் கொள்ளாமை கடவுளை தேவைகள் கருதி வணங்கல் என்பன பற்றித் திருமந்திரம் விரிவாகக் கூறுகிறது. மனிதருக்குக் கடவுளால் ஆறாவது அறிவு கொடுக்கப்பட்டது. ஆராய்ந்து நல்லவற்றைச் செய்யவே. அதை உணராத மனிதர்கள் ஆராய்ந்து தமக்கு நன்மை தருமென நினைத்துத் தீய செயல்களைச் செய்கின்றனர். பொதுவாகக் கல்வி அறிவுள்ளவர்களே தீய செயல்களை அதிகமாகச் செய்கின்றனர். இந்நிலை மாற வேண்டும. படைக்கப்பட்ட உயிர்கள் யாவும் பேரின்பமடைய வேண்டுமென்பதே திருமூலரது விருப்பமாகும். இந்நூலுக்கு அழகான அட்டைப்படத்தை வடிவமைத்துத் தந்த யாழினிக்கும் கணணிமயப்படுத்தித் தந்த குமார் மல்ரி சென்றர் உரிமையாளருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

**திரு. கே. வி. குணசேகரம்.**

# திருமந்திரக்கதைகள்

## ஆறாம் தந்திரம்

(விநாயகர் காப்பு)

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

### 1. சிவகுருதெரிசனம்
(தம்முதல் குருவுமாய்த் தோன்றல்)

1548. பத்திப் பணித்துப் பரவும் அடிநல்கிச்
சுத்த வுரையால் துரிசறச் சோதித்துச்
சத்தும் அசத்துஞ் சதசத்துங் காட்டலாற்
சித்தம் இறையே சிவகுரு வாமே

“ சிவனடியார்களே, கதிரேசன் சொல்வார், “ சிவபெருமான் தனது மெய்யடியார்களுக்குத் தரிசனம் கொடுத்து அவர்களை உய்விப்பதற்காகக் குருவாக வருவார். முழு அன்பாகிய பக்தியினை அடியார்களின் மனதில் உருவாக்கி எல்லோராலும் தொழிப்படும் தனது திருவடியினைத் தந்தருளி திருவைத்தெழுத்தாகிய உபதேச மந்திரத்தால் வழி ஆறிலும் உள்ள குற்றங்களைப் போக்கியருள்பவர் குரு. நிலைபெற்ற சிவமெய்யினையும் நிலைபேறில்லாத மாயா காரிய உலகியற் பொருட்களையும் இரண்டுடனும் சார்ந்த இரண்டினது பலனையும் பயனையும் அனுபவித்து சார்பி எனப்படும் உயிராம் சதசத்தினையும் உணர்வுக்கு உணர்வாய் அருட்கண்களால் உணர்த்தி அருள்பவன் குரு. ஆதலால் சிவ குருவாக எழுந்தருளி வருபவன் சிவபெருமானே ஆவான்” என்று கதிரேசன் கூறுவார். அது உண்மை எனது குரு வாழ்ந்த காலத்தில் ஒரு நாள் சிவனடியார் ஒருவர் சிவ அணிகலன்களுடன் வந்தார். சில நாள் ஆச்சிரமத்தில் தங்கியிருந்து எனது குருவுக்கு உபதேசம் சொய்தார். ஒரு நாள் இருவரும் தியானத்தில்

இருந்தனர். குரு தியானம் கலைந்து எழுந்த போது குருவோடு தியானத்தில் இருந்தவரைக்காணவில்லை. பலநாட்கள் சென்றும் அவர்வரவில்லை. குருவும் அதைப்பற்றி அக்கறைப் படாதிருந்தார். நான் கேட்ட போது சொன்னார், “ குருவாய் வருபவர் சிவன். அவன் தன் மெய்யடியரைக்காணவும் அவர்கள் காணவும் வந்து காட்சியளிப்பார். வந்த வேலை முடிந்ததும் சென்று விடுவார். தினமும் நாமிரு வரும் சந்திப்பதால் யாருக்கும் அறிவிக்கத்தேவையில்லை என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1549. பாசத்தைக் கூட்டியே கட்டிப் பறித்திட்டு**
**நேசித்த காயம் விடுவித்து நேர்நேரே**
**கூசற்ற முத்தியிற் கூட்டலா நாட்டத்தது**
**ஆசற்ற சற்குரு அம்பல மாமே**

“ சிவனடியார்களே, நான் அதைக் கேட்டு வியப்புற்றிருந்தேன். வந்தவர் சிவனென்று தெரிந்திருந்தால் முறைப்படி வணங்கி அருள் பெற்றிருக்கலாமென நினைத்தேன். எனது மனக்கருத்தை அறிந்த குரு சொன்னார், “ சிவன் தன்னை வெளிக்காட்டிக் கொள்ளமாட்டார். பக்குவப்பட்ட ஆன்மாக்கள் தான் அவரை உணர்ந்து அறியும். எல்லோருக்கும் குரு வெளிப்பட்டால் சிவன் சாதாரணமாகிவிடுவார். அவர் மீது பக்தி கொண்டு உலகப்பற்றுக்களை நீக்கி இரந்து வேண்டினால் வேண்டுபவனின் நிலையை அறிந்தபின்பே வருவார். ஆருயிர்களுக்குத் தொன்மையில் ஏற்பட்ட மலத்தைப் போக்குவதற்கும், மாயை, வினை வினைகளை உடன் கூட்டி அம்மலத்தைப் போக்குபவன் குருவாக வரும் சிவன். மலம் நீங்கியவுடன் உயிர்கள் உடலின் மீது வைத்த விருப்பத்தை அகற்றி நேரடியாகத் தன் திருவடியில் சேர்ந்து பெரும் பேறு வழங்குவதால் அச் சிவன் பேரருளைத் தரும் விருப்புடையவன். குற்றங்களை அகற்றி குணமருளும் உண்மையான குரு அறிவுப் பெருவெளியில் இருக்கும் சிவனே ஆவான். அதனால் தான் குரு யாருக்கும் எதையும் கூறுவதில்லை ஆச்சிரமத்திற்குப் பலரும் வருவார்கள் வருபவர்களில் சிவகுரு யாரென்று உரியவருக்குத் தான் தெரியும் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1550. சித்திகள் எட்டொடுந் திண்சிவ மாக்கிய**
**சுத்தியும் எண்சத்தித் தூய்மையும் யோகத்துச்**
**சத்தியும் மந்திர சாதக போதமும்**
**பத்தியும் நாதன் அருளிற் பயிலுமே**

‘‘ சிவனடியார்களே, ஆச்சிரமத்திற்கு வரும் பலர் தமது மனதை ஒரு நிலைப்படுத்த முடியாது பரிதவிக்கின்றனர். சிலர் தமது நிலையை வெளிப்படையாகக் கூறுவர். பலர் வெட்கம் காரணமாகக் கூறாது தமக்குள் அவற்றை மறைத்து திக்குமுக்காடுவர். எமது ஆச்சிரமத்திற்கு வரும் நவநீதன் என்ற பெரியவர்தனது மனதைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று சொன்னார். அதற்கான காரணத்தையும் சொன்னார், ‘‘தான் ஒரு பெண்ணை விரும்பியதாகவும் அதைப் பெற்றோர் விரும்பாது கட்டாயப்படுத்தி இன்னொரு பணக்கார பெண்ணைத் திருமணம் செய்து வைத்து விட்டார்கள். நான் காதலித்த பெண் தற்கொலை செய்து கொண்டாள். அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவளது மரணத்திற்குக் காரணம் நானென நினைத்துத்துன்பப்படுகிறேன்’’ என்றார். நான் சொன்னேன் ‘‘ அடியவரே மனதைக் கட்டுப்படுத்தி ஒரு நிலப்படுத்தாமல் எந்தச் செயலையும் செய்ய முடியாது. வேலூருக்குச் செல்லப்புறப்பட்டவர் மனக்குழப்பத்தால் காளையூருக்குச் சென்று விடுவார். அகத்தவத்தார்க்கு எய்தும் எண் வகைச் சித்திகளுடன் உறுதியான சிவமாக்கிய ஆறு வகையான வழிகளால் தூய்மையும் சிவபெருமானின் தன் வயத்தனாதல் முதலிய திருவருட்குணங்கள் எட்டும் சிவயோகத்தால் வரும் சக்தியும் மந்திரங்களைப் பயிலும் உணர்வும் பொது நீங்கிச் சிவபெருமானே முழு முதல் என வழிபடும் முழு முதற் பண்பும் ஆகிய இவை அனைத்தும் முழு முதல் தலைவனாகிய சிவபெருமானின் திருவருளால் தான் கைகூடும். நீங்கள் மனதை அடக்காது அகத்தவம் செய்வதாலோ தமிழ் மந்திரத்தை ஓதுவதாலோ பயனில்லை. முதலில் மனத்தை அடக்கப்பழகுங்கள் என்றேன். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1551. **எல்லா வுலகிற்கும் அப்பாலோன் இப்பாலாய்**
**நல்லார் உள்ளத்து மிக்கருள் நல்கலால்**
**எல்லாரும் உய்யக்கொண் டிங்கே அளித்தலாற்**
**சொல்லாந்த நற்குரு சுத்த சிவமே.**

‘‘ சிவனடியார்களே, நவநீதன் ஆச்சிரமத்தில் இருந்த போது அங்கு வந்த கதிரேசன் நவநீதனுகுச் சொன்னார், ‘‘நவநீதா நீ காலையில் ஆசாரசீலனாக வந்து சிவனைத் தொழுகிறாய். குருவின் உபதேசங்களைக் கேட்கிறாய். பின் மாலையில் நன்றாகக் குடித்து விட்டு வீட்டுக்குச் சென்று உனது மனைவியை வருந்துகிறாய். இது ஏன்? அவள் என்ன பாவம் செய்தாள். எதுவும் அறியாத அவளது பெற்றோரை உனது தந்தை ஏமாற்றி அவளை உனக்குச் செய்து வைத்தவர். அப்போதே நீ மறுத்திருந்தல் வேண்டும். திருமணத்தைச் செய்து விட்டு ஏன் அவளைத் துன்புறுத்துகிறாய்? படித்த உனக்கு இது நியாயமாகத்

தெரிகிறதா..? தர்மரத்தினத்தின் மகள் நிர்மலா மனோகரனைக் காதலித்தவள். அவளுக்கு வேறோர் இடத்தில் பெற்றோர் நிட்சயம் செய்ய அவள் இரவோடிரவாக மனோகரனோடு சென்றவள். இப்போ பெற்றோர் அவளைச் சேர்த்து விட்டனர். அப்படி ஒரு துணிவில்லா நீ ஏன் இங்குவந்து காலத்தைக் கடத்துகிறாய். உன்னால் மனதைக் கட்டுப்படுத்த முடியா விட்டால் இங்குவராதே. உலகங்கள் அனைத்திற்கும் அப்பாற் பட்டசிவன் இவ்வுலகிற்குத் தென் நாடுகடந்த சிவனாகத் திகழ்கிறான். அவன் சிவஞானிகரின் உள்ளத்தில் இருந்து மிக்க அருள் செய்வதைப் போல ஏனைய மக்களுக்கும் அருள் செய்வதற்காகக் குருவாகத் தோன்றியருள்கிறான். அதனால் எல்லோரும் இப்பிறப்பிலேயே உய்யவேண்டும் என்று நினைக்கிறான். அதனால் தான் ஆச்சிரமமைத்துக் குருவானவர். அவை மக்களுக்கும் உபதேசம் செய்கிறார். அதை அவர் அடிக்கடி உபதேசிக்கிறார். அப்படியிருந்தும் நீ இதைப் பற்றி உணர்கிறாய் இல்லை. அதனால் இங்கு வராதே என்றவர்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1552. தேவனுஞ் சுத்த குருவும் உபாயத்துள்
யாவையும் மூன்றா யுனக்கண் டுரையாலே
மூவாப் பசுபாச மாற்றியே முத்திப்பால்
யாவையும் நல்குங் குருபரன் அன்புற்றே.**

'' சிவனடியார்களே, நவநீதனுக்குக் கதிரேசன் சொன்னார், ''நீ நேற்றுக் குடித்து விட்டு ஆச்சிரமத்தைப் பற்றியும் ஆச்சிரமத்தில் தொண்டாற்றும் சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பற்றியும் தவறாகப் பேசியுள்ளாய். அவரைக் குரு என்று ஏற்காத நீ ஏன் ஆச்சிரமத்திற்கு வருகிறாய்? தேவனான சிவபெருமானும் இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கிய சிவனின் அடிமையான ஆருயிரும் சிவகுருவாவர். இங் கிருவரும் ஒருவரே. இறை உயிர்தளை என்று கருதிப் பேசப்படும் பதி, பசு, பாசம் என்ற மூன்றினுள் அவன் ஒன்றாக இருக்கிறான். அவன் கெடாத உயிராகிய பசுவினது தளையாகிய பாசத்தை அருமறை உபதேசத்தால் மாற்றி அருள்வான். மாற்றவே திருவடிப் பேற்றின்கண் எல்லா உயிரும் சேர்ந்து இன்புறும். அத்தகைய சிவபெருமான் மேலான குருபரன் அவன். அவனது திருவடியினை முழு அன்புடன் நினைப் பவர்களுக்குத் தொண்டு செய்வேரைத் தூற்றுவது பாவம். ஏன் நீ பாவத்தைத் தேடிக் கொள்கிறாய். உனக்கு நம்பிக்கையில்லை யென்றால் சுவாமியிடம் சொல்லி விளக்கம்கேள். தவறுகளைச் சுட்டிக்காட்ட வேண்டுமே தவிர பலர் முன்னிலையில் பேசக்கூடாது. ஏனென்றால் நீ பேசியதை ஒவ்வொரு வரும் ஒவ்வொருமாதிரி எடுத்துச் சொல்கிறார்கள். என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1553. சுத்த சிவன்குரு வாய்வந்து தூய்மைசெய்து**
**அத்தனை நல்கருள காணா அதிமூடர்**
**பொய்த்தகு கண்ணான் நமரென்பர் புண்ணியர்**
**அத்தன் இவனென் றடிபணி வாரே.**

‘‘சிவனடியார்களே, கதிரேசன் நவநீதனுக்குத் தொடர்ந்து சொன்னார், ‘‘நீ படித்தவன். நல்ல தொழிலில் இருப்பவன். அதனால் மதிப்புக் குறைவான செயல்களைச் செய்யதே. உனது பேச்சைக் கேட்ட உனது அலுவலகத்தில் உனக்குக் கீழ் பணியாற்றும் ஒரு சிற்றுழியன் நீ பேசுவது போலப் பேசிக் காட்டியுள்ளான். அதை ரசித்துப் பலர் சிரித்துள்ளனர். இவ்வாறான வேண்டாத செயல்களைச் செய்யும் நீ என்ன பெறவேண்டும் என்று இங்கே வருகிறாய்.? குளிக்கச் சென்று சேறு பூசுபவர்களைப் போன்ற செயல்களைச் செய்யாதே. சிவபெருமான் குருவாக எழுந்தருளி வந்து ஆருயிர்களில் படிந்துள்ள மலங்களை அகற்றி தூய்மை செய்தருளுபவன். அக்குரு தான் திருவடியையும் தந்தருளுபவன் சிவன். உண்மையினை உணராத புல்லறிவானராகிய அதிமூடர், நிலையில்லாத மாயாகாரிய மாகிய ஊனக் கண்கொண்டு கண்டு சிவகுருவும் நம்மைப் போல ஒருவர் என்று எண்ணித் தவறான செயல்களைச் செய்கின்றனர். அருட்கண் பெற்ற புண்ணியவான்கள் அத்தனாகிய சிவன் இவரே என்று அன்பு கொண்டு ‘‘சிவ சிவ’’ என்று ஒதி அவரது திருவடியை வணங்குவர். நீ இங்கு வரும்போது சுவாமியின் கால்களைப் பிடிக்கிறாய். கள்ளைக் குடித்தால் கள்ளச் சாமி என்கிறாய் படித்த உனக்கு இது சரியாகத் தெரிகிறதா? என்று கேட்டவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1554. உண்மையிற் பொய்ம்மை ஒழித்தலும் உண்மைப்பார்**
**திண்மையும் ஒண்மைச் சிவமாய அவ்வரன்**
**வண்மையும் எட்டெட்டுச் சித்தி மயக்கமும்**
**அண்ணல் அருளன்றி யாரறி வாரே.**

‘‘ சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், ‘‘ படித்தவர்கள் தான் புதிது புதிதாக விளக்கங்களைக் கேட்கின்றனர். தாம் மேதாவிகள் என்று நினைத்து மக்களைக் குழப்புகின்றனர். படித்தவர்கள் நல்லநூல்களைப் படித்துத் தேர்ந்த பின்பு தான் பேச வேண்டும். நீ கற்ற கல்வி என்பது வெள்ளம் அல்ல. ஒரு மழைத்துளி. அவ்வளவைத் தான் கற்க முடியும். கல்லாதவை வெள்ளம் போல உண்டு இதை நீ உணரவில்லை. படித்தவனுக்கு எல்லாம் தெரியும் என்று நினக்கிறாய். அத்துடன் படியாதவர்கள் மூடர்கள் என்றும் நினைக்கிறாய். படிக்காதவர்கள் சொன்னதை நம்புவார்கள். பின் அறிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்தபின் கதைப்பார்களே தவிரக்கண்டபடி கதைக்கமாட்டார்கள். ஓர் ஆசிரியருக்கு எல்லாப் பாடங்களையும் தெரிந்து கொள்ள

முடியுமா? அதற்குரிய பாடப்பகுதியை நல்ல முறையில் கற்பதால் அவர் நல்லாசிரியர். இங்கே நல்லைநாதன் இருக்கிறார். பாடசாலைப் பக்கமே செல்லவில்லை. இப்போ குருவாகச் சிவன் வருவது பற்றிச் சொல்வார்'' என்றதும் நல்லைநாதன் சொன்னார். ''சிவகுரு உண்மையாகிய திருவடியுணர்வால் அறியாமையை அகற்றுவார். அதை அகற்றியதும் மாயாகாரிய நிலையையும், அம்மாயையினைக் காரியப்படுத்தி நாம் பயன் பெறும்படி சிவனார் அருளுவார். அதனால் அவர் தந்தருளிய உண்மை எமக்குப் புலனாகும். அறுபத்து நான்கு சித்தி களை எய்தும் மலம் அகலும். இவையாவும் சிவனின் திருவருளால் நடை பெறுவன. இவ் உண்மையை எல்லோரும் அறியமாட்டார்கள்'' என்று உலகநாதன் கூறக் கதிரேசன் சொன்னார், ''நவநீதா, நீ இங்கு என்னென்ன நடை பெறுகிறது. என்பதை அறிந்து பிறருக்குச் சொல்வதற்காகத் தான் வருகிறாய் என நினைக்கிறேன். எந்த மதமானானும் அவர்களுக்கென ஒரு தத்துவம் இருக்கும் அதை விமர்சிக்கக் கூடாது. சமயங்களுள் மெய்யானது எது என்று உனது அறிவால் ஆராய்ந்து செயற்படு என்றார். '' என்றவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1555. **சிவனே சிவஞானி யாதலாற் சுத்த**
**சிவனே யெனஅடி சேரவல் லார்க்கு**
**நவமான தத்துவ நன்முத்தி நண்ணும்**
**பவமான தின்றிப் பரலோக மாமே**

''சிவனடியார்களே, கதிரேசன் அப்படிச் சொல்வாரென நவநீதன் எதிர்பார்க்க வில்லை., ''மனதில் உள்ள குழப்பம் தீர இங்கு வந்தால் அது அதிகரிக்கிறது, நான் கவலை காரணமாகவே குடிக்கிறேன். எனது கவலைகள் தீராததால் தான் இவ்வாறு நடக்கிறேன் '' என்று அவன் அழுதான். அப்போது கதிரேசன் சொன்னார், '' சிவனது திருவடியை அடையாதவர்களுக்குக் கவலைகள் ஆயிரமாயிரமாகப் பெருகும். ஒன்றைத் தீர்த்தால் பத்து வரும். அதற்காகத் தான் பல படிமுறைகளுடாக கவலையை போக்கித் திருவடி இன்பத்தைத் தரச்சிவன் குருவாக வருகிறார். இதை ஏற்றுக் கொள்பவன்தான் செயலீடுபடுவான். ஏற்கா தவர்கள் உன்னைப் போலக் குழப்பத்துடன் வாழ்வார்கள். சிவஞானமாகிய முற்றுணர்வைத் தந்தருளும் சிவகுரு சிவஞானியாவார் அவர் சிவகுரு எனப்படுவார். சிவகுருவைச் சிவன் என நினைத்து அவரது திருவடியைச் சேரும் நற்பேறு பெற்றவர்களுக்குத் தூவாமயையின் காரியமாகிய இவ் உடல் உறுப்புக்கள் தூவாமாயையின் காரியமாக வேறுபடும். இதனால் உள்ளம் சிவனுடன் ஒன்றாகி உடலும் அவனுடலாகும். இந் நிலையில் முத்தி கைகூடும், பிறப்பும் அறும். திருவடிப்பேறும் கிடைக்கும். இது யாவும் பக்தியின் இறுதி நிலை. இதை அடைய விரும்புவோர் பேசமாட்டார்கள். முதலில் நீ

பேசுவதை நிறுத்திவிட்டுச் செயலில் இறங்கு. இல்லாவிட்டால் இங்குவராதே என்றவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1556. குருவே சிவமெனக் கூறினன் நந்தி**
**குருவே சிவமென் பதுகுறித் தோரார்**
**குருவே சிவனுமாய்க் கோனுமாய் நிற்கும்**
**குருவே யுரையுணர் வற்றதோர் கோவே.**

‘‘ சிவனடியார்களே, கதிரேசன் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்த நமசிவாயகம் சொன்னார், ‘‘ அடியார்களே, இங்குள்ள பலருக்குச் சமயம் என்றால் என்ன வென்று தெரிவதில்லை. உதாரணமாகத் திருமந்திரம் என்ற நூலை எடுத்தால் சமயநூல் என்கின்றனரே தவிர அதைப் பற்றிவேறு விதமாகச் சிந்திப் பதில்லை. சமயம் என்பது ஓர் ஆருயின் நன்மை கருதி அதற்கான செயற்பாடுகளை வரையறுத்துக் கூறுகிறது என்பதை நினையாது பூசைகளும் அனுட்டானங்களும் விரதங்களும் திருவிழாக்களும் தான் சமயம் என்ற நினைக்கின்றனர். திருமந்திரம் வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளையும் கூறுகிறது. காமம் பற்றிக் கூறுகிறது. தீய செயல்கள் பற்றிக் கூறுகிறது. எதைஎதைத் தவிர்க்க வேண்டும் என்று கூறுகிறது. இவற்றை விளங்கிக் கொள்ளாதவர்கள் தான் தவறாக நினைக்கின்றனர். நவநீதன் போன்றோர் சமயதத்துவங்களைத் தவறாகப் புரிந்தமையால் தான் இவ்வாறு நடக் கின்றனர். நந்தியாகிய சிவன் அருள் வீழ்ச்சியால் எழுந்தருளி வந்து ஆட் கொள்ளும் குருவே சிவன் என்று அருளினன். சிவனே குருவாக வருபவர் என்பதை உணராதவர்களால் தான் பிரச்சினைகள் உருவாகின்றன. சிவனான சிவகுருவே நூலாலும் நூலால் உணரும் நோன்மை அறிவாலும் அறிய முடியாதவராவர். அவரைச் சிற்றிவுள்ளவர்கள் உணரமாட்டார்கள். உணர்த்தினாலும் உணரமாட்டார்கள் இதற்குக் காரணம் மலம் என்றவர்’’ என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1557. சித்தம் யாவையுஞ் சிந்தித் திருந்திடும்**
**அத்தன் உணர்த்துவ தாகும் அருளாலே**
**சித்தம் யாவையுந் திண்சிவ மானக்கால்**
**அத்தனும் அவ்விடத் தேயமர்ந் தானே.**

‘‘ சிவனடியார்களே, ரவீந்தின் வெளிநாடு சென்றமையால் ஆறுமாதகாலம் ஆச்சிரமத்திற்கு வரவில்லை. அன்று வந்த அவன் என்னையும் கதிரேசனையும் வணங்கின பின் நமசிவாயகத்தையும் வணங்கினான். மிகவும் உயர்ந்த பதவிவகிக்கும் அவன் மூவரது பாதங்களைப் பற்றி வணங்கியது நவநீதனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்து. ரவீந்திரன் சொன்னான், ‘‘கடந்த ஆறு மாதங்காளக

ஆச்சிரமத்திற்கு வராதது எனக்கும் பெருந்துன்பத்தைக் கொடுத்தது. துன்பப்படும் போதெல்லாம் நான் குருவாக நினைக்கும் பெரியவர் கதிரேசன் மனதுள் வந்து ஆறுதல் கூறுவார். சிவனைப் பற்றிச் சொல்வார், ‘‘அத்தனாகிய சிவபெருமான் தனது திருவருளால் உயிர்களுக்குள் நின்று உணர்த்தியருள்பவன். அதனால் எண்ணமாகிய சித்தம் யாவற்றையும் உணர்த்தும் அம்முறையில் எண்ணமானது இடையறாது சிவத்தையே நாடுவதால் எண்ணம் முதலிய கருவிகள் அனைத்தும் சிவக் கருவிகளாக மாறும். அத்தனான சிவபெருமான் அவ் ஆவியுள்த் தானாகவே அமர்ந்திடுவன். அதனால் கவலை கொள்ளாதே. உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அவனை நினைத்தால் அவன் இங்கு வந்து விடுவான். அல்லது அங்கு அழைத்துச் சென்று விடுவான் என்று கூறியவர். அதன் பின் நான் கவலை கொள் வதில்லை. சிவனை நினைப்பேன். நினைத்ததும் ஆச்சிரமத் தரிசனம் கிடைக்கும் என்றவன்’’ என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1558. தானந்தி சீர்மையுட் சந்தித்த சீர்வைத்த**
**கோனந்தி யெந்தை குறிப்பறி வாரில்லை**
**வானந்தி யென்று மகிழும் ஒருவற்குத்**
**தானந்தி யங்கித் தனிச்சுட ராமே.**

‘‘சிவனடியார்களே, ரவீந்திரன் கதிரேசனை வணங்கியதைக் கண்ட நவநீதன் திகைத்துப் போனான். பாடசாலை வாசல் எப்பக்கம் இருக்கிறது என்று தெரியாத கதிரேசனின் பாதங்களைத் தொட்டு வணங்கியதை அவனால் நம்ப முடியவில்லை அவ்வளவு சக்தி அவரிடம் இருக்கிறதா..? அதனால் தான் மக்களெல்லாம் அவரை மதித்து வணங்குகிறார்களா என நினைத்துத் தான் இவ்வளவு காலமும் அவரைக் கேலிசெய்ததை நினைத்து வருந்தினான். பின் அவரின் அருகே சென்று, ‘‘ஐயா, தெரியாத்தனமாகத் தங்களது பெறுமதியை உணராமல் நிந்தித்து விட்டேன். இனி உங்களையே குருவாக நினைத்து வாழ்வேன்’’ என்றான். அதை எதிர்பாராத கதிரேசன் தடுமாறிப் போனார். பின் சொன்னார், ‘‘நவநீதா, சிவபெருமானானே விளங்கும் நந்தி யெம் பெருமான் வகுத்தருளிய சீலம் நோன்பு செறிவு அறிவு என்றும் இறவாத் தவமான நானெறியுள் அறிவு நெறியாகிய நன் நெறிக்கண்காணப் படுவதான திருவருள் முறைமையினை நல்கியருள்பவன் நந்தியாகிய சிவபெருமான். அவருடைய திருவடிக் குறிப்பினை அறிவாரில்லை. அவனருளால் அறிவார்கது அவன் மேலாகிய சிவன் எனக் காணப்படுவன். அவ் உண்மையினைக் கண்டு ஆவிகள் பெருமகிழ்வு கொள்ளும். அச்சிவன் இரவுவேளையில் விளங்கும் அருட் சுடர்த்திருவிளக் காகத் தோன்றுவன். எமது சமயம் மாதா பிதா குரு தெய்வம் என இயற்கையை வகைகப்படுத்தியுள்ளது. பெற்றோரையும் குருவையும் ஏற்றுக் கொள்ளா தவர் களால் தெய்வத்தைக் காணமுடியாது. அதனால் தான் நந்தி யெம்

பெருமானான சிவன் குருவாக எழுத்தருளி வருகிறார். குரு என்பவர் அறிவு நெறியைப் பின் பற்றுவதால் அவர் சிவ ஞானியாகி விடுவார். அவருக்கு எதுவும் தெரியாவிட்டாலும் எல்லாம் தெரிந்தவராகவே இருப்பார் என்று சொன்னவர்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1559. திருவாய சித்தயும் முத்தியும் சீர்மை**
**மருளா தருளும் மயக்கறும் வாய்மைப்**
**பொருளாய வேதாந்த போதமும் நாதன்**
**உருவாய் அருளா விடிலோர ஒண்ணாதே**

‘‘சிவனடியார்களே, நமசிவாயகம் நவநீதனுக்குச் சொன்னார், ‘‘எதிலும் ஐயம் தோன்றினால் தான் உண்மை துலங்கும். மென்மையை அறிந்து கொள்ளலாம். உனக்குத் தோன்றிய ஐயத்தை நீ அறியாமை காரணமாகக் குடித்து விட்டு வீதியில் புலம்பினாய். அதைப் பெருந்தவறாக மக்கள் எடுத்துக் கொண்டனர். அதற்குக் காரணம் அவர்கள் உன்னைப் போல உண்மையை உணராமையே. அதையிட்டுக் கவலை கொள்ளாதே உன்னை உன் வழியில் திருத்தச் சிவன் வழிகோலியுள்ளான் என்றே நான் கருதுகிறேன் உனது பேச்சைக் கேட்டபவர் ஆச்சிரமத்திற்கு வந்து சொன்னமையால் அதன் மூலம் நீ உண்மையை உணர்ந்தாய். அது போதும். கிடைத்தற்கரிய திருவடிப்பேறும், வீடும் அவற்றின் சிறப்புக்களும் மயக்கமுறா வண்மை அருளுதலும் மெய்ப் பொருளை உணர்த்தி பொய்ப் பொருளில் கொண்டிருக்கும் மயக்கத்தைப் போக்கி அம் மெய்ப்பொருளை உள்ளவாறு உணர்த்தும் திருநான் மறைகளின் முடியும் அம்முடியாற் பெறப்படும் சித்தாந்த நுண்ணறிவும் சிவ குருவடிவமெருத்துச் சிவபெருமான் அருளாது விட்டால் எவராலும் உணரமுடியாது. இதை உணர்பவர்கள் தான் மெய்யடியார்கள் என்றவர்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1560. பத்தியம் ஞானயை ராக்கிய மும்பர**
**சித்தக்கு வித்தாஞ் சிவோகமே சேர்தலான்**
**முத்தியின் ஞான முளைத்தலால் அம்முனை**
**சத்தி யருள்தரில் தானெளி தாமே.**

‘‘சிவனடியார்களே, நமசிவாயகம் தொடர்ந்து சொன்னார், ‘‘சிவனிடத்து வைக்கும் பக்தியின் விளைவாகத் திருவடி உணர்வும் அவ்வுணர்வால் உண்டாகும் வைராக்கியம் என்னும் உறுதியும் திருவடிப் பேற்றிற்கு வாயிலாரும். இதனால் அவன் நான் ஆவேன் எனக் கருதுவதாகிய பாவனை ஏற்படும். அப்பாவனையால் சிவனே யாவன். அதனால் வீடு பேற்றிற்கு வித்தான திருவடி உணர்வு தோன்றும். அவ்

மெய்உணர்வுத் தோற்றம் திருவருளின் வழியாகக் கிடைக்கப் பெறுதவால் எளிதான ஒன்றாகிவிடும். இது தான் நடை முறை. இதை நன்கு அறிந்தமையால் சொன்னேன். நேற்று இவற்றை யெல்லாம் நம்பாத நீ இன்று முதல் திருந்தியவனாகிறாய் என நினைத்துச் சொன்னேன். முதலில் உனது மனைவியை ஏற்றுக்கொள். உனது பெற்றோர் உனது விரும்பத்தை ஏராது உனக்குத் தீமை செய்தாலும் அந்தப் பெண் எதுவும் அறியாதவள். ஓர் சிவனடியான் ஓர் உயிருக்கும் துன்பம் சொய்தல் கூடாது. அப்படிச் செய்வது சிவனுக்குச் செய்யும் துரோகமாகும் என்றவர்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1561. இன்னெய்த வைத்ததோர் இன்பப் பிறப்பினை**
**முன்னெய்த வைத்த முதல்வனை எம்மிறை**
**தன்னெய்துங் காலத்துத் தானே வெளிப்படு**
**மண்ணெய்த வைத்த மனமது தானே.**

''சிவனடியார்களே, தொடர்ந்து நமசிவாயகம் சொன்னார், ''நாம் அடைந்த சிறப்புக்களுக் கெல்லாம் காரணமாக இருப்பவன் எம் தலைவனாகிய சிவபெருமான். அதனால் அவனே தலைவன் என்று வழிபடல் வேண்டும். அவனது திருவடியை ஆருயிர்கள் அடையும் காலத்தில் அச் சிவன் தானே வெளிப் பட்டு அருள்வன். அதற்குக் காரணமாக இருப்பது மனம். மனத்தூய்மை சிவனை ஆட்கொண்டு வெளிப் படவைக்கும். தூய்மையான மனம் ஏனைய கருவிகளின் செயற்பாட்டைத் தூய்மைப் படுத்தித் தலைவனாகச் செயற்படும் இந்நிலை உண்டாக மெய்யான பக்தி கொள்ளல் வேண்டும் என்றவர்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1562. சிவமான ஞானந் தெளியவொண் சித்தி**
**சிவமான ஞானந் தெளியவொன் முத்தி**
**சிவமான ஞானஞ் சிவபரத் தேயேகச்**
**சிவமான ஞானஞ் சிவானந்த நல்குமே.**

'' சிவனடியார்களே, நமசிவாயம் தொடர்ந்து சொன்னார், ''அடியவர்களே மனதை அடக்குவதென்பது மிகமிகச் சிரம மானவிடயம். பழக்க தோசத்தால் அது கட்டுப்பட மறுக்கும். மனத்தைக்கட்டுப் படுத்தச் சிவனைப் பிரார்த்தித்து அவனிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்து விட்டு என்செயல் எதுவுமில்லை என்றவைராக்கியத்தை உண்டுபண்ணல் வேண்டும். இந்த வைராக்கியம் இலகுவாக ஏற்படாது. பலகாலம் முயல வேண்டும். சிவமாக்கும் திருவடியுணர்வு சிவஞானம் எனப்படும். சிவஞானம் என்பது திருவருள். சிவஞானமான திருவருளால் ஆருயிர்களின் அறிவு தெளிவடைந்து உறுதி பெறும். அறிவு தெளியத்தெளிய சித்திகள் கைகூடும். பற்றுறுதியாகிய வீடு பேறும் உண்டாகும். இதனால். சிவம் தானாதல் என்ற நிலை

உண்டாகும். இதைத்தான் மெய்யடியவர்கள் விரும்புகிறார்கள். இந்நிலை அடைய சிவனைப் பற்றிப் பிடித்தல் வேண்டும்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1563. அறிந்துணர்ந் தேனிவ் வகலிட முற்றுஞ்**
**சேறிந்துணர்ந் தோதித் திருவருள் பெற்றேன்**
**முறந்தொழிந் தேன்மதி மாண்டவர் வாழ்க்கை**
**பிறிந்தொழிந் தேனிப் பிறவியை நானே.**

'' சிவனடியார்களே, நமசிவாயகம் அடியார்களுக்குச் சொன்னார், ''நவநீதனைக் குறை சொல்லாதீர்கள். ஒரு காலத்தில் நானும் அவனைப் போலத் தான் இருந்தேன். போலித்தனமான செயல்களை உண்மையென எண்ணித் துன்பப் பட்டபோது தான் கதிரேசன் என்ற சிவனடியாரின் நட்புச் சிவனருளால் கிடைத்து. அதனால் ஆச்சிரமத்திற்கு வந்தேன் ஆனால் மனம் நிம்மதியடையவில்லை. உலக விடயங்கள் என்னை முழுமையாகத் துன்புறுத்தின. அதனால் ஆச்சிரமத்தை விட்டு வெளியேறவும் முயற்சித்தேன். படிப்படியாக மனம் நிம்மதியடைய திருவளின் துணையால் உலகின் தன்மையை அறிந்து உணர்ந்தேன். சிவனின் மீது அன்பு வைத்துத் திருமுறைகளையும் சிந்தாந்த நூல்களையும் ஒதி உணர்ந்தேன். அதனால் திருவருள் கை கூடியது. சிவனது திருவடியை நினைக்கும் சிறந்த அறிவு இல்லாதவர்களின் பெரு வாழ்வையும் மறந்து விட்டேன். அதனால் எனது மனச்சோர்வு நீங்கியது. இனிச்சிவனது திருவடியை அடைவதையே நோக்கக் கொண்டு செயலாற்றி வருகிறேன். ஆகையால் மனிதர்கள் பற்றற்று வாழப்பழகுவதோடு சிவனை நினைத்தால் யாவும் படிப்படியாக வந்து சேரும். என்றவர்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

## 2 திருவடிப்பேறு

**1564. இசைந்தெழும் அன்பில் எழுந்த படியே**
**பசைந்தெழும் ஈசரைப் பாசத்துள் ஏகச்**
**சிவந்த குருவந்து சென்னிகை வைக்க**
**உவந்த குருபதம் உள்ளத் துவந்ததே**

'' சிவனடியார்களே, அன்று சிவராத்திரி தினம். அதனால் ஏராளமான பக்தர்கள் வந்திருந்தனர். நாம் ஆச்சிரமத்திற்கு விசேடமாக யாரையும் அழைப்பதில்லை. பெரும் முன்னனிப் பேச்சாளர்கள் பேசியதையே பேசுகிறார்கள். நாயன்மாரின் கதைகளைக் கூறுகிறார்கள். நூல் ஒன்று வெளியிடலாமென நினைத்து பெரியவர்களிடம் ஆக்கங்களைக் கேட்டால் முன்பு சஞ்சிகைகளுக்கு எழுதிப் பிரசுரிக்கப்பட்டவற்றைத் தருகிறார்கள். அதனால் நாம் எமது ஆச்சிரமப்

பேச்சாளர்களையே விசேட தினங்களிலும் பேச அழைப்போம். அவர்கள் புதிய விடயங்களை மக்களின் விருப்புக்கிணங்கப்பேசுவர். அன்று நமசிவாயகம் உரையாற்றினார்,'' அடியார்களே, இன்று சிவராத்திரி நாள். சிவனின் பெருமை மிக்க நாள். சிவராத்திரியைப் பற்றிய வரலாறு கதைகள் யாவும் உங்களுக்குத் தெரியும் அதனால் திருவடிப்பேறு பற்றி உங்களோடு கலந்துரையாடுகிறேன்''

''அடியவர்களே, மெய்யுணர்வை அடைந்த மெய்யடியார்களை இன்று சிவபெருமான் மிக்க மகிழ்வுடன் வரவேற்று சிவ உலக வாசியாக்கிக் கொள்வார். இன்று புனிதர்களின் நாள் திருவருளைப் பெற்ற மெய்யடியார்களுக்கு உதவ அன்புருவாக எழுந்தருளி அருளும் சிவபெருமான், மேலும் மேலும் வளரும் அன்பின் வழிச்சென்று வழிபடுவோரை ஆட்கொள்ளும் நாள். இந்நாளில் சிவபெருமான் சிவகுருவாக எழுந்தருளி மும்மலங்களையும் அகற்றுவார். அகற்றித் தன் திருக்கையை உச்சியின் கண் வைத்தருள்வார். அருளவே அவரின் திருவடி ஆவிகளின் உள்ளத்தில் பொருத்தி வெளிப்பட்டு அருளும். அதனால் தான் இன்று விடியும் வரை விழித்திருந்து சிவபெருமானைத் தொழுது அவரது திருவடியை எம்மீது பதிக்குமாறு வேண்டுகிறோம் என்றவர்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1565. தாடந்த போதே தலைதந்த[1] எம்மிறை**
**வாடந்த ஞான வலியையுந் தந்திட்டு**
**வீடந்த மின்றியே யாள்கென விட்டருட்**
**பாடின் முடிவைத்துப் பார்வந்து தந்ததே.[2]**

'' சிவனடியார்களே, நமசிவாயம் தொடர்ந்து உரையாற்றினார், '' அடியார்களே, எமது தலைவனான சிவபெருமான் தனது திருவடியினை எம் உள்ளத்தில் பதித்தவுடன் இதுவரை பொறிபுலன்களுக்கு அடிமைப்பட்டுக்கிடந்த நாம் அவைகள் எமக்கு அடிமைப்படும்படியான நிலையை அவன் உருவாக்குவான். முடிவில்லாத திருவடிப்பேற்றினையும் தந்தருள்வான். திருவருளால் தனது திருவடியை வெளிப்பட்டுச் சிவகுருவாய் எழுந்தருளி வந்து எம்முடிமேல் தன் திருவடியை வைத்தருள்வான். உங்களுக்குத் தெரியும் சில மாதங்களுக்கு முன்பு ஆச்சிரமத்தில் குழப்பம் செய்த நவநீதன் இப்போது சிவனை உணர்ந்துதிருவளின் அருளைப் பெற்று மெய்யடியவராகி விட்டான். முன்பு ஐம்புலன்களும் அவனை அடிமைப்படுத்தியமையால் அவன் புலன்களின் கட்டுப்பாட்டில் இருந்து புலன்கள் ஏவுவதைச் செய்து கொண்டிருந்தான். இப்போது திருவருளின் துணையால் புலன்கள் ஐந்தையும் கட்டுப்படுத்தியதால் அவன் புலன்களின் தலைவனாகி விட்டான். அதனால் திருவருள் மயப்பட்ட அவன் திருவருள் ஏவுவதையே செய்கிறான். என்றவர்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

1566. **தானவ னாகிச் சொருபத் துவந்திட்டு**
**ஆன சொருபங்கள் நான்கும் அகற்றின**
**ஏனைய முத்திரை யீந்தாண்ட நன்னந்தி**
**தானடி முற்சூட்டித் தாபித்த துண்மையே.**

" சிவனடியார்களே, நமசிவாயகம் தொடர்ந்து பேசினார், "சிவ பக்தர்களே திருவருளின் அருளால் ஆருயிர் சிவமாகிச் சிவனது உண்மை நிலையை அறிந்து இன்பநிலையில் நிற்கும். அப்பொழுது மல மாயை கன்மம் மாயேயம் என்பவற்றின் இயல்புகள் நீக்கும். அப்போது சிவனது திருவடிக்கு அடிமை என்ற நிலை உண்டாகும். அந்நிலையில் நந்தி யெம்பெருமான் அடையாளப் பொறியினை நல்கி ஆண்டருள்வான். அப்போது சிவபொருமான் திருவடி சூட்டி ஆருலிள்களை அருள்வழியில் நிலைப்பித்து மெய்மைப் படுத்துவான். அதன் பின் ஆருயிருக்கு உலக நினைப் பிராது. அதன் செயல்களெல்லாம் சிவனின் செயவாகவே இருக்கும் என்றவர்" என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1567. உரையற் றுணர்வற் றுயிர்பர மற்றுத்**
**திரையற்ற நீர்போல் சிவமாதல் தீர்த்துக்**
**கரையற்ற சத்தாதி நான்குங் கடந்த**
**சொரூபத் திருத்தினன் சொல்லிறந் தோம்**[3]

" சிவனடியார்களே, நமசிவாயகம் தொடர்ந்து பேசினார், " சிவபக்தர்களே, திருவருளின் அருளால் ஆருயிர் சிவமாகிச் சிவனது உண்மை நிலையை அறிந்து இன்பநிலையில் நிற்கும். அப்பொழுது மலமாயை கன்மம் மாயேயம் என்பவற்றின் இயல்புகள் நீங்கும். அப்போது சிவனது திருவடிக்கு அடிமை என்ற நிலை உண்டாகும். அந்நிலையில் நந்தியெம்பெருமான் அடையாளப் பொறியினை நல்கி ஆண்டருள்வான். அப்போது சிவபெருமான் திருவடி சூட்டி ஆருயிர்களை அருள் வழியில் நிலைப்பித்து மெய்மைப்படுத்துவான். அதன் பின் ஆருயிருக்கு உலக நினைப்பேவராது. அதன் செயல்களெல்லாம் சிவனின் செயலாகவே இருக்கும் என்றவர். " என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1568. குரவன் உயிர்முச் சொருபமுங் கைக்கொண்டு**
**அரிய பொருள்முத் திரையாகக் கொண்டு**
**பெரிய பிரானடி நந்தி பேச்சற்று**
**உருகிட என்னையங் குய்யக்கொண் டானே**

“ சிவனடியார்களே, சிவகுருவாக எழுந்தருளும் சிவபெருமான் ஆருயிர்களின் பருமை நுண்மை முன்மை ஆகிய மூன்று வகையான உடம்புகளையும் இரவலை ஏற்பது போன்று தன்னுடமையாக ஆக்குகிறான். ஆவியும் உடலும் உடைமை எல்லாமும் காணிக்கையாக்கிக் கொள்வான். சிவபெருமானின் திருவடியைப் பெற்ற நந்தியெனும் பெருமான் என்னை உய்யக்கொண்டளினான். அதனால் செயலற்று உள்ளம் உருகிக் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகபள்ளத்தில் செல்லும் வெள்ளம் போல மனம் அமைதியடைந்தது. அதனால் சிவனை நாடுகள். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1569. பேச்சற்ற இன்பத்துப் பேரானந் தத்திலே**
**மாச்சற்ற என்னைச் சிவமாக்கி மாள்வித்துக்**
**காச்சற்ற சோதி கடன்மூன்றுங் கைக்கொண்டு**
**வாச்ச புகழ்மாளத் தாள்தந்து மன்னுமே.**

“ சிவனடியார்களே, பேரின்பத்தைத் தரும் திருவடியில் உயிரை ஒடுங்கச் செய்து, உரிமையற்ற அடிமையாக்கி உயிரைச் சிவமாக்குதலாகிய பேரின்பப் பெரு வாழ்வைக் கொடுத்தருளுவான். இதனால் பிணிப்புத்தன்மையாகிய பசுத்துவம் அழியும். அழிந்தவுடன் திருவருள் வெளிப்படும். வெளிப்பட்டு உள்ளம், உரை, உடல் என்னும் முக்கருவிகளாலும் இயற்றப்படும் படர்தல் பாடல் பாடும் இடத்தில் (பணிதல்) ஆகிய மூன்று திருத்தொண்டுகளையும் கைக்கொண்டொழுகும் அருள் கிடைக்கும். பிணிமுனைப்பால் எழும் தற்புகழ்ச்சியினை அழித்து திருவடியைத் தந்து என்றும் ஒன்று போல நின்று நிலை பெறச் செய்யும். இவ்வாறான மேன்மையான தகவல்களைச் சிவனது ஒளி பிரகாசித்து அருள் பொழியும் இந்நன்நாளில் நான் உங்களுக்குச் சொல்லப் பெரும்பேறு பெற்றிருத்தல் வேண்டும். அது போலச் சிவகுருவைப்பற்றி நீங்கள் அறியச் சிவனருள்கூடியிருக்கிறது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1570. **இதயத்தும் நாட்டத்தும் என்றன் சிரத்தும்**
**பதிவித்த பாதப் பராபரன் நந்தி**
**கதிவைத்த வாறும்மெய் காட்டிய வாறும்**
**விதிவைத்த வாறும் விளம்பவொண் ணாதே.**

“ சிவனடியார்களே, அடியேனான எனது உள்ளத்திலும் மெய்யடியார்களின் உள்ளத்திலும் கள்ளமில்லாக் கண்ணகத்தும் உச்சியிலும் தன்னுடைய பெருமை மிக்க பேரின்பம் தரும் திருவடியைப் பதிப்பித்த தேவர்கள் அனைவரும் போற்றித் தொழுகின்ற நந்தியென்னும் பெருமான் திருவடிப்பேற்றைத் தருவதற்காக சிவகுருவாய் எழுந்தருளி வந்து மெய்ப்பொருளை உணர்த்தித் திருமறை, திருமுறைகளாகிய செந்தமிழ் வேதாக முறைப்படி உயிர்களின் கட்டறிவு, சுட்டறிவுடன்

வெளிப்படுத்தி அருளுவதை விபரிக்க முடியாது. ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1571. திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந்
தருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குந்
திருவடி ஞானஞ் சிறைமல மீட்குந்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே**

“ சிவனடியார்களே, அவன் அருளால் தான் அவனது திருவடியைச் காண முடியும். வேறு எவ்வகையாலும் காண முடியாது. இன்றைய தினம் சிவராத்திரி. புனிதமான நாள். சிவன் சோதிப்பிழம்பாகத் தோன்றிய நாள். அதனால் இன்று இருதய சுத்தியுடன் வழிபடுபவர்களுக்குச் சிவனின் அருள் கிட்டும். குருவாக எழுந்தருளும் நந்தியென்னும் பெருமான் அடியார்களின் முடியில் தனது திருவடியை வைத்தருளலும் திருக்கடைக்கண் நோக்கியருளலும் செய்தருளித் தனது பெருவடிவமாகிய சிவ நிறைவினைத் தந்தருளுபவன். இரண்டும் முறையே திருவடித்தீக்கை, திருநோக்கல் தீக்கை எனவும் கூறப்படும். அதனால் நந்தி யெம் பெருமான் மெய்யடியார்களின் உள்ளத்தில் தோன்றிக் குருவாக வருவான். அவன் தான் பிறப்புக்கு ஏதுவாகிய கருவை அழிப்பவன். அவனே தலைவன். அவனே அரசன். அவனருளால் அவனது திருவடியைக் காணுங்கள். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1572. திருவடி ஞானஞ் சிவமாக்கு விக்குந்
திருவடி ஞானஞ் சிவலோகஞ் சேர்க்குந்
திருவடி ஞானஞ் சிறைமல மீட்குந்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே**

“ சிவனடியார்களே, திருவடியுணர்வு ஆருயிர்களை மும்மலப்பிணிப்பில் இருந்து விடுவிக்கும். மலங்கள் நீங்கினால் கிடைத்தற்கரிய திருவடிச் சித்திகள் பலவும் வந்து சேரும். அதுவே சிவ உலகவாழ்விலும் சேர்ப்பிக்கும் அவ்வுணர்வு சிவமாம். பெரு வாழ்வையும் தரும் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1573. மேல்வைத்த வாறுசெய் யாவிடின் மேல்வினை
மால்வைத்த சிந்தையை மாயம தாக்கிடும்
பால்வைத்த சென்னிப் படரொளி வானவன்
தாள்வைத்த வாறு தரிப்பித்த வாறே.**

“ சிவனடியார்களே, திருவருளின் ஆனையின் படி ஆருயிர்கள் செம்மையாக வாழாவிட்டால், பண்டைய பழம் வினைகளாகிய எஞ்சு வினைகள் உள்ளத்தை மயக்கி ஆசைகளை மனதில் உருவாக்கி பிறப்பு இறப்புக்களை உண்டாக்கும். பால் போன்ற பிறையினைச் சூடிய திருமுடியினை உடைய சிவபெருமானின் திருவடியை வணங்கவும் செந்நெறிக் கண்வாழவும் வழிவகுப்பது திருவருளே ”

“ சிவனடியார்களே, ஒரு காலத்தில் ஆணவமலத்தின் தாக்கத்தினால் அங்கயன் பலரோரும் பிரச்சினைப் பட்டுக்கடவுளையும் நிந்தித்தவன். திருவருளின் அருளால் ஆச்சிரமத்திற்கு வந்து இப்போ சிவனடியாராகி விட்டான். ஒவ்வொரு வரும் சிவ நினைப்போடு ஒழுக்கமாக வாழாவிட்டால் மலத்தின் தாக்கம் அதிகரித்து வேண்டா தவற்றை யெல்லாம் செய்யத்துண்டி பல்வேறு துன்பங்களைத் தரும். ஆசைகளை

அறுத்துச் சிவனது திருவடியைத் தியானிக்க தொடங்கிய பின் அங்கயனது போக்கு மாறியதை நீங்கள் அறிவீர்கள், முன்பு அடிதடியில் ஈடுபடும் அவன் இப்போ அடிவாங்கிக் கொண்டு வருகிறான். கேட்டால் முன் வினைப் பயன் என்கிறான். வைரத்தை வைரத்தால் வெட்டுவது போலத் திருவருளைத் திருவருளால் தான் அடையலாம். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1574. கழலார் கமலத் திருவடி என்னும்**
**நிழல் சேரப் பெற்றேன் நெடுமால் அறியா**
**அழல்சேரும் அங்கியுள் ஆதிப் பிரானுங்**
**குழல்சேரும் மின்னுயிர்க் கூடுங் குலைத்ததே.**

“ சிவனடியார்களே, திருமூலர் தனக்கேற்பட்ட அனுபவத்தைப் பின்வருமாறு கூறுகிறார், “ கழல் அணிந்துள்ள செந்தாமரைப் பூவை ஒத்த திருவடி நிழலை அடையப் பெற்றேன். மேலும் திருமாலும் காணமுடியாதவாறு அனல் வண்ணமாக வெளிப்பட்டு நின்றவன் சிவபெருமான். அவனே உயிர்க்கு உயிராக நிற்பவன். அவ்வாறு நின்றருளும் சிவன் அம்மையோடு சேர்ந்து அம்மை அப்பனாகத் திகழ்பவன். அவன் உயிருக்கு உயிராய் உணர்வின் கண் திகழ்பவன். அந்நிலையில் எனது உயிர் தனது நிலைக்களமாக இருந்த உடலை நீக்கியது, நான் சிவனது திருவடி நிழலில் இருக்கிறேன் என்கிறார் திருமூலர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1575. முடிமன்ன ராய்மூ வுலகம தாள்வர்**
**அடிமன்னர் இன்பத் தளவில்லை கேட்கின்**
**முடிமன்ன ராய்நின்ற தேவர்கள் ஈசன்**
**குடிமன்ன ராய்க் குற்ற மற்றுநின் றாரே.**

“ சிவனடியார்களே, உலகை ஆளும் மன்னர்களாக இருத்தாலும் சிவனடியார்கள் பெறும் மாறாத இன்பம் அவர்களுக்கு இல்லை. மன்னர்கள் பெரும் யாகங்கள் செய்தும், புண்ணியங்கள் சொய்தாலும் தேவராவரே தவிரப் பிறவாத நிலையை அடையார். தேவர்களுக்கு முப் பிறப்புண்டு, அத்துடன் சிவனடியார்கள் திருவடி இன்பத்தை இம்மையிலேயே அனுபவிப்பர். சிவனது அடிமையாக வாழும் அடியவர்கள் ஆறு பகையையும் வென்று ஐம்புலன்களை அடக்கி நானெறி ஒழுகி மும்மலக் குற்றங்களை அகற்றி, பிறப்பை அறுத்து சிவனோடு வாழ்வர் ”

“ சிவனடியார்களே, ஒரு பட்டணத்தில் அரசனைப் போலச் சகல வசதிகளோடும் பரராசசேகரன் என்பவர் வாழ்ந்து வந்தார். அவ்வூருக்கு யார் வந்தலும் அவரைச் சந்தித்து அவரிடம் ஆசிபெறுவர். ஊரவர் அவரைத் தெய்வமாக மதித்தனர். அந்தப் பட்டணத்தில் உள்ள சிவன் கோவிலுக்கு நம்மநமசிவாயகம் சென்றார். கோவிலுக்குச் சென்ற போது குருக்கள் சொன்னார், “ யார் இந்த ஊருக்கு வந்தாலும் பராசசேகரன் வீட்டுக்குச் சென்று அவரை வணங்கி ஆசி பெற்ற பின்பு தான் கோவிலுக்குக் கூட வருவார்கள். அதனால் கோவிலுள் வருமுன் அவரைச் சென்று சந்தியுங்கள் ” என்றார். அதற்கு நமசிவாயகம் சொன்னார், “நான் சிவனைத் தவிர யரையும் வணங்குவதில்லை, ஆசி பெறுவதும் இல்லை,” என்று கூறி உள்ளே சென்றார். உள்ளே இருந்தவர்கள் அவரைத் தடுத்தனர். நமசிவாயகம் சொன்னார்,” “ சிவனில் பார்க்க அவர் பெரியவராகி விட்டாரா? சிவனைத் தரிசிக்க வந்தேன். தரிசிக்காது செல்லமாட்டேன். நீங்கள் உள்ளே விடா விட்டால் நான் அவரை அழைத்துச் சென்று

விடுவேன் ” என்று கூறிச் சென்றுவிட்டார். அதன் பின் மூலத்தானத்தின் கதவு திறக்கப்படவில்லை எவ்வளவோ முயன்றும் திறக்கப்படவில்லை. ஊர்ப் பெரியவர் ஒருவர் நமசிவாயகத்தை அழைத்து வர அவர் உள்ளே செல்லக் கதவு திறபட்டது. அதைக் கண்டு பயந்த பரராசசேகரம் நமசிவாயகத்தின் பாதங்களைத் தொட்டு வணங்கினார். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1576. வைத்தேன் அடிகள் மனத்தினுள் ளேநான்**
**பொய்த்தே யெரியும் புலன்வழி போகாமல்**
**எய்த்தேன் உழலும் இருவினை மாற்றிட்டு**
**மெய்த்தேன் அறிந்தேனவ் வேதத்தின் அந்தமே.**

“சிவனடியார்களே, திருமூலர் தொடர்ந்து தனது அனுபவத்தைச் சொல்கிறார், “ திருவருளால், சிவனது திருவடியிடத்தில் உள்ளம் வைத்தேன். அதனால் சிவனது அருட்கண்ணைப் பெற்றேன். அவ்வருட் கண்ணால் உண்மையை உணர்ந்து புலன்களின் விருப்புப்படி செயலாற்றாது விட்டேன். அதனால் பிறப்பும் இறப்பும் அற்ற நிலைக்கு உள்ளானேன். அதனால் தேன் போன்ற திருவடி இன்பத்தைப் பெற்றேன். அத்தேனே உண்மை அறிவின் முடிபாகும். என்று திருமூலர் கூறியுள்ளார். இதை அடிக்கடி நமசிவாயகம் சொல்வார். நாம் தேனை உண்கிறோம். அதை விட இனிப்பானது சிவனது திருவடி தரும் இன்பம். சிவனை நினைத்தால் நேரம் போவது தெரியாது. அவ்வகையான தொரு இன்பம் உள்ளத்தில் எழுந்து இனிக்கும் என்று அடிக்கடி உங்களுக்குச் சொல்பவர். இன்று சிவராத்திரி. சிவன் மகிழ்வுடன் வரமளிக்கும் நாள். பெருந்தொகையான அடியார்கள் சிவ இன்பம் பெற வந்துள்ளீர்கள். கண்களை மூடிக்கொண்டு ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதுங்கள். மனதை ஒரு நிலைப்படுத்துங்கள். நாம் சொல்லும் சிவனது பெருமைகள் உங்கள் காது வழியாக மனதில் படியும். அப்படிப் படியும் போது சிவனது திருவடிமனதுள்த் தோன்றும் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1577. **அடிசார லாம்அண்ணல் பாத மிரண்டும்**
**முடிசார வைத்தனர் முன்னை முனிவர்**
**படிசார்ந்த இன்பப் பழவடி வெள்ளக்**
**குடிசார் நெறிகூடி நிற்பவர் கொள்கையே**

“சிவனடியார்களே, இன்று புனிதமான நாள். சிவனும் அம்மையும் மிகுந்த மகிழ்வுடன் இருப்பர். ஏனென்றால் இன்று சிவ ஆலயங்களில் சிவனுக்கு விசேட ஆராதனைகள், பூசைகள் , அபிசேகங்கள் நடைபெறும். அதனால் மிகுந்த மகிழ்வுடன் இருக்கும் சிவன் அடியவர்களின் விருப்பத்தை நிறை வேற்றுவார். ஆகையால் மெய்யடியார்கள் திருவருளின் துணையால் அவனது திருவடியைச் சேர்வர். உடல் முழுவதும் நீறு பூசிய முனிவர்கள் சிவபெருமானது திருவடியை தம் முடிக்கு அணியாக அணிவர். சிவபெருமான் மீது தீராதபற்றுக் கொண்ட மெய்யடியார்கள் திருவடியை இடையறாது தொழுது பேரின்பம் காண்பர். அதனால் அன்பர்களே, மெய்ப்பொருளான சிவனை பற்றுக்கள் அற்றுத் தமிழ் மந்திரமான ஐந்தெழுத்தை மனதுள்ச் சொல்லுங்கள். உங்கள் புலன்கள் ஐந்தும் சிவமயமாகட்டும். அப்படிச் சிவமயமானால் மனதில் சிவ எண்ணங்களைத் தவிர வேறு எதுவும் நுழையாது” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

1578. **மந்திர மாவதும் மாமருந் தாவதுந்**
**தந்திர மாவதுந் தானங்க ளாவதுஞ்**
**சுந்தர மாவதுந் தூய்நெறி யாவதும்**
**எந்தை பிரான்தன் இணையடி தானே.**[1]

‘‘சிவனடியார்களே, அம்மையப்பரின் இணையடிகள் உடல்நோய், உளநோய், ஊறுபகை, பிறப்பு முதலிய எல்லா வகையான துன்பங்களையும் முழுமையாக அகற்றும் மந்திரமாகும். அதுவே பிணிகளைத் தீர்க்கும் அருமருந்தும் ஆகும். அதுவே நூல்கள் உணர்த்தும் உயர்ந்த கருத்துக்களுமாகும். உயர்ந்த அறிவூட்டும் பேரொலியுமாகும். உயிர், உணர்வு, உள்ளம், உடை, உடல், உறையுள் ஆகியவற்றைத் தருவதுமாகும். சிவனது திருவடியைச் சேர்க்கும் புனிதமான மந்திரமும் ஆகும். சிவயநம என்பது ஆவியின் அருஞ்சொத்தாகும். அதை ஓத ஓத திருவடியின்பம் பெருகும் என்று சுந்தர மூர்த்தி சுவாமி சொல்ல நவநீதன் எழுந்து சொன்னான், ‘‘சுவாமி சொல்வது உண்மை. அதை அனுபவத்தால் உணர்ந்தவன் நான். இது தேன் தேன் என்று சுவாமி சொன்ன போது அது நஞ்சு நஞ்சு என்றேன். இன்று திருவருளால் சுவாமி சொன்னவற்றைக் காண்கிறேன். இந் நன்நாளில் சிவனை நினையுங்கள். அந்த நினைவு உங்களுக்குத் திருவடியாகிய தேனைத் தரும்’’ என்று சொல்லும் போது அடியார்கள் அரோகரா எனக்கோசமெழுப்பினர்’’ என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

## 03. ஞானதுரு ஞானஞேயம்
### (காண்பான், காட்சி காட்சிப்பொருள்)

1579. **நீங்காச் சிவானந்த ஞேயத்தே நின்றிடப்**
**பாங்கான பாசம் படரா படரினும்**
**ஆங்கார நீங்கி யதனிலை நிற்கவே**[2]
**நீங்கா அமுத நிலைபெற லாமே.**

‘‘ சிவனடியார்களே, ஆருயிர்களை என்றும் விட்டு நீங்காது அருளால் உணரப்படும் முழுமுதற்சிவத்தின் திருவடியை அழுத்தி நின்றால் புல்லுமலமான ஆவணப்பசை தொடராது. சிலவேளை தொடர நேர்ந்தால், திருவருளின் துணையால் ஆங்காரம் நீங்கி திருவருளின் அருளால் சிவநினைப்புடனே மெய்யடியார்கள் வாழ்வர். அப்படி நின்றால் பேரின்பப்பெருவாழ்வு வந்து சேரும்’’

‘‘ சிவனடியார்களே, நவநீதன் முன்பு வாழ்ந்த அந்த நெறி தவறிய வாழ்வை மறந்து விட்டான். எந்நேரமும் சிவ நினைவுடன் இருக்கும் அவனை அவனது தீய நண்பர்கள் அடிக்கடி சந்தித்துக் கெடுக்க நினைத்தனர். குடும்பத்துடன் மகிழ்வில்லாமல் வாழ்ந்த அவனது வருமானம் முழுவதையும் உண்டு மகிழ்ந்த அவனது நண்பர் பெரும் துயரமடைந்தனர். அவனைப் எப்படியாவது மாற்ற வேண்டும் என்று நினைத்து அவனது வீட்டுக்குச் சென்றனர். வெளியே இருந்த மனைவி முன்பென்றால் அவன் வீட்டில் இருந்தாலும் இல்லை என்று சொல்லிவிடுவாள். அன்று அவர்கள் வந்த போது மிக்கமகிழ்வுடன் வரவேற்று அவர் உள்ளே இருக்கிறார் சென்று சந்தியுங்கள்’’ என்றாள். அதைக்கண்ட அவளது சகோதரி சொன்னாள், ‘‘ ஏன் அப்படிச் சொன்னாய்..? அவர்கள் தவத்தைக்கெடுத்து விடுவார்கள்’’ என்று அதற்கு அவள் சொன்னாள், ‘‘ அவர் முன்பு போல இல்லை

இப்போது அவரது மனம் சிவனைத் தவிர வேறு எதிலும் நிலைப்பதில்லை. அதனால் அவர் முழுமையாக மாறிவிட்டர். திருவருளின் துணையால் அவரின் அகங்காரம் நீங்கி விட்டது. சிவ நினைவோடு வாழும் அவரை யாராலும் கெடுக்க முடியாது. அத்துடன் பொய் சொல்வது பாவம். அதனால் மலப்பசை அதிகரிக்கும் எவ்வேளையிலும் பொய் சொல்லக்கூடாதென்றவர். அதனால் தான் அவ்வாறு சொன்னேன் என்றவள்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

1580. **ஞேயத்தே நின்றோர்க்கு ஞானாதி நின்றிடும்**
**ஞேயத்தின் ஞாதுரு ஞேயத்தில் வீடாகும்.**
**ஞேயத்தின் ஞேயத்தை ஞேயத்தை யுற்றவர்**
**ஆயத்தின் நின்ற அறிவறி வாரே.**

'' சிவனடியார்களே, திருவருளின் துணையால் நேயமாகிய திருவடிப்பேற்றில் கலந்து நிற்பவர்களுக்கு முற்றுனர் வான சிவஞானம் நிலை பெறும். திருவடியுணர்வான திருவருள் அதற்கு உதவி செய்யும் அதனால் உயிர் தன் வீடான சிவபெருமானுடன் பிரிப்பின்றி நிற்கும். அத்தகைய திருவருட்பேற்றால் திருவடியைச் சார்வர். அவர்தான் சிவனடியார் திருக்கூட்டத்துடன் சேர்ந்து திருத்தொண்டுபுரியவர். அதுவே சிவனை அடையும் வழியாகும். அவர்கள் நிறைந்த அறிவுடையவராவர். ''

'' சிவனடியார்களே, நவநீதனது மனைவி தன் கணவனை நல்ல முறையில் அறிந்தமையால் தான் அப்படிச் சொன்னாள். சிறிதளவு சலனம் இருந்தாலும் அது பெரிதாகியாவற்றையும் கெடுத்து விடும் என்று அவளுக்குத் தெரியும். அவளது சகோதரியின் கணவன் அடிக்கடி தான் குடிக்கமாட்டேன் என்று சத்தியம் செய்வான். நாலைந்து நாட்களுக்குக் குடிக்காமல் வாழ்வான். பின் நண்பர்களுடன் சேர்ந்து குடித்துவிடுவான். நண்பர்கள் தெண்டித்தமையால் குடித்தேன் என்று அழுவான். இது தெரிந்ததால் தான் அவளது சகோதரி அப்படிச் சொன்னாள். ஆனால் நவநீதனின் மனைவி சிவன் மீது வைத்த அசைக்க முடியாத நம்பிக்கையால் தனது கணவனை நம்பினாள்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

1581. **தானென் றவனென் றிரண்டாகுந் தத்துவந்**
**தானென் றவனென் றிரண்டுந் தனிற்கண்டு**
**தானென்ற பூவை யவனடி சாத்தினால்**
**நானென் றவனென்கை நல்லதொன் றன்றே**

'' சிவனடியார்களே, இருவகையான அறிவுப் பொருட்களில் பேரறிவுப் பொருளாகிய அவன் என்றும், சிற்றறிவுப் பொருளாகிய தானென்றும் சொல்லப்படும் உண்மைப் பொருட்கள் இருவேறு வகையைச் சேர்ந்தவை. பேரறிவு என்பது தானே விளங்கும் தன்மை வாய்ந்த இயற்கையான அறிவு. சிற்றறிவு என்பது பேரறிவுடன் கலந்து விளக்க விளங்கும் இயற்கை அறிவு. அவன் சிவம். தான் ஆருயிர் என்ற இரு நிலைகளையும் ஆருயிர் அருளின் துணையுடன் தன் உணர்வில் காண்பதாகும்.கண்டவரின் ஆருயிர் தன்னை ஒரு பூவாக எண்ணி அப்பூவைச் சிவனது திருவடியில் சாத்தும். அப்படிச் சாத்தும் போது தான் அவன் என்று பேதம் மறைந்து விடும். இது சிவனின் அடிமை என்ற நிலையை உருவாக்கும். இந்த நிலை வந்த பின் முன் செய்த தீவினைகளோ, அதற்குக் காரணமானவர்களையோ உயிருக்குத்தெரியாது. அதனால் செய்த பிழைகளையும் செய்ய நினைத்த

பிழைகளையும் மன்னிக்கும்படி சிவனை வேண்டும்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

1582. **வைச்சன வாறாறு மாற்றி யெனைவைத்து**
**மெச்சப் பரன்றன் வியாத்துவ மேலிட்டு**
**நிச்சய மாக்கிச் சிவமாக்கி ஞேயத்தால்**
**அச்சங் கெடுத் தென்னை யாண்டனன் நந்தியே**

'' சிவனடியார்களே, உயிர்கள் சிவபெருமானைக் கூடுவதற்குத்துணைக்கருவிகளாக அமையும் முப்பத்தாறு மெய்களும் உயிரின் வழிச்செல்லாது உயிர்ரைத்தன் வழிஇழுத்துத் தடுமாற்றத்திற்கு உட்படுத்தித் தாம் தலைமை பெற்று நிற்கும். உயிருக்கு இவைகள் களையாகும். இக்களைகளை அகற்றி உயிரை மேம்படுத்துவது திருவருளாகும். அம்முறையே சிவனின் திருவடியைக் காணும் உயிரைத் திருவருள் நிலைப்பிக்கும். அப்போது உயிர் அடங்கிப்போம். செறிவு, வியாபகம், வியாத்துவம், சிவம் நிறைவாகிய வியாபக்மாக இருக்கும். அப்போது உயிர் சிவமாம் பெருவாழ்வு எய்தும் திருவடி உணர்வாகியஞேயத்தால் எனக்குள்ள பிறப்பு இறப்பாகிய அச்சத்தைக் கெடுத்து என்னை நந்தியாகிய சிவபெருமான் ஆண்டு கொண்டான். என்று திருமூலர் கூறுகிறார்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

1583. **முன்னை யறிவறி யாதஅம் மூடர்போற்**
**பின்னை யறிவறி யாமையைப் பேதித்தான்**
**தன்னை யறியப் பரனாக்கித் தற்சிவத்து**
**என்னை யறிவித் திருந்தனன் நந்தியே.**

'' சிவனடியார்களே, சிவ தீக்கை பெறுமுன், அறிய வேண்டிய உண்மைகளை அறியாதிருக்கும் அறிவில்லாதவர்களுக்குச் சிவதீக்கைக்குப் பின் அறிவறியாமை என்னும் இரண்டினையும் சிவன் அழித்து விடுவான். தான் ஆகிய உயிரை அறிய அவ் உயிரைச் சிவமாக்குவான். சிவமாக்கியதும் சிவத்துடன் கூடிய உயிர் தன்னையும் சிவத்தையும் காணும். அவ்வாறு காணச் செய்பவன் சிவபெருமான்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

1584. **காணாத கண்ணுடன் கேளாத கேள்வியுங்**
**கோணாத போகமுங் கூடாத கூட்டமும்**
**நாணாத நாணமும் நாதாந்த போதமுங்**
**காணா யெனவந்து காட்டினன் நந்தியே.**

'' சிவனடியார்களே, சிவபெருமான் உயிர்களுக்குக் காணாத கண்ணாகிய அருட் கண்ணைக் கொடுத்தருள்வான். மேலும் கேளாத கேள்வியாகிய அறிவையும் கொடுத்தருள்வான். குறைநிறைதலாகிய துன்பமில்லாத சிவ வாழ்வையும் தந்தருளினான். அடிமை நிலையை அருளினான். திருவடியுணர்வையும் தந்தருளினான். காணவேண்டிய எல்லாவற்றையும் கண்டு மகிழ்ச்சியடையென்று காட்டியருளினான். அவ்வாறு காட்டியருளியவன் நந்தியெம் பெருமானாவான்.'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

1585. **மோனங்கை வந்தோர்க்கு முத்தியுங் கைகூடும்**
**மோனங்கை வந்தோர்க்குச் சித்தியும் முன்னிற்கும்**
**மோனங்கை வந்தூமை யாமொழி முற்றுங்காண்**
**மோனங்கை வந்தைங் கருமமும் முன்னுமே.**

“ சிவனடியார்களே, மேலும் திருமூலர் கூறுகிறார், “ மோனம் கைவந்தவர்களுக்கு திருவடிப்பேறு கிட்டும். திருவருள்ப் பேறும் கை கூடும். அத்துடன் சொல்லிறந்த மறையாகிய சிகரமும் கைகூடும். இதையே அசபாமறை என்கிறார்கள். இவர்கள் சிவனின் அருளால் ஐந்தொழில்களையும் செய்வர்” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

1586. **முத்திரை மூன்றின் முடிந்தது மூன்றின்பால்**
**வைத்த கலைகால் நான்மடங் கான்மாற்றி**
**உய்த்தவத் தானந்தத் தொண்குரு பாதத்தே**
**பெத்த மறுத்தோர் பிறந்திற வாரே.**

“ சிவனடியார்களே, சீவதீக்கை பெற்ற மெய்யடியார்கள், பொறியாகிய முத்திரை மூன்றிணாலும் இடப்பால், வலப்பால் நடுநாடி ஆகிய மூன்றிலும் செல்லும் உயிர்ப்பினில் வீணாக வெளியாகும் நான்கு விரல் அளவினை உள்நிறுத்துவர். அவ்வாறு செய்யப் பழக்கிய சிவ குருபாதத்தே நிலை பெறுவர். அதனால் அவரின் மலப்பிணிப்பு அற்றுப்போகும். அதனால் அவர்கள் பிறந்திறக்கும் பெருந்துன்பம் இல்லாமற்போகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1587. **மேலைச் சொரூபங்கள் மூன்று மிகுசத்தி**
**பாலித்த முத்திரை பற்றும் பரஞானி**
**ஆலித்த நட்டடே ஞேயம் புகுந்தற்ற**
**மூலம் சொரூபன் மொழிஞா துருவனே.**

“ சிவனடியார்களே, காண்பான், காட்சி காட்சிப் பொருள் ஆகிய மூன்றும் திருவருளின் உதவியால் சிவபெருமான் புரியும் திருக்கூத்தினைச் சிவன் கொடுத்தருளிய அருட்கண்ணால் கண்டு மகிழ்ந்து அவனது திருவடியை அடைவர். புகுந்ததும் பருவிடம்மாகிய மூலப்பகுதியின் காரியங்கள் யாவும் ஞானத்தின் திருவுருவாக மாறும். அவ் இயல்பை அடைந்தவனே சிவஞானி” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 04. துறவு

1588. **இறப்பும் பிறப்பும் இருமையும் நீங்கித்**
**துறக்குந் தவங்கண்ட சோதிப் பிரானை**
**மறப்பில ராய்நித்தம் வாய்மொழி வார்கட்கு**
**அறப்பதி காட்டும் அமரர் பிரானே.**

“ சிவனடியார்களே, துன்பங்கள் பலவற்றை ஓயாது தருகின்ற பிறப்பும் இறப்பும் ஆகிய இரு தன்மைகளும் நீங்கி மெய்யுணர்வு பெறுதலே துறவும் தவமும் ஆகும். அந்நெறியை உணர்த்தி அருள்பவன் சிவபெருமான். அவனது திருவடியை மறவாது அவனையே நினைத்துத் திருமுறைகளை ஓதி வழிபடுபவர்களுக்கு அவன் சிவ

உலகத்தைத் தந்தருள்வான்'' என்று கதிரேசன் அடிக்கடி கூறுவார். அதை நாம் அவரின் வாழ்க்கையில் இருந்து புரிந்து கொள்ளலாம். அவருக்கு எல்லா வசதிகளும் உண்டு. அவரின் பிள்ளைகள் மிகவும் நல்லநிலையில் இருக்கிறார்கள். இருந்தும் அவர் சொல்வார், ''சுவாமி எல்லா வசதிகளும் இருந்தும் இன்பமாக இருக்க முடியவில்லை. எம்மைச் சுத்தி வாழ்கின்ற எல்லோரும் துன்பப்படுகின்றனர். வசதியானவனும் துன்பப்படுகிறான். ஏழைகளும் துன்பப்படுகின்றனர். நேற்று ஐம்பது வயதான எனது இனத்தவன் ஒருவனுக்குப் பாரிச வாதம் தீடிரென்று வந்து விட்டது. அவனது வலது கையும் காலும் செயலிழந்து விட்டன. அவனது பிள்ளைகளுக்குத் திருமணமாகவில்லை. பணம் பொருள் இருக்கிறது. ஆனால் இயங்கமுடியாததால் பலரை எதிர்பார்க்கவுள்ளது. இந்த நோய் ஓர் ஏழைக்கு வந்தால் எப்படி இருக்கும். அதனால் வாழ்க்கை வெறுக்கிறது. இவையெல்லாம் பிறப்பதால் தானே வருகிறது. அதனால் பிறக்காத நிலை வேண்டும். என்றவர்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

1589. **பிறந்தும் இறந்தும்பல் பேதைமை யாலே**
**மறந்து மலஇருள் நீங்க மறைந்து**
**சிறந்த சிவனருள் சேர்பரு வத்துத்**
**துறந்த வுயிர்க்குச் சுடரொளி யாமே.**

'' சிவனடியார்களே, இவ்வாறு ஒருபோதும் கதிரேசன் கவலைப்பட்டதில்லை. பாரிசவாதத்தால் முடங்கிய அருணாசலத்திற்கு ஐந்து பிள்ளைகள். மூத்தவள் பெண் அவள் உயர்தரவகுப்பில் படிக்கிறாள். சொத்திருக்கிறது. போதிய வருமானமும் இருக்கிறது. இதற்கேன் கதிரேசன் கவலைப்படுகிறார் என்று தெரியவில்லை என நினைத்தேன். அப்போது கதிரேசன் சொன்னார், '' அருணாசலம் நல்லவன் அல்ல. எம்மோடு மதிப்பாகக் கதைத்தாலும் தொழிலாளர்களோடு பிரச்சினைப்படுபவன். சம்பளத்தை ஒழுங்காகக் கொடான். பெண்ணாசையும் உண்டு. இதனால் பல தீய செயல்களை அஞ்சாது செய்தவன். ஆணவமலத்தின் முனைப்பால் பிறந்தும் இறந்தும் சிவனை மறந்தும் வாழ்வதால் தான் துன்பங்கள் வந்து சேர்கின்றன. இதை எப்படிச் சொன்னாலும் புரிந்து கொள்கிறார்களில்லை. சிவனை மெய்யன்போடு தொழும் ஆருயிர்களின் மலஇருளை நீக்குவதற்காகச் சிவபெருமான் உயிருக்குள் உயிராய் மறைந்து நின்று வேளை வரும் போது சிவகுருவாக வெளிப்பட்டு வந்து திருமுறைகளை ஓதுவித்து தீக்கை செய்து ஆருயிர்களை ஆட்கொள்பவன் என்று சொல்லியும் பலருக்குப் புரிவதில்லை. சிவகுருவால் ஆட்கொள்பவர்கள். சிவத்தைப்பேனுவர். அகத்துறவறம் செய்வர். அதனால் அருளொளி உண்டாகத் துன்பங்கள் யாவும் நீங்கும் என்று பலர் வாழ்ந்து காட்டியும் யாரும் புரிவதாகக் காணோம். இது தான் எனது கவலை என்றவர்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1590. **அறவன் பிறப்பிலி யாரும் இலாதான்**
**உறைவது காட்டகம் உண்பது பிச்சை**
**துறவனுங் கண்டீர் துறந்தவர் தம்மைப்**
**பிறவி யறுத்திடும் பித்தன்கண் டீரே.**

'' சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், '' இலலறத்தில் இருந்து துறவை மேற்கொளவது மிகவும் சிறப்பானது. ஏனென்றால் மனைவி துறவிகளுக்கு உணவளித்துப் போற்ற உதவியாக இருப்பாள். எமது மதத்தில் இல்லறத்துறவி அறவான் என்றும் போற்றப்படுகின்றான். அறவான் எல்லோருக்கும் துணை புரிவதன்றி எவரின்துணையையும் வேண்டாத தனியனாக வாழ்வான். அவன் இயல்பாகவே

பாசங்களில் இருந்து நீங்கியதால் மாயாகாரிய உடம்பெடுத்தாலும் பிறப்பில்லாதவன். அவன் ஊழிக்காலத்தின் பின்பும் வாழ்பவன். அவன் அன்பர்களிடம் அன்பைப் பிச்சையாகப் பெற்று வாழ்பவன். இந்நிலைபிறர்க்கென வாழும் பெரு நிலை என்பதும் துறவென்பது தீய நெறிவில் செல்லாது சிவனை நினைத்து நன் நெறியில் வாழ்வ தென்றும் பலருக்குத் தெரிவதில்லை. துறவி என்றால் காட்டுக்குச் சென்று தவம் செய்வது என்று தான் கற்றவர்கள் கூட நினைக்கிறார்கள். அருணாசலம் பெரும் பணக்காரன் தீய செயல்களை விட்டு விட்டு நல்ல நெறியில் வாழ்ந்தாலே சிவனது பேரன்பு கிட்டும். அதனால் பெருவாழ்வு பெறுவாய் என்று சொல்லியும் அவன் நம்பாது தீய செயல்களைச் செய்ததால் தான் மன அழுத்தத் திற்கு உட்பட்டு நோயாளியானான். எவ்வளவு தரம் சொல்லியும் கேட்காத மனிதரை நினைத்தால் பாவமாக இருக்கிறது. பலர் தாமே தமக்குக் கேட்டைத் தேடிக் கொள்கின்றனர் என்றவர்'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

1591. **நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்**
**நெறியில் வழுவின் நெருஞ்சில் முட்பாயும்**
**நெறியில் வழுவா தியங்கவல் லார்க்கு**
**நெறியின் நெருஞ்சில் முட்பாயகி லாவே.**

'' சிவனடியார்களே, அன்று அருணாசலம் தனது மனைவியுடன் ஆச்சிரமத்திற்கு வந்து நமசிவாயகத்திடம் தனது நிலையைக் கூறி வருந்தினான். தனது நோய்க்குப் பரிகாரம் கூறு மாறு கேட்டான். நமசிவாயம் சொன்னார், ''அருணாசலம், எதற்கும் கலங்காத கதிரேசன் உனது நிலை பற்றிச் சொல்லிக் கவலைப் பட்டவர். இல்லறத்தில் இருந்து கொண்டே ஒருவர் துறவை மேற்கொள்ளலாம் என்று சைவ சமயம் வற்புறுத்திக் கூறுகிறது. இல்வாழ் வானால் தான் துறவிகள் கவலையின்றித் துறவை மேற்கொள்கின்றனர். அதை விட எவ்வளவோ நல்ல காரியங்களை இல்வாழ்வானால் தான் சொய்ய முடியும் பிதிர்கள் தொடக்கம் துறவிகள் வரை நிம்மதியாக வாழ உதவுபவன் இல்வாழ்வான். அன்பு நெறியாகிய இல்லறமும் அதன் முதிர்வான அருள் நெறியாகிய துறவறமும் அகம்புறம் என்று சிறப் பித்துச் சொல்லப்படும் சமய நெறியாகும். அந் நெறியைப் படைத்த சிவனே இல்லற வாழ்வு வாழ்கிறான். நன்நெறியில் வாழாது தீய வழியில் வாழ்வோருக்குத் துன்பங்களைக் கொடுத்து நன் நெறிக்கு வரவழைக்கவே தீய நெறிகளைப் படைத் தருளியுள்ளான். நன்நெறியில் வாழ்வோருக்கு எந்தத் துன்பமும் வராது. அதுவும் ஒருவகைத் துறவு. நீ வாழும் போது ஒழுக்க முள்ளவனாக வாழ வில்லை என்று கதிரேசன் கூறியும் நீகேட்க வில்லை. கதிரேசன் சிவனது மெய்யடியவன். அவர் சொல்வது நடை பெறும் என்று ஊரவர் சொல்வதையும் நீ நம்பவில்லை. அதனால் தான் உன்னைத் துன்பங்கள் துரத்து கின்றன. உன்னிடம் வேலை செய்வோருக்கு நீ வேதனத்தைச் சரியாகக் கெடுப்பதில்லை. சில பெண்களுடன் முறை கேடாக நடந்துள்ளாய். அதன் காரணமாக வந்த பயமே உனக்கு பாரிசவாதமானது. சிவனை நினை. நினைத்தால் தீய எண்ணங்கள் உருவாகாது. தீய எண்ணங்களை எண்ணாதவனும் துறவியே என்றவர்.'' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

1592. **கேடுங் கடமையுங் கேட்டுவந் தைவரும்**
**நாடி வளைந்தது நான்கட வேனலேன்**
**ஆடல் விடையுடை அண்ணல் திருவடி**
**கூடுந் தவஞ்செய்த கொள்கையன் றானே.**

“ சிவனடியார்களே, நமசிவாயகத்தின் தந்தை நீல கண்டன். எண்பது வயது நிரம்பிய முதியவர். நமசி வாயகம் இல்லறத்தைத் துறந்தது அவருக்குத் துன்பத்தைக் கொடுத்தது அதனால் அவர் அடிக்கடி ஆச்சிரமத்திற்கு வந்து நமசிவாயகத்தைச் சந்திப்பார். அன்று அவர் வந்து சொன்னார், “மகனே, நீ எனக்கு ஒரே ஒரு மகன். உன்னால் தான் எமது வம்சம் தழைக்கும். அதனால் வீட்டுக்கு வா திருமணத்தைச் செய் என்று அழுதவர். நமசிவாயகத்திற்குந் தர்ம சங்கடமாகி விட்டது. அவர் எனக்குச் சொன்னார், “சுவாமி, சிவருருவால் ஆட்கொள்ளப் பட்ட உயிர் பிறப்பு இறப்பு ஆகிய வழிகளால் வரும் துன்பங்களையும், அத்துன்பங்களில் இருந்து விடுபடுதற்குரிய சிவ வழிபாட்டு முறைகளையும் சிவகுருவின் வாயால் கேட்டு மகிழ்வே விரும்பும். அதனால் தான் ஐம்புல ஆசைகள் அகலும். அதனால் ஐம்புலங்களால் உண்டாகும் தொல்லைகள் யாவும் அற்றுப் போய் விடும். அந்நிலையில் ஆண் ஏற்றில் ஏறி உலாவும் சிவனை நினைத்து இன்புறுமே தவிர உலக பந்தங்களில் ஈடுபடாது, பெற்றதால் அவர் இப்பிறப்பில் எனது தந்தை. எத்தனை தந்தைகள் எனதுவாழ்வில் வந்தனரோ தெரியாது. இனி எனது ஒரே தந்தை சிவன்தான். அதை என்னால் அவருக்குப் புரிய வைக்க முடிய வில்லை என்றவர் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1593. **உழவன் உழவுழ வானம் வழங்க**
**உழவன் உழவினிற் பூத்த குவளை**
**உழவன் உழத்தியர் கண்ணொக்கும் என்றிட்டு**
**உழவன் அதனை யுழவொழிந் தானே.**

“ சிவனடியார்களே, சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நன்னெறிப் பயிற்சியான உழவாகிய தொண்டைச் செய்ய வானம் ஆகியதிருவருள் சிவபெருமானின் அருளாகிய மழையைப் பொழிய, தொண்டராகிய உழவர் மகிழச் சிவஞானம் பூக்கும். அதனால் சிவபெருமானின் மீது அன்பு பெருகும். அதனால் திருவடியுணர்வு தோன்றும். அதைத் தழுவி ஒழுக ஆருயிரின் தொண்டுகள் யாவும் சிவத்தொண்டாக மாறும். ”

“ சிவனடியார்களே, இதை உணராத நமசிவாயகத்தின் தந்தை நான் சொல்லியும் கேளாது தினமும் ஆச்சிரமத்திற்கு வருவார். நமசிவாயகம் அவரைச் சமாளித்து அவரைத் தனது மடியில் படுக்க வைத்துச் சொல்வார், “அப்பா, உலகமக்களின் தந்தையாகிய சிவபெருமான் என்னை ஆட்கொண்டு விட்டார். ஒரு தந்தைக்கும் பிள்ளைக்கும் உள்ள உறவு நிதந்தரமனாதல்ல. அது இடையில் அறுந்துபோம். திருமணம் உறவை அறுக்கும். மரணம் முற்றாக அறுக்கும். ஆசிரியரான உங்களுக்கு இது தெரியாதா? உங்களது பெற்றோர் பல வருடங்களுக்கு முன் இறந்தமையால் உங்களை விட்டுச் சென்று விட்டனர். அதற்காகாக் கவலைப்பட முடியுமா..? அது போன்றது தான் இதுவும். என்னால் துறவைக்கைவிட முடியவில்லை. தயவு சொய்து வற்புறுத்தாதீர்கள் என்று கூறியவர்” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

1594. **மேல்துறந் தண்ணல் விளக்கொளி கூற்றுவன்**
**நாள்துறந் தார்க்கவன் நண்பன் அவாவிலி**
**கார்துறந் தார்க்கவன் கண்ணுத லாய்நிற்கும்**
**பார்துறந் தார்க்கே பதஞ்செய லாமே.**

“ சிவனடியார்களே, உலகில் முதல்துறவி சிவபெருமான். அவர் தொன்மையிலேயே பற்றில்லாத துறவி. அவர் தனது மெய்யடியார்கு ஆக்கமும் கேடும் இல்லாத அருட்பெரும் சோதி. அகத்தவ மாகிய சிவயோகப் பயிற்சி முறையால் கூற்றுவனை வென்றவர்களுக்கு உற்ற தோழன். அவா என்று சொல்லப்படும் மலம் இல்லாத அறியாமையை நீக்கிய உயிர்களுக்குச் சிவன் கண்ணுதலாகிய உருவத்திரு மேனி கொண்டு அருள் பவன். உலகப் பற்றுமுற்றாக இல்லாதவர்களுக்கு திருவடிப் பேறு கொடுப்பவன். அவன் நமசி வாயகத்தை ஆண்டு கொண்டான். இனி அவனைச் சிவனிட மிருந்து பிரிக்க முடியாது என்பதை நீல கண்டன் உணர்ந்து கொண்டார். நமசி வாயகம் சொல்வது போல இது தற்காலிக உறவு. இடையில் அற்றுப் போய்விடும். நிந்தர உறவான சிவ உறவு ஊழிக்காலங்கள் பல கடந்தாலும் அறாது என்று சொல்லி விட்டுக் கவலையோடு சென்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1595. **நாகமும் ஒன்று படம்ஐந்து நாலது**
**போகமுட் புற்றிற் பொருந்தி நிறைந்தது**
**ஆக மிரண்டும் படம்விரித் தாட்டொழிந்**
**தேகப் படஞ்செய் துடம்பிட மாமே**

“ சிவனடியார்களே, ஆருயிர்களுக்கு நாகம்போல ஒரு உடம்புண்டு. அதன் ஐந்து படம் போல ஐந்து பொறிகள் உண்டு. அதன் வழியாக அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பயன்களையும் உயிர் அனுபவிக்கும். உள்ப்புற்றாகிய உடலுள் அகத்தே சிவன் பொருந்தி நிறைந்து நிற்பன் நுண்மை, முன்மையாகிய உடம்பு இரண்டினுள்ளும் படமாகிய பொறிகள் வழிச் சென்று பாடஞ் செய்தலாகிய தருதியை உண்டாக்கிச் சிவபெருமான் அவ் உடம் பினை இடமாகக் கொண்டருள்வன்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1596. **அகன்றார் வழிமுதல் ஆதிப் பிரானும்**
**இவன்றா னெனநின் றெளியனும் அல்லன்**
**சிவன்றாள் பலபல சீவனு மாகும்**
**நயன்றான் வரும்வழி நாமறி யோமே.**

“ சிவனடியார்களே, பற்றற்றவர்களின் முதல்வன் அம்மையுடன் கூடிய அப்பன். அவன் இன்ன தன்மையன் என்று சொல்லும் அளவுடையவன் அல்லன். சிவனது அருளான திருவருள் ஆருயிர்களுக்கு ஏற்ற வாறு பலவாக அமைந்து பயனைக் கொடுக்கும். திருவடியுணர்வை திருவருள் உணர் வால் உணரல் வேண்டும். நான் என்றும் செருக்கு உள்ள வரை அவ்வுயிர் ஆணவ முனைப்புடைய தாகவே இருக்கும். அம் முனைப்பால் சிவனை அடைய முடியாது. ”

“ சிவனடியார்களே, ஆச்சிரமத்திற்கு வந்த அருணாசலம் ஏனைய அடியார்களுடன் சேர்ந்திருக்க மாட்டான். வீட்டில் இருந்து சொகுசான நாற் காலி ஒன்று கொண்டு வந்து வைத்து அதில் இருப்பான். ஆச்சிரம உணவு சரியில்லை என்பான். இப்படி எல்லோரையும் குறை சொல்லிக் கொண்டே இருப்பான். அதைக் கண்ட கதிரேசன் சொன்னார், “ பணம் பொருளால் வரும் துன்பங்களைத் தடுக்க முடியாது. ஆச்சிரமத்திற்கு வருவோரின் தகுதி தாரதரம் பார்த்தால் தான் என்ற முனைப்புத்தான் மே லோங்கும். சிவன் எளிமையானவர். தகுதி தராதரம் பாரதவர். அதனால் தான்

பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தவர். நீ இங்கு வந்து இங்குள்ள அடியவர்களையும் குழப்புகிறாய் என்றவர் ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

1597. **தூம்பு திறந்தன ஒன்பது வாய்தலும்**
**ஆம்பற் குழலியின் கஞ்சுளிப் பட்டது**
**வேம்பேறி நோக்கினன் மீகாமன் கூரையிற்**
**கூம்பேறிக் கோயிலிற் பூக்கன்ற வாறே.**

“ சிவனடியார்களே, உடம் பின் அகத்தே காணப்படும் வாயில்கள் இரண்டும், சாரளங்கள் ஏழையும் சேர்த்தால் தொளைகள் ஒன்பதாகும். அந்தொளைகள் ஒன்பதும் திறக்கப் பட்டே இருக்கும். ஆம்பல் பூ சூடிய திருவருள் அம்மை கஞ்சுகமாகிய சட்டை போல அவ் உடம்பினைக்காப்பாள். உயிர்ப்பு முறையால் வேம் பாகிய நடு நாடியின் வழி மேல் ஏறி நோக்கினால் மீகாமனாகிய சிவபெருமான் கூரைக் கூம் பாகிய உச்சிச் தொளையில் கோவில் கொண்டருள்வன். அப்படி அருள அருள் பூக்கின்ற முழு முதல் சிவபெருமானின் விழுச் சுடர் வெளிப்படும். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

## 05. தவம்

1598. **ஒடுங்கி நிலைபெற்ற உத்தமர் உள்ளர்**
**நடுங்குவ தில்லை நமனுமங் கில்லை**
**இடும்பையும் இல்லை இராப்பகல் இல்லை**
**படும்பயன் இல்லை பற்றுவிட் டோர்க்கே.**

“ சிவனடியார்களே, புலன்களை ஒடுக்கிச் சிவபெருமானின் திருவடிக்கண் ஒடுங்குபவர்களே உத்தமராவர். அதனால் அவர்கள் தலை சிறந்தவர்களாவர். அவர்களாது உள்ளம் ஒருபோதும் தடுமாற்றமடைய மாட்டாது. அவர்கள் தேனைப் போன்று இனிக்கும் சிவ வாழ்க்கை வாழ்வதால் அவர்களுக்குச் பிறப்பும் இல்லை. இறப்பும் இல்லை. அதனால் அவர்களுக்கு யம பயமும் இல்லை. வேறு எவ்வகையான உலகியல் துன்பங்களும் இல்லை. இரவும் பகலும் இல்லை. அவர்கள் அடைய வேண்டிய பயன்களும் இல்லை. அவர்கள் பற்றற்ற சிவனைப் பற்றுவதாகிய பற்றைத் தவிரவே றெந்தப் பற்றுக்களும் இல்லாதவர்கள். ”

“ சிவனடியார்களே,சில வருடங்களுக்கு முன்பு நமசிவாயகத்தைக் காண வந்த அவர் வேலை பார்க்கும் இடத்து உயர் அதிகாரி தனது தங்கையைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தினார். அமைச் சரிடம் சொல்லிப் பதவி உயர்வு பெற்றுத் தருவதாகச் சொன்னார். பொன் பொருள் திரவியங்கள் தருவதாகச் சொன்னார். அவரது தங்கை ஒரு தலையாக நமசி வாயகத்தைச் காதலித்தாள். அவள் வந்து அழுதும் அவர் தன் முடிவை மாற்றவில்லை. எனக்கு எல்லாம் சிவம். சிவத்தைத் தவிர வேறெதுவும் எனக்கு வேண்டாம் சிவனை நினைத்தால் நீங்கள் சொல் பவையாவும் கிடைக்கும். அவை எதற்கு? வாழ விரும்புபவர்களுக்குக் கொடுங்கள் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1599. **எம்மா ருயிரும் இருநிலத் தோற்றமுஞ்**
**செம்மா தவத்தின் செயலின் பெருமையும்**
**அம்மான் திருவருள் பெற்றவ ரல்லால்**
**இம்மா தவத்தின் இயல்பறி யாரே.**

“ சிவனடியார்களே, நமசிவாயம் அந்தப் பெண்ணுக்குச் சொன்னார், “மகளே, மலங்களை அகற்றுவதற்காகவே மாயாகாரிய உடலுடன் உயிர் சேர்த்துவைக்கப்பட்டது. இதைவிட உலகமும் உலகியற் பொருட்களும் பெரு நிலத்தோற்றமும் சிவனால் தரப்பட்டன. இவற்றைக் கருவியாகக் கொண்டு திருவடியைச் சேர்தல் வேண்டும். நன்நெறியைப் போற்றி வாழ்ந்து சிவனைத் தொழுபவர்களுக்குத்தான் தவத்தின் பெருமை தெரியும். ஏனையோருக்குத் தெரியாது. முன்பு நான் தெரியாதவனாக வாழ்ந்த தால் ஏராளமான துன்பங்களை அனுபவித்தேன். சிவனின் பெருமைகளை அறிந்த பின்பு சிவனைத் தவிரவேறு எதையும் எனது மனம் நாடவில்லை. அழியும் உடலின் கவற்சியை நம்பாது அழியாத உயிரை மேம்படுத்திப் பிறவாத நிலையை அடைவதே எனது நோக்கம் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1600. **பிறப்பறி யார்பல பிச்சைசெய் யாந்தர்**
**சிறப்பொடு வேண்டிய செல்வம் பெறுவர்**
**மறப்பில ராகிய மாதவஞ் செய்வார்**
**பிறப்பினை நீக்கும் பெருமைபெற் றாரே.**

“ சிவனடியார்களே, நமசிவாயகம் அப்பெண்ணுக்குச் சொன்னார், “ பெண்ணே, உயிரை உய்யுமாறு உடையவனான சிவபெருமானால் தரப்பட்ட உடலைப் பாதுகாப்பதற்காகப் பலர் பிச்சை எடுத்து உண்கின்றனர். சிவபெருமானின் திருவடியை மறவாமை தான் தவம். அது பெருந்தவமுமாகும். அத்தவம் செய்வோர் வீடு பேற்றிற்கான இம்மை மறுமைச் செல்வங்களைப் பெறவே விரும்புவர். அவர்கள் சிவப் புண்ணியப் பயனைப் பெற்றவர்களாவர். அவர்களுக்கும் பிறப்பில்லை. பிறவாத நிலையே இன்பமான நிலை அதில் ஏமாற்றங்கள் இல்லை. துன்பங்கள் இல்லை, பற்றுப் பாசங்களும் இல்லை பிறந்ததற்கான பயன் என்பது மாயாகாரியச் செயல்களைச் செய்து துன்பம் அடைவதல்ல. சகலவற்றையும் துறந்து சிவனை அடைந்து பேரின்பம் பெறுதலே. ஆகையால் சென்று விடு என்றவர். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

1601. **பள்ள முதுநீர் பழகிய மீனினம்**
**வெள்ளம் புதியவை காண விருப்புறும்**
**கள்ளவர் கோதையர் காமனோ டாடினும்**
**உள்ளம் பிரியா ஒருவனைக் காணுமே.**

“ சிவனடியார்களே, மீன்கள் பள்ளத்தில் தங்கி நிற்கும் பழைய தண்ணீரில் வாழ்ந்தாலும் புது வெள்ளம் எப்போது வரும் என்று நினைத்துக் கொண்டேயிருக்கும். அது போல ஆருயிர்கள் அனைத்தும் சிவனது திருவடியை வணங்குதலே நற்றவ மென்று நினைத்திருக்கும். அம்முறையில் ஆருயிர் பெண் என்று அழைக்கப்படும். மணம்கமழும் பூக்களைச் சூடிய சிவனைப் பேணும் பெண்ணான உயிர் நிலையாத பொருட்களை நிலையான பொருட்கள் என்று வினைக்கீடாக அனுபவித்துக் கொண்டிருந்தாலும், அதுசிவன் மீது அன்பு கொண்டு அவனை விரும்புவதால் என்றும் பிரியாத சிவனின் திருவடியில் அமர்ந்திருக்கும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1602. **கரந்துங் கரந்திலன் கண்ணுக்குந் தோன்றான்**
**பரந்த சடைநன் பசும்பொன் நிறத்தன்**
**அருந்தவர்க் கல்லாம் அணுகலு மாகான்**
**விரைந்து தொழப்படும் வெண்மதி யானே**

‘‘ சிவனடியார்களே, பற்றுள்ள உயிர்கள் பற்றற்ற சிவனுடன் கலந்து தாலும் சிவன் பாலில் நெய்போல மறைந்தே நிற்பான். அங்ஙனம் நிற்பினும், பற்றற்ற மெய்யடியார்க்கு வெளிப்பட்டு தோன்றியருள் பவன். அவன் பொன் போலப் பிரகாசிக்கும் திருச்சடையை உடையவன். பொன் போன்ற மேனியை உடையவன். திருவருளின் துனையால் அருந்தவம் செய்யும் மெய்யடியார் முன் அவர்கள் விளங்க நிற்பன். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1603. **அமைச்சரும் ஆனைக் குழாமும் அரசம்**
**பகைத்தெழும் பூசலுட் பட்டார் நடுவே**
**அமைத்ததோர் ஞானமும் ஆத்தமும் நோக்கி**
**இமைத்தழி யாதிருந் தார்தவத் தாரே.**

‘‘ சிவனடியார்களே, சூழ்ச்சி மிக்க அமைச்சரும், பெருணம மிக்க யானைக் கூட்டங்களும் ஆற்றல் மிக்க அரசர்களும் பகைத் தெழுந்து செய்யும் பெரும் போரில் இருதிறத்தாரும் எண்ணிக்கையற்று மாண்டனர். அப்போரின் நடுவே நின்று காண்பவர்களுக்கு நிலையாமை உணர்ச்சியும் திருவடி உணர்வும் சிவப் பேற்றின்கண் நேயமும் இயல்பாக உண்டாகும். அந்த நோக்கல் நோக்காகிய கருத்தினை அழியா திருந்தவர்கள் இறவாத நற்றவம் செய்தவர்களே. போரில் இறவாதுதப்பியவர்கள் தவத்தை மேற் கொள்வர். என்று திரு மூலர் சொல்கிறார். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1604. **சாத்திரம் ஓதுஞ் சதுர்களை விட்டுநீர்**
**மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்**
**பார்த்தவப் பார்வை பசுமரத் தாணிபோல்**
**ஆர்த்த பிறவி அகலவிட் டோடுமே.**

‘‘ சிவனடியார்களே, மெய்ப்பொருளான சிவத்தில் நாட்டமின்றி வருமானம் கருதி நூல்களைப் படித்து பொய்யான பெருமைகளைப் பேசித்திரியாது ஒரு கணம் பற்றுகள் இன்றி முழுமனதோடு வழிபடுங்கள் அப்படியான உணர்வுடன் சிவனைப் பார்த்து வழிபட்டால் அப்பார்வை உணர்வு பசு மரத்து ஆணி போல உயிர்களின் மனதில் பதிந்து விளங்கும். அதனால் தொன்று தொட்டு வரும் பிறவி நீங்கும். ’’

‘‘ சிவனடியார்களே, எமது ஆச்சிரமத்திற்கு வருவோரில் திறமையுள்ளவர்களைப் பேசச் சொல்லோம். பேசுவதால் அவர்கள் அறிவை வளர்ப்பார்கள். அடியவர்களுக்கு அறிவுகிட்டும் ஆனால் பலர் தாம் பெற்ற பட்டங்களை முதன்மைப் படுத்துவர். தமக்குத் தாமே பெரும் பெரும் பட்டங்களைச் சூட்டுவர். பேசும் போது தன்னைப் பற்றியும் தனக்குவேண்டியவர்களைப் பற்றியும் புகழ்ந்து பேசுவர். ஒருவர் மற்றவரைப் புகழ்ந்தால், மற்றவர் இவரைப் புகழ்வார். இதனால் இருவரது பெயர்களும் பேசும்மேடைகளில் ஒலிக்கும். அதனால் இங்குபேச வருவோரை அழைத்து பல்வேறு வகையான உயர்ந்த நூல்களைக் கற்றாலும் பரமாருக்கு விளங்கும் படி பேசுங்கள். உங்கள் வித்துவத்தை வெளியே சொல்லாதீர்கள். அதைப் பேச்சைக் கேட்போர் புரிந்து கொள்வர். ஒரு சில நிமிடம் பேசினாலும் கதிரேசனைப் போன்றும்

நமசிவாயகத்தைப் போன்றும் பேசுங்கள். பேச்சாலும் சிவ உணர்வைப் பெறலாம். சிவ நினைவுடன் கொடுக்கப்பட்ட தலைப்பில் பேசுங்கள் அதற்கப் பால் செல்லாதீர்கள். வீணாண பேச்சு ஆணவத்தை அதிகரிக்கச் செய்யும். பிறப்பைக் கூட்டும் என்று பல முறை சொன்னாலும் பலருக்கு விளங்குவதில்லை. '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1605. **தவம்வேண்டு ஞானந் தலைபட வேண்டில்**
**தவம்வேண்டா ஞான சமாதிகை கூடில்**
**தவம்வேண்டா மச்ச கசமார்க்கத் தோர்க்குத்**
**தவம்வேண்டா மாற்றந் தனையறி யாரே.**

'' சிவனடியார்களே, ஒரு வருக்குத் திருவடியுணர்வு வேண்டுமானால் அதற்குச் சீலம் நோன்புகளாகிய புறத் தவப் பயிற்சிகளை இடையறாது செய்தல் வேண்டும். ஞான சமாதியாகிய திருவடியுணர்வில் நிலைத்து நின்றால் வேறு தவங்களைச் செய்ய வேண்டிய தில்லை. அது போலச் செறிவு அறிவு ஆகிய இரு நிலைகளில் நிற்போர் முறையே அகத்தவமும் அறிவுத்தவமும் உடைய வராவர். அவர்களுக்கும் ஏனைய தவங்கள் தேவையில்லை. இவ் உண்மையைப் பவர் அறிந்த தில்லை. '' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

## 08. தவநிந்தை (தவக்கடப்பு)

1606. **ஓதலும் வேண்டாம் உயிர்க்குயி ருள்ளுற்றாற்**
**காதலும் வேண்டாமெய்க் காய மிடங்கண்டாற்**
**சாதலும் வேண்டாஞ் சமாதிகை கூடினாற்**
**போதலும் வேண்டாம் புலன்வழி போகார்கே.**

'' சிவனடியார்களே, உயிருக்கு உயிராகி சிவபெருமான் அவ் உயிரின் இடமாக வெளிப்பட்டு விளங்கினால், பாடத்தைத் விளங்கிக் கொண்டவன் அதைத் திருப்பிப் படிக்கத் தேவையில்லை என்பதைப் போலச் சிவபெருமான் ஒருவனது உள்ளத்தைக் கோவிலாகக் கொண்டு அங்கு எழுந்தருளியிருந்தால் அதன் பின் பெரு முயற்சிகள் தேவையில்லை. ஒரு செயல் முற்றுப் பெற்றபின் அச் செயலைச் செய்யத் தேவையில்லை. வீடு கட்டுபவன் ஒரு முறை அத்தி பாரம் போட்டால் போதும் பின் போடத் தேவையில்லை என்பதை அது ஒக்கும். தான் அவனால் என்றும் சமாதி நிலை கை கூடினால் இறப்பும் இல்லை. ஐந்து புலன்களையும் முற்றாக அடக்கி அவற்றைத் தன் பின்னால் செல்லவைக்கும் மெய்யடியார்கள் காட்டிற்குச் சென்று தவம் செய்ய வேண்டியதில்லை. '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1607. **கத்தவும் வேண்டாங் கருத்தறிந் தாறினாற்**
**சத்தமும் வேண்டாஞ் சமாதிகை கூடினாற்**
**சுத்தமும் வேண்டாந் துடக்கற்று நிற்றலாற்**
**சித்தமும் வேண்டாஞ் செயலற் றிருக்கிலே.**

'' சிவனடியார்களே, மெய்ப்பொருள் நூல்கள் கூறும் கருத்தின் உண்மையை உணர்ந்து அடங்கினால், அதன்பின் அதை மீண்டும் மீண்டும் கற்றலாகிய முயற்சி தேவையில்லை. சாமாதி நிலை கைகூடினால் வேதமோதும் சத்தமும் தேவையில்லை. ஆணவத்தின் தொடக்கு அற்றவர்களுக்கு வேறு தொடக்குகள் இல்லை.

உயிர்செயலற்று உடையான் செயலாக இருப்பின் ஒன்றை நாடுதலாகிய சித்தமும் வேண்டாம். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1608. **விளைவறி வார்பண்டை மெய்த்தவஞ் செய்வார்**
**விளைவறி வார்பண்டை மெய்யுரை செய்வார்**
**விளைவறி வார்பண்டை மெய்யறஞ் செய்வார்**
**விளைவறி வார்விண்ணின் மண்ணின்மிக் காரே.**

'' சிவனடியார்களே, உடம்பு எடுத்த பயன் என்னவென்றால் உடம்பினுள் இருக்கும் சிவனைக் கண்டு வழிபடுதலாகும். இதை உணர்ந்தவர்கள் நன்நெறி நன்மைத் தவம் புரிபவராவர். அது போல மெய்யுரையாகிய குருமொழியை கேட்பவர் உடம்பினது பயனைப் புரிந்தவராவர். மெய் அறமான சிவபுண்ணியம் செய்வாரும். உண்மையை உணர்ந்தவராவர். இவ் உண்மையை உணர்ந்தவர்கள் விண்ணிலும் மண்ணிலும் வாழ்வோரில் உயர்ந்தவராவர். ''

'' சிவனடியார்களே, ரவீந்திரன் உயர் அதிகாரி. ஆனால் கல்வியறிவில்லாத கதிரேசனைக் குருவாகக் கொண்டவர். அவர் படிக்குங் காலத்தில் கதிரேசனுடன் தங்கியிருந்து படித்ததால் அவரின் சொற்படியே நடந்தார். அவருக்கு அரச நியமனம் கிடைத்ததும் கதிரேசன் சொன்னார், '' ரவி, நீ படித்ததனால் உயர்பதவி கிடைத்து விட்டது. எனக்கு கீழ் வேலை செய்வோர் எல்லோரும் கீழானவர்கள் என நினைத்து கர்வம் கொள்ளாதே. சிவபெருமான் எல்லோரது உயிரிலும் சமமாகவே இருக்கிறார். அதனால் அந்த உயிரில் உள்ள சிவனை மதித்தல் வேண்டும். உடலை நாம் பெற்றமைக்குக் காரணம் எமது உயிரில் கலந்திருக்கும் சிவனை உணர்தற் பொருட்டேயாம். இது போல ஏனைய உயிர்களிலும் இறைவனை நாம் உணரவேண்டும். கண்டுகொள்ளவும் வேண்டும். ஒருவனது வினைக்கேற்ப உடல் கிடைக்கிறது. ஆனால் உள்ளிருப்பவன் வினைக்கேற்றவாறு இருப்பதில்லை. எல்லா உயிரிலும் சமமாகவே இருக்கிறான். அதனால் அவனது உடலின் உரிமையாளனை மதிக்கவேண்டும். மதித்து நடந்தால் எல்லா நன்மைகளும் உண்டாகும்'' என்றவர். அதை ரவீந்திரன் இப்போதும் மதித்து வருகிறான். அவன் இடம் மாறிச் சென்று மூன்று வருடங்கள் கழிந்த பின்பு நோய்வாய்ப்பட்டபோது அவன் முன்பு கடமையாற்றிய பட்டணத்தில் உள்ளவர்கள் அவனை வந்து சுகம் விசாரித்தனர். அவன் சிவபுண்ணியம் செய்தவன். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1609. **கூடித் தவஞ்செய்து கண்டேன் குரைகழல்**
**தேடித் தவஞ்செய்து கண்டேன் சிவகதி**
**வாடித் தவஞ்செய்வ தேதவம் இவைகளைந்**
**தூடிற் பலவுல கோரெத் தவரே.**

'' சிவனடியார்களே, திருவருளோடு கூடித் சிவத்தைப் பேணுவதாகிய தவத்தைச் செய்தால் சிவனைக் காணலாம். அத்தவ வழியே சென்றால் சிவ நிலையையும் அடையலாம். இதை முன்பே அறிந்தவர் உடலை வருத்தித் தவம் செய்யார். ஐம்புலன்களையும் வென்றவர் சிவ உலகப் பண்பிணராவார். அவற்றை வெல்லாது கூடி இன்பங்கண்டவர் எந்நாளும் துன்பப்படுவர்''

'' சிவனடியார்களே, கதிரேசனை எடுத்துக் கொண்டால் அவர் உடலை வருத்தித் தவம் செய்யத்தேவையில்லை. மற்றைய உயிர்களுக்குத் துன்பம் செய்யாதிருந்தால் அது தவம் செய்வதை விட மேலானது என்பார். உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் வாழ்வது அறவாழ்க்கை. துன்பப்படும் உயிர்களுக்கு உதவுவது தவவாழ்க்கை

உயிரைக் கொன்று உண்ணாதிருப்பது. நோன்பு. இவற்றைச் செய்வதை விட்டு விட்டு காட்டுக்குச் சென்று உடலை வருத்தித்தவம் செய்வதோ அல்லது உணவை உண்ணாது நோன்பிருப்பதோ தவம் அல்ல. உடலை வருத்தாது சிவநினைவோடு எல்லா உயிர்கள் மீதும் அன்பு கொண்டு அவற்றிற்குத் தீங்கு செய்யாமல் வாழ்வது தவம் செய்தலை விடச் சிரமமானது என்று கூறுவார். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1610. **மனத்துறை மாகடல் ஏழுங்கை நீந்தித்**
**தவத்திடை யாளர்தஞ் சார்வத்து வந்தார்**
**பவத்திடை யாளர் அவர்பணி கேட்கின்**
**முகத்திடை நந்தியை முந்தலு மாமே.**

'' சிவனடியார்களே, மனதிற்கு மேலுள்ள இறுப்பு மெய் என்னும் புத்தியின் கண் தங்கி இருக்கின்ற எஞ்சுவினையைச் சிவகுருவின் சொற்படி திருவைந்தெழுத்துக் கணிக்கும் முறையில் நற்றவம் செய்யும் சிவஞானிகளுடன் சேர்ந்து அவரது வழியைப் பின்பற்றுவாருக்குப் பிறப்பில்லை. சிவகுருவின் சொற்படி தொண்டுகள் செய்து வந்தால், நந்தியாகிய சிவபெருமானை நேரிற் கண்டு வணங்கலாம். ''

'' சிவனடியார்களே, ரவீந்திரன் ஆச்சிரமத்தில் உரையாற்றும் போது சொன்னான், '' கதிரேசன் சொற்படி தான் நான் வாழ்ந்து வருகிறேன். அவர் திருவைந்தெழுந்தைக் கணிக்கும் முறையைப் பத்து வயதில் எனக்குச் சொல்லித்தந்தார். அதன்படி தான் இன்றும் கணித்து வருகிறேன். அவருக்கு தவம் செய்வதில் விருப்பமில்லை. அவர் சொல்வார் சிவஞானிகளுடன் சேர்ந்து அவர்களின் விருப்பப்படி வாழ். சிவனுக்கும் சிவனடியார்க்கும் தொண்டு செய். அவர்களது உள்ளத்தில் வீற்றிருக்கும் சிவன் வெளிப்பட்டு உனக்குத் தரிசனம் தருவார் என்றார். சிவனடியார்குச் செய்யும் தொண்டு சிவனுக்கு செய்யும் தொண்டாகும் என்பான். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1611. **மனத்திடை நின்ற மதிவாள் உருவி**
**இனத்திடை நீக்கி இரண்டற வீர்த்துப்**
**புனத்திடை அஞ்சும்போ காமல் மறித்தால்**
**தவத்திடை யாறொரி தன்னொரி யாமே.**

'' சிவனடியார்களே, கதிரேசன் சொல்வார், '' மனமாகிய பீடத்தில் இருந்து சிவயநம என்ற செந்தமிழ் மந்திரத்தை எடுத்து உச்சரித்தால் செருக்கு, சினம், சிறுமை, இறவல், மாண்பிறந்த மானம், மாணாவுகை ஆகிய பகைவர்களை நீக்கலாம். அத்துடன் உயிரையும் உடையானையும் நான் அவன் என்று எண்ணாது அவ்எண்ணத்தை சிவயநம என்றவாளால் அகற்றி, மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளையும் அடக்கி மனதைச் சிவன்பால் செலுத்தினால் அறிவில் அறிவான தவத்தால் பெறப்படும் சிவ ஒளியில் தன்னை அடக்கலாம். உயிர் அதனால் இன்புறும் என்பார். அதனால் மன அடக்கத்துடன் சிவனை நினைப்பதே தவமாகும். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1612. **ஒத்து மிகவுநின் றானை யுரைப்பது**
**பத்தி கொடுக்கும் பணிந்தடி யார்தொழ**
**முத்தி கொடுக்கும் முனிவ னெனும்பதஞ்**
**சத்தான செய்வது தான்தவந் தானே**

“ சிவனடியார்களே, எமது ஆச்சிரமத்திற்கு வரும் குணாளன் என்பவன் ஒரு போதும் மகிழ்வாக இருக்கமாட்டான். தன்னை விடாது துன்பங்கள் துரத்துகின்றன என்பான். அவனை அழைத்துக் கதிரேசன் சொன்னார், “ மகனே, துன்பங்கள் தானாக வருவதில்லை. நாம் தான் அவற்றை அழைக்கிறோம். நீ உனது விடயங்களை மட்டும் கவனி. மற்றவர்களின் விடயங்களில் தலையிடாதே. உனது பிள்ளைகள் திருமணமாகி விட்டன. அவர்கள் வாழ்வதைப் பார்த்து மகிழ். அவர்கள் தவறு செய்தால் சொல்லித்திருத்து அவர்கள் கோளாவிட்டால் அதைப்பற்றிச் சிந்திக்காதே. காலம் அவர்களைத் திருத்தும். சிவன் ஆருயிர்களுடன் வேறறக் கலந்து நின்று எப்போதும் இயங்கி அருள்கின்றான். அவனது திருப்பெயராகிய சிவயநம என்னும் திருவைந்தெழுத்தைப் பொருள் உணர்ந்து ஓது. அது பக்தியைப் பெருக்கித் துன்பத்தை அகற்றும். அத்துடன் மெய்யடியார்களை பணிந்து நட. சிவத்தொண்டுகள் செய். இவ்வாறு செய்து வந்தால் திருவருள் சேரும். சிவன் அருள் புரிவான். அதன் பின் பிள்ளைகள் இனத்தவன் என்ற பாசம் நீங்கி சிவன் என்ற பாசம் மேலிடும். நாம் நினைப்பதால் துன்பங்கள் நீங்காது. எம்மால் நீக்கவும் முடியாது. சிவனே அவற்றைச் செய்பவன். சிவன் திருவடிப்பேறான சிவமெய்யினைத் தந்தருள்வான். அதன் பின் துன்பங்கள் உண்டாகாது என்றவர்” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

1613. **இலைதொட்டுப் பூப்பறித் தெந்தைக்கென் றெண்ணி**
**மலர்தொட்டுக் கொண்டேன் வருப்புனல் காணேன்**
**தலைதொட்ட நூல்கண்டு தாழ்ந்ததென் உள்ளந்**
**தலைதொட்டுக் கண்டேன் தவங்கண்ட வாறே.**

“ சிவனடியார்களே, சிலர் பூக்களைப்படைத்து பூசை செய்கின்றனர். அவர்களது உடல் செயற்பட்ட போதும் மனம் அதில் லகிப்பதில்லை. மந்திர மோதிப் பூசை செய்தாலும் அதன் அர்த்தம் தெரியாவிட்டால் பயன் இல்லை. சிவனுக்குப் பூச்சாத்தி இலையிட்டு வழிபட்டாலும் ஆனந்தக் கண்ணீர் சுரப்பதில்லை. திருமுறைகளையும் செந்தமிழ் வேத ஆகமங்களை தலை சிறந்த மெய் நூல்களாகக் கொண்டு திருவைத்தெழுத்தை மந்திரமாகவும் திருப்பாடல்களை வழிபாட்டின் போது பாடும் போது அதன் பொருளை உணர்ந்து பாடினால் உள்ளம் அதன் கண் தங்கும். மெய் சிலிர்க்கும் இன்பக்கண்ணீர் பெருகும் ஐந்தெழுத்துத் தான் உயர்வான சிறப்புமிக்க மந்திரம். ”

“ சிவனடியார்களே, குணாளனுக்கு அவனது நண்பன் ஏதோ ஒரு நூலில் காணப்பட்ட வடமொழி மந்திரத்தை எழுதிக் கொடுத்திருக்கிறான். அவன் சிவனை வணங்கும் போது அந்த மந்திரத்தைச் சொல்லிப் பூவைச் சமர்ப்பிப்பான். இதை அறிந்த கதிரேசன் அவனை அழைத்துச் சொன்னார், “ நீ இனிமேல் உனது நண்பன் எழுதித் தந்த மந்திரத்தை உச்சரித்துப் பூசை செய்யாதே. செந்தமிழ் மந்திரமான நமசிவய என்ற மந்திரத்தை ஓது. தேவார திருவாசங்களைப்படி அது போதும். தெரியாத மொழி, புரியாத மந்திரம் இவை தீமையைத் தான் தரும் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1614. **படர்சடை மாதவம் பற்றிய பத்தர்க்கு**
**இடரடை யாவண்ணம் ஈசன் அருளும்**
**இடரடை செய்தவர் மெய்த்தவ நோக்கில்**
**உடரடை செய்வ தொருமனத் தாமே.**

“ சிவனடியார்களே, நீண்ட சடையினை உடைய முழு முதற் சிவனை வேண்டிச் செய்யப்படும் பெருந்தவம் இன்பமானது என நினைத்து இடையறாது செய்யும் மெய்யடியார்க்குப் பிறப்பு முதலிய துன்பங்கள் ஏற்படா வண்ணம் சிவபெருமான் காத்து அருள்வான். இன்னாமை இன்பம் என நினைத்து ஒழுகுவாரின் தவமும் மெய்த்தவமாகும். அத்தவத்தினை நோக்கிக் உடல் துன்பமடையாமல் தடுப்பதற்கு வழி ஒரு மனப்பட்டு சிவனை இடையறாது நினைத்தலாகும். இது உடலை வருத்திச் செய்யும் தவத்திலும் மேலானது ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1615. **ஆற்றிற் கிடந்த முதலைகண் டஞ்சிப்போய்**
**ஈற்றுக் கரடிக் கெதிர்ப்பட்ட தன்னொக்கும்**
**நோற்றுத் தவஞ்செய்யார் நூலறி யாதவர்**
**சோற்றுக்கு நின்று சுழல்கின்ற வாறே.**

“ சிவனடியார்களே, திருமறை திருமுறைகளாகிய செந்தமிழ் அருள் நூல்களை வேதாகமங்களை அருட்கண் கொண்டு கற்று உணராதவர்கள் நோன்பிருந்து தவம் செய்யமாட்டார்கள். அவர்கள் தவம் செய்ய விரும்பாது இறப்பு பிறப்புக்களுக்குட்பட்டு சோற்றுக்கு அலைந்து திரிந்து துன்பப்படுவர். இது ஆற்றில் வாழும் முதலை துன்பத்திற்கு அஞ்சிக் காட்டில் வாழும் கரடிக்கும் குட்டிகளுக்கும் இரையாவதை ஒக்கும். ”

“ சிவனடியார்களே, கதிரேசன் குணாளனுக்குச் சொன்னார், “ மகனே ஒவ்வொருவரும் இருக்கின்ற இடத்தில் இருந்து கொண்டே சிவனை வணங்குதலே நன்மை பயக்கும். திருமுறைகளையும், திருமறைகளையும் சிவனருளிய ஞானக் கண்ணைக் கொண்டே படித்துணர வேண்டும். அப்படிப்படிக்க முடியாதவர்கள் ஞானக்கண்ணைப் பெற்றவர்களின் துணையோடு அவற்றைப் படித்தல் வேண்டும். தாமாகப் படிப்பதால் விளக்கம் ஏற்படாது. விளக்கமின்மை மெய்யுணர்வை உண்டாக்காது. அதனால் நீ மாலை வேளையில் ஆச்சிரமத்தில் நடைபெறும் திருமுறை ஓதல், விளக்குதல் வகுப்புகளுக்கு வா. தூர இடங்களுக்குப் போகாதே என்றவர் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1616. **பழுக்கின்ற வாறும் பழமுண்ணு மாறுங்**
**குழக்கன்று துள்ளியக் கோணியைப் பல்காற்**
**குழக்கன்று கொட்டிலிற் கட்டவல் லார்க்குள்**
**இழுக்காது நெஞ்சத் திடவொன்று மாமே.**

“ சிவனடியார்களே, நற்றவம் முழுமை அடைவுமாறும், அத்தவத்தின் பலனை அனுபவிக்குமாறும் இளங்கன்றினை ஒத்த துள்ளித்திரியும் நெஞ்சினை அடக்க கூடிய திடமான மனமுடையவர்கள் மீண்டும் பிறக்கும் தன்மையை உணரவல்லவராவர். அவர்களுக்கு மெய்யறிவு தோன்றும். அத்துடன் மனத்திடமும் தோன்றும். பிறப்புத் தோன்றாது ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1617. **சித்தஞ் சிவமாகச் செய்தவம் வேண்டாவால்**
**சித்தஞ் சிவானந்தஞ் சேர்ந்தோர் உறவுண்டால்**
**சித்தஞ் சிவமாக வேசித்தி முத்தியாஞ்**
**சித்தஞ் சிவமாதல் செய்தவப் பேறே.**

“ சிவனடியார்களே, செந்தமிழ்த் திருமறையான சிவ சிவ என்னும் தமிழ் மந்திரத்தை ஓதுவாரின் உள்ளம் சிவன் உறையும் கோவிலாகும். அவ்வாறு செய்வோர் வேறு எத்தவமும் செய்ய வேண்டியதில்லை. அதனால் அவர் சிவனால் வலிந்து ஆட்கொள்ளப்படுவார். அவர் சிவனாகிய தேவருமாவார். அவருக்குச் சிவனது நல்லுறவும் பெருவாழ்வும் கிட்டும். அதைச் சித்தி முத்தி என்று சொல்வார்கள். அன்பியல் வாழ்க்கை அருளியல் வாழ்க்கை இன்பியல் வாழ்க்கை ஆகிய மூன்றும் கிடைக்கும். சித்தம் சிவமாகி நிற்கும். இது அவர்களின் தவப்பேற்றால் வந்தது. ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 07. அருளுடைமையின் ஞானம் வருதல்

1618. **பிரானருள் உண்டெனில் உண்டுநற் செல்வம்
பிரானருள் உண்டெனில் உண்டுநற் ஞானம்
பிரானரு ளிற்பெருந் தன்மையும் உண்டு
பிரானரு ளிற்பெருந் தெய்வமு மாமே.**

“ சிவனடியார்களே, சிவபெருமானது திருவருள் கிடைக்கப் பெற்றால் பெரும் செல்வம் சேரும். அது போலத் திருவடி உணர்வும் உண்டாகும். அத்திருவருளால் அறிவினுள் அறிவான பேராப் பெருநிலை உண்டாகும். அது போலச் சிவனாகும் பெருநிலையும் உண்டாகும். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1619. **தமிழ்மண் டலம்ஐந்துந் தாவிய ஞானம்
உமிழ்வது போல உலகந் திரிவார்
அவிழு மனமும்எம் ஆதி யறிவுந்
தமிழ்மண் டலம்ஐந்துந் தத்துவ மாமே.**

“ சிவனடியார்களே, சிவயசிவ என்னும் தமிழ் மண்டலம் ஐந்தினும் பரவி நிற்கும் அறிவு அருள் அடிமை இன்பு அன்பு என்னும் ஐந்தினையும் சித்தாந்த சைவர்களாகிய சித்தர்கள் உலகெங்கும் வலியச் சென்று பக்குவப்பட்டவர்களுக்கு அறிவுறுத்துவர். அத்தகைய மெய்யுணர்வு பெற்றமேலோர் மகிழ்ந்த மனமும் திருவடியுணர்வும் மேலேறிய தமிழ் மண்டலம் ஐந்தும் மாறாத மெய்மையாகும். ”

“ சிவனடியார்களே, மாதத்தில் சில தினங்களில் கதிரேசன் காணாமற்போய் விடுவார். அவரைத்தேடி வீட்டுக்குச் செல்வோர் அவர் இல்லை என்று அறிந்ததும் அவர் எங்கோ சென்று விட்டார் என்று நினைப்பர். கதிரேசன் சொல்வர், “ இன்று இந்த இடத்திற்குச் செல் என்று சிவன் எனது கனவில் வந்து சொல்வார். அவரின் சொற்படி நான் அங்கு சென்றால் சிவஞானிகள் கூட்டம் ஒன்று அங்கு இருக்கும். அவர்களோடு உரையாடி அவர்களது சந்தேகங்களை நீக்குவது பேரின்பமானது என்பார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1620. **புண்ணிய பாவம் இரண்டுள் பூமியில்
நண்ணும் பொழுதறி வார்சில ஞானிகள்
எண்ணி இரண்டையும் வேரறுத் தப்புறத்து
அண்ணல் இருப்பிடம் ஆயந்துகொள் வீரோ.**

“ சிவனடியார்களே, மெய்யடியார்களான சிவஞானிகள் நிலவுலகில் தோன்றும் போது புண்ணியம் பாசம் ஆகிய இரு வினைகளையும் அறிவர். அத்தகையயோர் பிறப்புக்கு வித்தாகிய புண்ணியத்தையும் பாவத்தையும் வேரற நீக்கி முப்பத்தாறு மெய்களையும் கடந்து அப்பாலுள்ள அருள் வெளியில் வீற்றிருக்கும் அண்ணலாகிய சிவபெருமானின் திருவடியே நாம் அடைய வேண்டிய புகலிடம் என்று உணர்ந்து கொள்வார். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1621. **முன்னின் றருளு முடிகின்ற காலத்து**
**நன்னின் றுலகில் நடுவுயி ராய்நிற்கும்**
**பின்னின் றருளும் பிறவியை நீக்கிடும்**
**முன்னின் றெனக்கொரு முத்திதந் தானே**

“ சிவனடியார்களே, நற்றவம் நிறைவுற்றதும் சிவபெருமான் நேரில் தோன்றிஅ ருள்புரிவான் நன்மை நிறைந்த இவ்வுலகில் அனைத்துயிர்கள் உள்ளும் தினையளவு கூட வேற்றுமை இன்றி சிவன் பொதுவாக நின்றருள்வன். எஞ்சு வினைப்படி வரும் பிறவிகளை பின் நின்று நீங்கியருள்வன். நினைப்பில் அவன் வீற்றிருப்பதால் அவனை நினைப்பவர்களுக்கு வீடு பேற்றைத் தந்தருள்வான். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

1622. **சிவனரு ளாற்சிலர் தேவரு மாவர்**
**சிவனரு ளாற்சிலர் தெய்வத்தோ டொப்பர்**
**சிவனரு ளால்வினை சேரகி லாமை**
**சிவனருள் கூடின்அச் சிவலோக மாமே.**

“ சிவனடியார்களே, சிவபெருமானின் ஆணையால் இறைமைத் தொழில்களை ஆருயிர்கள் புரியும். அப்பொழுது அவ்வுயிர்கள் தேவர்களென அழைக்கப்படும். இத்தேவர்களை இயக்கும் அருள் பெற்ற உயிர்கள் அயன் அரி அரன்வேந்தன் என்னும் பெயர்களைப் பெற்று நிற்கும். இத்நிலவுலகில் சிவனருளால் ஒழுக்கமாக வாழ்பவர்களும் தேவர்கள் என அழைக்கப்படுவர். சிவனின் அருளால் இவர்களுக்கு எஞ்சுவினை என்றவினை ஏறுவினை என்னும் மூன்று வினைகளும் சேரமாட்டாது சிவனது அருளைப் பெற்றவர்கள் சிவ உலகைச் சென்றடைவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1623. **புண்ணியன் எந்தை புனிதன் இணையடி**
**நண்ணி விளக்கென ஞானம் விளைந்தது**
**மண்ணவ ராவதும் வானவ ராவதும்**
**அண்ணல் இறைவன் அருள்பெற்ற போதே.**

“ சிவனடியார்களே, அம்மை அப்பராகிய சிவபெருமானைப் புண்ணியன் என்று அழைப்பார்கள். உலக உயிர்கள் எல்லாவற்றிற்கும் அவன் தந்தையாக இருப்பதனால் அவன் எந்தை எனப்படுவான். அவன் யாவரையும் புனிதப்படுத்துவதால் புனிதன் என்று அவன் அழைக்கப்படுகிறான். மெய்யடியார்கள் திருவைத்தெழுத்தை ஓதி அவனடியைச் சேர்வர். அப்படிச்சேருவோரின் உள்ளத்தில் சிவஞானம் விளையும் சிவபெருமானின் திருவருளைப் பெற்ற மண்ணில் வாழ்வோர் சிவ உலகத்திற்குச் சென்று தேவராக வாழ்வர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1624. **காயத்தே ரேறி மனப்பாகன் கைகூட்ட**
**மாயத்தே ரேறி மயங்கு மவையுணர்**
**நேயத்தே ரேறி நிமலன் அருள்பெற்றால்**
**ஆயத்தே ரேறி யவனிவ னாமே.**

‘‘ சிவனடியார்களே, உடம்பாகிய தேரினில் ஏறி மனமாகிய தேரோட்டி சேர்த்து வைக்க மாய வீதிகளாகிய இவ் உலகத்தில் மயங்கும் உயிரினங்கள் திருவடி அன்பாகிய தேரில் ஏறி சிவபெருமானின் திருவருளைப் பெற்று ஆயமாகிய சிவனடியார் திருக்கூட்டத்துடன் சேர்ந்து உயர்வு அடையச் சிவமாம் பெருவாழ்வை உயிர் எய்தும். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1625. **கதிர்கண்ட காந்தங் கனலின் வடிவாம்**
**மதிகண்ட காந்தம் மணிநீர் வடிவாஞ்**
**சதிகொண்ட சாக்கி யெரியின் வடிவாம்**
**எரிகொண்ட ஈசன் எழில்வடி வாமே.**

‘‘ சிவனடியார்களே, சூரியனின் கதிர்களை ஏற்று வெளிப்படுத்தும் கல் கதிர்க்கல் எனவும், சந்திரனின் கதிரை ஏற்று குளிர்ந்த நீரைவெளியேற்றுங்கல் நிலாக்கல் என்றும், தீயினது வெப்பமான கதிர்களை வெளியேற்றும் கல் தீக்கல் எனவும் வழங்கப்படுகிறது. இக்கல்லைச் சக்தி முக்கிக் கல் என்பர். கதிரைக்கண்டவுடன் கதிர்க்கல்லான சூரிய காந்தக்கல் அனலைக்கக்கும். மதியைக்கண்டவுடன் சந்திரகாந்தக்கல்லான நிலாக்கல் குளிர்மையை வெளிப்படுத்தும். தீக்கல் தீயினைக் கக்கும். தனது இடதுகையில் தீயைக் கொண்டுள்ள சிவபெருமான் திருவருளின் துணையால் எழில் வடிவினாய்க் காட்சி தருவான். அக்காட்சியால் ஆருயிர்கள் அனைத்தும் சிவனது நிலையினை எய்தும். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1626. **நாடும் உறவுங் கலந்தெங்கள் நந்தியைத்**
**தேடுவன் தேடிச் சிவபெரு மான்என்று**
**கூடுவன் கூடிக் குரைகழற் கேசெல்ல**
**வீடு மளவும் விடுகின் றிலேனே.**

‘‘சிவனடியார்களே,

## 08. அவவேடம்

## போலிக்கோலம்

1627. **ஆடம் பரங்கொண் டடிசிலுண் பான்பயன்**
**வேடங்கள் கொண்டு வெருட்டிடும் பேதைகாள்**
**ஆடியும் பாடியும் அழுதும் அரற்றியுந்**
**தேடியுங் காணீர் சிவனவன் தாள்களே.**

‘‘ சிவனடியார்களே, வெளியூர் ஒன்றில் இருந்து வந்த போலிச்சாமியார் ஒருவர் சிவன் கோவிலில் நின்ற வேப்பமர நிழலில் இருந்து மக்களுக்குச் உபதேசம் செய்து கொண்டிருந்தார். அவர் கூறுபவை பிழையான தகவல்களாக இருந்தன. ஊரில்

உள்ள வாமதேவன் கைலாயநாதன் போன்றோர் அவருக்கு ஆதரவாக ஊரில் பிரசாசம் செய்து மக்களை அழைத்து வந்தனர். அதைக்கண்ட கதிரேசன் மிக்க கோபம் கொண்டு சிவன் கோவிலுக்கு வந்தார். கூடியிருந்த மக்கள் அவரைக்கண்டதும் விலகிச் சென்றனர். கதிரேசன் அச்சுவாமியாரின் முன் சென்று நின்றார். அச்சுவாமியார் கையை மேலே உயர்த்தி திருநீறு எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார். கதிரேசன் சொன்னார், " நீ சுவாமி என்று சொல்லிக் கொண்டு வந்திருக்கும் போலி வேடதாரி. மெய்யுணர்வைப் பெற்றவன் ஊரில் உள்ள குடிகாரர்களைத் தனது ஏவலாளாக நியமிக்கமாட்டான். நீ இரவில் மதுபானம் அருந்துவதாகக் கேள்விப்பட்டேன். தீயவர்களது தவவேடம் பிறரைப் பயமுறுத்தி வருமானம் பெறுவதாகும். அன்றன்று சோறும் கறியும் உண்பதே அவர்களது நோக்கம். மூடர்களே பிறப்பின் பயன் இதுவா? சிவனது திருவுருவினைக்கண்டவுடன் மெய்மறந்து ஆடியும் திருமுறைகளைப் பாடியும் இன்பக் கண்ணீர் விட்டு அழுதும் அரற்றியும் தொழுவது தான் சிவஞானியின் இயல்பு. நீங்கள் இரவில் கோவிலடியில் மதுபானம் குடிக்கிறீர்கள். அதனால் உடனே கோவிலை விட்டுச் சென்று விடுங்கள் என்று எச்சரித்தவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1628. **ஞானமில் லார்வேடம் பூண்டிந்த நாட்டிடை**
**ஈனம தேசெய் திரந்துண் டிருப்பினும்**
**மான நலங்கெடும் அப்புவி யாதலாம்**
**ஈனவர் வேடங் கழிப்பித்தல் இன்மே.**

" சிவனடியார்களே, கதிரேசன் அங்கு கூடியிருந்த மக்களுக்குச் சொன்னார், " திருவடியுணர்வில்லாத கீழோர் சிவக்கோலம் பூண்டு தீய செயல்களை நல்லவை போலச் செய்து பிறரை வஞ்சித்து உழைக்காது இரந்துண்பத்தையே வழக்கமாகக் கொண்டவர்கள். அவர்கள் இவ்வாறு வாழ்வதால் நாட்டின் பெருமையும் நன்மையும் கெட்டு அழிந்து விடும். அதனால் வேடதாரிகளை அவ்வேடத்தை நீக்கி நாட்டுக்கும் வீட்டுக்கும் நன்மை வரச் செய்வது நல்லோரினது கடமை. உங்களுக்கு எத்தனையோ முறை சொல்லியுள்ளேன். ஒருபோதும் கேட்கிறீர்கள் இல்லை. நோய் வந்தால் வைத்தியரிடம் சென்று மருந்து வாக்குங்கள். ஆச்சிரமத்திற்கு வந்து நீறு பெற்றுப் பூசுங்கள். சிவனை பூக்கொண்டு அர்ச்சியுங்கள். மந்திரத்தால் நோய் சுகமாகாது. ஏனென்றால் வேடதாரிகள் மந்திரம் சொல்வதில்லை. நான்கு வடசொல்லை மனனம் செய்து உங்களை ஏமாற்றுகின்றனர். நமசிவயவுக்கு மேலாக மந்திரம் எதுவும் இல்லை. அதைச் சொல்லுங்கள் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1629. **இன்பமும் துன்பமும் நாட்டா ரிடத்துள்ள**
**நன்செயல் புன்செய லாலந்த நாட்டிற்காம்**
**என்ப இறைநாடி நாடோறும் நாட்டினின்**
**மன்பதை செப்பஞ் செயின்வையம் வாழுமே.**

" சிவனடியார்களே, கதிரேசனை எதிர்க்க அவ்வூரில் யாரும் இல்லை. போலிச்சுவாமிக்கு உதவியாளர்களாக இருந்த வாமதேவனும் கைலாயநாதனும் மெதுவாக நழுவினர். அதைக்கண்ட கதிரேசன் அவர்களை அழைத்துச் சொன்னார், " நீங்கள் திருந்தமாட்டீர்களா? உங்களைப் போன்றவர்களின் செயல்களால் தான் இப்படியான துன்பமான நிகழ்வுகள் நடைபெறுகின்றன. பகலில் ஞான உபதேசம், சிவவேடம் இரவில் குடிவெறி பெண்கள் தொடர்பு. ஒவ்வொருவரும் செய்யும்

நற்செயல்களால் புண்ணியம் சேரும் இன்பத்தைத்தரும். தீய செயல்களால் பாவம் ஏற்பட்டு துன்பம் தான் மிகுந்து நிற்கும். அதை முன்பு உலகை ஆண்ட அரசர்கள் அதனால் நாட்டுக்குத் துன்பமேற்படும் என்று கருதி அவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். இன்று அந்த நிலை இல்லை. அதனால் ஊர்ப் பெரியவர்கள் தான் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். திருந்தாதவர்களைக் காவல்துறையில் ஒப்படைத்தல் வேண்டும். இப்போ நான் என்ன செய்வது சொல்லுங்கள்? என்று அதட்டினார். அவர்கள் இருவரும் பயந்து விட்டனர். தாம் இனிமேல் தீய செயல்களைச் செய்யமாட்டோம் என்று உறுதியளித்தனர் என்றார். ’’ சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1630. **இழிகுலத் தோர்வேடம் பூண்பர்மே லெய்த**
**வழிகுலத் தோர்வேடம் பூண்பர்தே வாகப்**
**பழிகுலத் தாகிய பாழ்சண்ட ரானார்**
**கழிகுலத் தோர்கள் களையப்பட் டாரே.**

‘‘ சிவனடியார்களே, அன்று பிரதோச விரத நாள். வாமதேவன் குளித்து வீபூதி அணிந்து கையில் பூக்களுடன் ஆச்சிரமத்திற்கு வந்த போது அங்கிருந்த எல்லோரும் திகைத்து விட்டனர். அஞ்சாது தீய செயல்களைச் செய்யும் அவன் ஆச்சிரமத்திற்கு வந்ததை ஆசிரியரான ஏகாம் பரத்திதால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவர் சொன்னார், ‘‘ நீ ஏதோ தீய நோக்குடன் தான் இங்கு வந்து இருக்கிறாய். இவ்வளவு காலமும் உயிர்க் கொலை செய்த நீ இப்போது திருந்தி வாழப்போகிறேன் என்பதை எம்மால் நம்ம முடியவில்லை’’ என்று கூறும் போது கதிரேசன் குறுக்கிச் சொன்னார், ‘‘ ஆசிரியரான நீங்கள் இவ்வாறு சொல்லக்கூடாது. பலஞானிகளும் முனிவர்களும் தீய செயல்கள் பலவற்றைச் செய்து அதனால் துன்பப்பட்டுச் சிவனே கதியென்று வந்தது உங்களுக்குத் தெரியாதா..? ஒழுக்கத்தால் தாழ்ந்த குடியிலுள்ளோர் தவக்கோலம் பூணுதல் உயர்ந்த ஒழுக்கத்தைக் கைக் கொண்டு மேலாவதற்கு இது படிக்காதவர்கள் பின் கற்று கற்றவராதலை ஒக்கும். பத்து வயது வரை பாடசாலைக்குச் செல்லாத செல்வேந்திரன் பின் படித்து இன்று வங்கியில் உயர் அதிகாரியாகக் கடமையாற்றுவதைப் போல வாமதேவன் திருந்தி நல்லவனாகட்டும். ஒழுக்கமுள்ளவர்கள் தவக்கோலம் பூண்டால் தேவராகலாம். இழிந்தவர்கள் தவக்கோலம் பூண்டு தகாதன செய்தால் அவர்களை அரசர் நாடு கடத்துவர். பொறுத்திருந்து பார்ப்போம். தீயவர்கள் திருத்துவதற்கு நாம் உதவி செய்தல் வேண்டும் என்றவர் ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1631. **பொய்த்தவஞ் செய்வார் புகுவர் நரகத்துப்**
**பொய்த்தவஞ் செய்தவர் புண்ணிய ராகாரேற்**
**பொய்யத்தவம் மெய்த்தவம் போகத்துட் போக்கியஞ்**
**சத்திய ஞானத்தால் தங்குந் தவங்களே.**

‘‘ சிவனடியார்களே, கதிரேசன் வாமதேவனுக்கு சொன்னார், ‘‘ மகனே, தவத்தை பொய்மையாகச் செய்பவர்கள் நரலோகத்திற்குச் சென்று பல்வேறுபட்ட துன்பங்களை அனுபவிப்பர். பொய்த்தவம் செய்வோர் உழைக்காமல் இருந்து வருமானம் தேடுபவர்கள். அவர்கள் பொய்யும் புரட்டும் சொல்லி மக்களை ஏமாற்றி அவர்களிடமிருந்து பொருட்களைக் கைப்பற்றுவதை நோக்காகக் கொண்டுள்ளனர். நீ சேர்த்திருந்த போலிச்சாமி எவ்வளவு கெட்டவன் என்று உனக்குத் தெரியும். சங்கரப்பிள்ளை மிகவும் வறியவன். அவனது மகளுக்குத் திருமணம்

நடைபெறவேண்டும் என்பதற்காகப் பூசையும் கழிப்பும் கழிப்பதற்காகப் பத்தாயிரம் ரூபா வாங்கினீர்கள். தாய் தோட்டங்களில் கூலி வேலை செய்து ஒரு சோடி காப்பு வாங்கினவள். அதை விற்றுத்தான் பணம் கொடுத்தவள். அது உண்மையான பூசையா? பொய்யான செயல்கள் அது நிகழும் போது இன்பத்தை தரும். பின் பல்வேறு துன்பங்களைத் தரும். பொய்யான பூசை செய்து ஏமாற்றியதால் எத்தனை இடங்களில் அடிவாங்கினீர்கள். இப்போதாவது உணர்ந்து வந்திருக்கிறாய் இனியாவது உண்மையாக நட. சிவனின் அருள் கிடைக்கும் என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1632. **பொய்வேடம் பூண்பர் பொசித்தல் பயனாக**
**மெய்வேடம் பூண்போர் மிகுபிச்சை கைத்கொள்வர்**
**பொய்வேடம் மெய்வேடம் போலவே பூணினும்**
**உய்வேட மாகும் உணர்ந்தறிந் தோர்க்கே.**

'' சிவனடியார்களே, கதிரேசன் மீண்டும் வாமதேவனுக்கும் சொன்னார் , '' மகனே , மெய்க்கோலம் பூண்டாருக்குக்கிடைக்கும் உணவு உடை முதலிய உலகியல் இன்பங்கள் பொய்க்கோலம் கொண்டவர்களுக்கும் கிடைக்கும். பொய்க்கோலம் கொண்டவர்களுக்கு அதிகமாகவும் கிடைக்கும். அவ்வாறு பொய்வேடம் போட்டவர்கள் தமக்குக்கிடைக்கும் இன்பங்கள் கருதித்தாம் மெய்க்கோலம் பூண்டால் இன்றும் மதிப்பாக இருக்கும் என்று எண்ணி மெய்த்தவமும் செய்வர். மெய்த்தவம் புரிவோர் பொய்த்தவம் புரிபவர் மீது பரிவும் கொள்வர். நான் உன்மீது கொண்ட பரிவின் காரணமாகவே உன்னுடன் இப்போது பேசிக்கொண்டிருக்கிறேன். எமது ஆச்சிரமம் புனிதமானது. இங்கு வரும் பலர் தூய்மையானவர்கள். தீயவர்கள் பலர் வருகின்றனர். அவர்கள் காலப்போக்கில் தமது தவறை உணர்வார்கள். எமது சுவாமிக்கு மக்கள் கொடுக்கும் வரவேற்பைப் பார்க்கிறாய் தானே. அதைப் பார்த்தபின்பாவது திருந்து என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

### 09. தவவேடம்

1633. **தவமிக் கவரே தலையான வேடர்**
**அவமிக் கவரே யதிகொலை வேடர்**
**அவமிக் கவர்வேடத் தாகாரவ் வேடந்**
**தவமிக் கவர்க்கன்றித் தாங்கவொண் ணாதே.**

'' சிவனடியார்களே, வாமதேவன் சொன்னார், '' ஐயா, நீங்கள் பெரியவர், உத்தமர், சிவபக்தர். அதனால் தான் உண்மையை உணர்ந்து வாழ்கிறீர்கள். ஏகாம்பரம் போன்றோர் திருந்த நினைப்பவர்களையும் திருந்தவிடமாட்டார்கள். நான் இதுவரை சிவனைப்பற்றி எண்ணுவதில்லை. மகாசிவராத்திரியன்றும் ஒரு ஆட்டுக்கடாவை வெட்டி அதன் இறைச்சியை ஊரில் உள்ள பெரிய மனிதர்களுக்கு கொடுத்தேன். கந்தசாமி உயர்அதிகாரி. அவர் சாராயம் குடிக்காமல் இருக்கமாட்டார். குடித்தால் மாமிசம் வேண்டும். இப்படியானவர்களால் தான் நான் நிர்ப்பந்திக்கப்பட்டு உயிர்க்கொலை செய்கிறேன். எனது மகள் பல்கலைக்கழகத்தில் படிக்கிறாள். அவளுடன் கந்தசாமியின் மகளும் படிக்கிறாள். அவள் என்னைப் பற்றித் தரக்குறைவாக மாணவர்களுக்குச் சொன்னதால் அவள் பல்கலைக்கழகத்திற்குச் செல்ல மறுக்கிறாள். அதனால் தான் ஐயா நான் திருந்தினேன். எனது மகள் என்னை அப்பா என்று அழைப்பதில்லை. வனவேடன் என்றே அழைப்பாள். இனிமேல் நான் மாமிசம் உண்ணமாட்டேன் என்று எனது மகளுக்குச் சொல்லி அவளைப்

பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவையுங்கள் என்று அழுதவன் என்றார். '' சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1634. **பூதி யணிவது சாதன மாதியிற்**
**காதணி தாம்பிர குண்டலங் கண்டிகை**
**ஓதி யவர்க்கும் உருத்திர சாதனந்**
**தீதில் சிவயோகி சாதனந் தேரிலே.**

'' சிவனடியார்களே, அன்று பிரதோச விரத நாள். விசேட தினங்களில் நாம் பிரமுகர் ஒருவரை அழைத்துப் பேசவைப்போம். தினமும் நாம் பேசுவதால் சிலர் சலிப்படைகின்றனர். அதனால் அயலூரில் வாழும் பண்டிதரான பஞ்சாட்சரத்தைப் பேசுவதற்காக அழைத்திருந்தோம். அவர் சொன்னார், ''மெய்யடியார்களே இன்று ஆச்சிரமங்கள், சைவமன்றங்கள், இந்துசபைகள் என்று ஆரம்பித்துத் தமது மதிப்பை உயர்த்த நினைக்கின்றனர். சிலர் தமது வருமானத்தைப் பெருக்குகின்றனர். இந்த ஆச்சிரமம் உண்மையானது. சைவப்பணிகளைச் செய்வது. ஆச்சிரமத்தில் சுவாமிகள் என்று இருப்பவர்களில் பலர் ஆடம்பரமான வாகனங்களில் பிரயாணம் செய்கிறார்கள். வீடு மனை வாங்குகிறார்கள். மிகமிக வசதியாக வாழ்கின்றனர். அவர்கள் அப்படி வாழட்டும். அதைச்சிவன் கவனித்துக் கொள்வார். அடியார்களே, சிவ அடையாளங்களுக்குள் முதன்மை வாய்ந்தது திரு வெண்ணீறு. அதை ஐந்தெழுத்தை ஓதிய படி அணிதல்வேண்டும். இந்திருவெண்ணீறு உடலின் பலபாகங்களிலும் அணியப்படுவது. அத்துடன் செம்பொன்னினால் செய்யப்பட்ட இரண்டு குண்டலங்களை இரண்டு காதுகளிலும் அணிதல் வேண்டும். சிவமணிகள் முப்பத்திரண்டைக் கொண்ட மாலையை அணிதல் வேண்டும். எந்நேரமும் ''சிவசிவ'' என்று சிவனது நாமத்தை மனதில் நினைத்தல் வேண்டும். இவையே சிவ அடையாளங்களாகும். சிவயோகிக்கும் இவையே அடையாளங்களாகும். ஆகையால் சைவமக்கள் எப்போதும் வெண்ணீறு அணிந்திருந்தல் வேண்டும். அத்துடன் சிவமணி மாலையையும் குடும்பத்தவர்கள் அணியலாம். குடும்பப்பொறுப்பை முடித்துச் சிவசேவைக்கு வருவோர். குண்டலங்கள் இரண்டைக்காதில் அணிதல் வேண்டும். என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1635. **யோகிக் கிடுமது வுட்கட்டுக் கஞ்சுளி**
**தோவைக்குப் பாசத்துச் சுற்றுஞ் சடையதொன்**
**றாகத்து நீறணி யாங்கக் கபாலஞ்**
**சீகத்த மாத்திரை திண்பிரம் பாகுமே.**

'' சிவனடியார்களே, பஞ்சாட்சரம் தொடர்ந்து உரையாற்றினார். சாதாரணமாக சிவனை வணங்குவோர் சிவனடியார்களாவர். மெய்யன்போடு வணங்குவோர் அதாவது எந்தப்பற்றும் இல்லாமல் கோரிக்கைகள் இன்றி வணங்குவோர் மெய்யடியார்கள் உலகப்பற்றின்றிச் சிவனது திருவடியை அடையவெனச் சகலவற்றையும் துறந்தோர் சிவயோகிகள். சிவயோகிகள் கோவணம் கட்டியிருப்பார்கள். தனது உடலைப்போர்வையால் போர்த்தியிருப்பார்கள். திருச்சபையில் மயிலிறகால் செய்த குல்லா அணிந்திருப்பார்கள். உடம்பு முழுவதும் திருநீறு அணிந்திருப்பார்கள். இடதுகையில் மண்டையோட்டையும் வலது கையில் பிரப்பம் கோலும் வைத்திருப்பார்கள். இவைதான் சிவயோகியின் அடையாளமாகும். ஏனைய சிவனடியார்கள் நெற்றியிலும் அவயவங்களிலும் நீறு அணிந்திருந்தல் வேண்டும்.

முப்பத்திரண்டு சிவ மணிகளைக் கோர்த்துக்கட்டியிருக்கலாம். (சிவமாலை உருத்திராக்கம்) என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்த சுவாமிகள்.

1636. **காதணி குண்டலங் கண்டிகை நீறும்**
**ஊதுநற் சங்கும் உயர்கட்டி கப்பரை**
**ஏதமில் பாதுகம் யோகாந்த மாதனம்**
**ஏதமில் யோகபட் டந்தண்டம் ஈரைந்தே.**

'' சிவனடியார்களே, பஞ்சாட்சரம் தொடர்ந்து உரையாற்றினார், '' சிவனடியார்களே, காதணியாகிய குண்டலமும், சிவமணியாகிய உருத்திராக்கமும், ஓசை எழுப்பும் திருவைந்தெழுத்தும், வெண்சங்கும், பிச்சாபாத்திரமும், திருநீற்றுமடலும், பாதணியும், பொருத்தமான இருக்கையும், யோகப்பட்டமும், யோகத்தண்டும் ஆகிய பத்தும் சிவயோகியின் வசம் இருக்க வேண்டியவை. மது, மாமிசம் புசிக்காதவர்கள் பஞ்சமாபாதங்களைச் செய்யாதவர்கள் ஒழுக்கமானவர்கள் சிவ நிந்தனை செய்யாதவர்கள். தான் நீறும் மாலையும் அணிதல் வேண்டும். மற்றவர்கள் அணிந்தால் பாவம் தான் சேரும் என்றவர் '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 10. திருநீறு

1637. **நூலுஞ் சிகையும் உணரார்நின் மூடர்கள்**
**நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்**
**பாலொன்றும் அந்தணர் பார்ப்பார் பரமுயிர்**
**ஓரொன் றிரண்டினில் ஓங்காரம் ஓதிரே.**

'' சிவனடியார்களே, பஞ்சாட்சரம் தொடர்ந்து பேசினார், '' சைவசமயத்திற்கு அடையாளம் உண்டு. முன்பு சொன்னவை புற அடையாளங்கள். அகநிலையை உணர்த்தும் புற அடையாளங்கள் நூலும் சிகையுமாகும். இதை உணராதவர்கள் மூடர்களாவர். நூல் என்பது மறை முடிவான ''சிவயநம'' ஆகும். சிகை என்பது அச்சிவயநம என்பதன் மந்திரப்பயனான திருவடியுணர்வாகும். அது தான் சிவஞானம் அச்சிவஞானத்தின் வழிநிற்பவர்கள் அந்தணராவர். பார்ப்பாராகிய அத்தணராவர். பார்ப்பராகிய மெய்கண்டார் ஓங்காரத்தின் கண் உகரம் புரமாகவும், அகரம் உயிராகவும் கொள்வர். இனம்பற்றி மகரம் தாளையாகக் கொள்ளப்படும் என்றார். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1638. **கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை**
**மங்காமற் பூச மகிழ்வரே யாமாகில்**
**தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி**
**சிங்கார மான திருவடி சேர்வரே.**

'' சிவனடியார்களே, பஞ்சாட்சரம் தொடர்ந்து பேசினார், '' அடியார்களே, அயன் அரி என்ற இருவரினதும் எலும்புக் கூட்டினைச் சுமக்கின்ற சிவபெருமான் கங்கா தரன் எனப்படுவான். அவன் ஆருயிர்கள் உய்வதற்குக் கவசம் திருநீறு என்றுணர்ந்து அத்திரு நீற்றை அணிந்துள்ளான். அத்திரு நீறு எப்பொழுதும் மங்காமல் பூசியிருப்போர்க்குக் எத்தகைய வினைகளும் துன்பங்களும் சேரமாட்டாது. அவர்கள் சிவனைச் சார்வார்கள். திருவடிப்பேறும் கிட்டும். அடியவர்களே பேய்பிசாசுகள் துட்ட

ஆவிகள் திருநீற்றைக் கண்டவுடன் அஞ்சி ஓடிவிடும். அதனால் திருநீற்றை அணிந்திருங்கள். வெளியூர்களுக்குச் செல்லும் போது திருநீற்றைக் கொண்டு செல்லுங்கள். அங்கு நல்ல செயல்களைச் செய்யமுன் முகங்கழுவி நீற்றைய பூசிய பின் செய்யுங்கள். யாவும் நல்லபடிமுடியும். என்னிடம் வரும் அடியவர்களுக்கு நான் நமசிவய என்ற மந்திரத்தைச் சொல்லி நீறு கொடுப்பேன். அவர்களும் ‘‘நமசிவய’’ என்ற மந்திரத்தைச் சொல்லித் திருநீற்றைப் பூசுவார்கள். அதனால் எந்தநோயும் மாறும். சிக்கல்கள் தீரும். துன்பங்கள் போகும் என்றவர் ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1639. **அரசுட னாலத்தி யாகும்அக் காரம்**
**விரவு கனலில் வியனுரு மாறி**
**நிரவயன் நின்மலன் தாள்பெற்ற நீதர்**
**உருவம் பிரமன் உயர்குல மாமே.**

‘‘ சிவனடியார்களே, பஞ்சாட்சரம் தொடர்ந்து பேசினார், ‘‘ திருநீறு எனப்படுவது அரசு ஆல் அத்தி ஆகிய மூன்று சுள்ளிகள். சிவபெருமான் வீற்றிருக்கும் எட்டுத்திருவுருவங்களின் ஒன்றாகிய சிவவேள் வித்தீயின் கண் ஒளிவிட்டு எரிந்து உருமாறிக் காரியமாகக் காணப்படுவது உருவம் அருவம் அருவுருவம் என்னும் மூன்று நிலையும் கடந்த சிவபெருமானின் திருவடியினை வணங்கும் மெய்யடியார்களின் திருவுருவுமாகும். அவர்களை திருவடிச்செல்வத்தினர் ஆவர். அவர்கள் தான் மெய்ப்பொருளை உணர்ந்த உயர்ந்தவர்கள். இட்டார் பெரியோர் என்பார்கள். அது திருநீற்றை இட்டவர் பெரியவர். இடாதோர் இழிந்தவர் எனப்பொருள் பெறும். இது தவிர்ந்த பொருள்கள் யாவும் தமிழ் மரபுக்கு ஒவ்வாதவை. இதை மக்கள் நன்குணர வேண்டும். தீய செயல் களைச் செய்யமட்டேன் என்று நீற்றை இட்டால். அந்நீறு தீய செயல்களைச் செய்யவிடாது தீயவை அணுகவும் விடாது என்றவர். ’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 11. ஞானவேடம்

1640. **ஞானமி லார்வேடம் பூண்டும் நரகத்தர்**
**ஞானமுள் ளார்வேடம் இன்றெனில் நன்முத்தர்**
**ஞான முளதாக வேண்டுவோர் நக்கன்பால்**
**ஞான முளவேட நண்ணிநிற் பாரே**.

‘‘ சிவனடியார்களே, வாமதேவன் சில நாட்களுள் பெரும் சிவபக்தனாகிவிட்டான். கைலாயநாதன் வந்து சாராயத்தைக் கொடுத்த போதும் அவன் குடிக்கவில்லை அவர்களது தொந்தரவைத் தாங்க முடியாத அவன் கதிரேசனது வீட்டுக்கு வந்து நடந்தவற்றைச் சொல்லக் கதிரேசன் அவனைத் தனது வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருக்கும்படி கூறினார். கதிரேசனின் தேவைக்காக நல்ல இனப்பசுவொன்றை வளர்த்து வந்தார். அது கன்று ஈன்றதால் தாய்மை பெருகிவிடும். பக்கத்து வீட்டுப் பசுக்கன்று வந்தாலும் அதைப்பால் குடிக்கவிட்டுவிட்டு நக்கும். நல்லை நாதன் சொல்வார், ‘‘ நீங்கள் வளர்ப்பதால் உங்கள் குணம் அதற்கும் வந்து விட்டதென்று ’’ வாமதேவன் பால்கறக்க அதற்குக் கிட்டச்சென்றால் அது காலால் உதைக்கும். முரட்டுத்தனமாக இடிக்கும். அதனால் வாமதேவன் அதற்குக் கிட்டச்செல்வதில்லை. அதனால் கதிரேசன் சொன்னார், ‘‘தேவா அதற்கு அருகே செல்லாதே. மிருகங்களுக்கு யமன் பேய் பிசாசு வருவது கூடத்தெரியும். உன்னை

அது அறிந்துள்ளது. மனிதனுக்கு ஆறு அறிவுண்டு என்று சொல்வது தவறு. மிருகங்களுக்கு எல்லாம் தெரியும். அவை மனிதனை மட்டுமல்ல ஏனைய கோள்களையும் தமது மருத்துவத்தையும் அறிந்து வைத்துள்ளன. எனது நாய் சிலவேளைகளில் என்னை வீட்டை விட்டுச் செல்லவிடாது. சில நிமிடங்களில் முக்கியமானவர்கள் வருவார்கள். அது அதற்குத் தெரியும். திருவடிஉணர்வு இல்லாதவர்களைப் பார்த்தவுடன் தெரிந்து கொள்ளலாம். எப்படித்தான் அவர்கள் வேடமிட்டாலும் அவர்கள் நகரத்திற்குத் தான் போவர்கள். திருவடி உணர்வு உள்ளவர்கள் அவ்வேடம் தாங்காவிட்டாலும் அவர்களைக் கண்டு கொள்ளலாம். அவர்கள் திருவடியை அடைவார்கள். சிவபெருமானிடத்துப் பேரன்பு பூண்டவர் ஞானவேடத்தில் பொருந்தி நின்று நல்லவற்றையே செய்வார். நீ கவலைப்படாதே. சிவன் திருந்தியவர்களை ஏற்பது போல எனது பசுவும் உன்னை ஏற்கும் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1641. **புன்ஞானத் தோர்வேடம் பூண்டும் பயனில்லை**
**நன்ஞானத் தோர்வேடம் பூண்பர் அருள்நண்ணத்**
**துன்ஞானத் தோர்சம யத்துரி சுள்ளோர்கள்**
**பின்ஞானத் தோரொன்றும் பேசகில் லார்களே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் வாமதேவனுக்குச் சொன்னார், “ தேவா சிவனை வணங்குகிறேன் என்று கூறிவிட்டுச் சிற்றுணர்வுகளுக்காடபட்டுத் தீய செயல்களைச் செய்வோர் சிவனை வணங்குவாதலோ அல்லது நமசிவய என்ற மந்திரத்தைச் சொல்வதாலோ பயனடையமாட்டாாகள். அறியாமை மிக்கோர் தத்தம் சமயம் தான் மெய்ச்சமயமென்றும் ஏனைய சமயங்கள் பொய்ச் சமயங்கள் என்றும் ஆதாரமின்றிச் சொல்வர். அவர்கள் குற்றமுடையவர்கள். மூடர் என்று நினைத்து எதுவும் சொல்வார். அதனால் தான் உனது போலிச்சாமியைப் பற்றி நான் எதுவும் கூறவில்லை. நீ மனம் மாறிய போதும் நான் நம்பவில்லை. உனது நண்பரைப் பற்றி அறிந்து கொண்டேன். உனது மனம் மாறியதை ஏற்ற பின்பு தான் நன உன்னை எனது வீட்டில் வேலைக்கமர்த்தினேன். நீ பொய்வேடம் தரிக்கவில்லை. உனது மனமாற்றத்தால் உனது குடும்பம் மேன்மை அடையும் என்றவர். ” என்றார் சுந்தர மூர்த்த சுவாமிகள்.

1642. **சிவஞானி கட்குஞ் சிவயோகி கட்கும்**
**அவமான சாதனம் ஆகாது தேரில்**
**அவமா மவர்க்கது சாதன நான்கும்‘**
**உவமான மில்பொருள் உள்ளுற வாமே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் வாமதேவனுக்குக் சொன்னார், “ நன்கு தெரிந்தும் கற்ற பலர் தீய செயல்களைச் செய்து கிடைத்தற்கரிய மானிடப்பிறப்பின் மாண்பை இழக்கின்றனர். தீய செயல்களை அஞ்சாமல் செய்து துன்பப்படுகின்றனர். அவர்கள் கற்றகல்வியால் தீய வழிகளில் பணம் சம்பாதிக்க முயற்சிக்கின்றனர். நல்லவர்களான சிவஞானிகள் தீய செயல்களைச் செய்யாது சிவனை வணங்கித் தமக்குப் தமது பிற்சந்ததியினருக்கும் நன்மையைத் தேடிக்கொடுக்கின்றனர். சீலம் நோன்பு செறிவு அறிவு மூலம் சிவனது திருவடியை அடையலாமென்று தெரிந்த உயர் அதிகாரியான கந்தசாமி இப்போதும் வந்து தனக்கு மதுபான வகைகளை வாங்கீத்தரும்படியும் மாமிசம் சமைத்துத்தரும் படியும் வற்புறுத்துகிறானென்றால் அவர் கற்ற கல்வியால் என்ன பயன் கற்றவர்கள் தாம் கற்ற கல்வியாலும் நல்லவற்றை உணரமாட்டார்கள். வேறு யார் சொன்னாலும் கேட்கமாட்டார்கள். அவர்களைச் கேட்க ஆணவம் விடாது.

இறுதிக்காலத்தில் அவதிப்படும் போது தான் புண்ணியத்தின் அருமை தெரிய வரும் என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1643. **கத்தித் திரிவர் கழுவடி நாய்போன்று**
**கொத்தித் திரிவர் குரக்களி ஞானிகள்**
**ஒத்துத் பொறியும் உடலும் இருக்கவே**
**செத்துத் திரிவர் சிவஞானி யோர்களே.**

'' சிவனடியார்களே, வாமதேவனின் மனைவி ருக்மணி கதிரேசனுக்கு நன்றி சொல்ல வேண்டும். ஆதலால் தன்னைக் கதிரேசனோடு பேச அழைத்துச் செல்லும்படி பலமுறை வாமதேவனைக் கேட்டும் அவன் அழைத்துச் செல்லாததால் அவள் வாம தேவனுக்குச் சொல்லாது கதிரேசனது வீட்டுக்கு வந்த போது அவளை மகிழ்வுடன் வரவேற்ற கதிரேசன் தனது மனைவியை அழைத்து ருக்குமணிக்கு உணவு கொடுக்குமாறு கூறிவிட்டுச் சுவாமி அறைக்குள்ச் சென்றுவிட்டார். அப்போது அங்கே வந்த வாமதேவன் தனது மனைவியைக் கண்டு திகைத்துப் போனான். பின்பு அவளிடம் வந்த போது கதிரேசனின் மனைவி அவளுக்குச் சொன்னாள், '' அவருடன் நானே கதைக்க முடியாது. ஏதாவது சமயம் சம்பந்தமாக வந்தால் மட்டும் இரண்டொரு நிமிடம் கதைத்து விட்டுச் சுவாமி அறைக்குள்ச் சென்று விடுவார். இப்போது அவருக்குக் கதைப்பது பிடிப்பதில்லை. மெய்யுணர்வு இல்லாதவர்கள் தான் கண்டபடி கதைப்பார்கள். கழுமரத்தடியில் நிற்கும் நாயைப்போலக் குரைப்பார்கள். குரங்கு போலத்தாவும் மனத்தை உடைய சிலர் கழுகு போலக் கொத்தித்திரிவர். மெய்யடியார்கள் கதைக்கமாட்டார்கள். என்னைக் குளப்பாதே என்பார். நன்றி சொல்லத்தேவையும் இல்லை. அதை அவர் விரும்பவும்மாட்டார். என்றவள். அதைக்கேட்ட வாமதேவன் சொன்னான், '' இதைத்தானே நானும் சொன்னேன். அவர் பொழுதை அவப்பொழுதாகக் கழிக்க விரும்பமாட்டார் என்றவன். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1644. **அடியா ரவரே யடியா ரலாதார்**
**அடியாரு மாகாரவ் வேடமு மாகார்**
**அடியார் சிவஞான மானது பெற்றோர்**
**அடியா ரலாதார் அடியார்கள் அன்றே.**

'' சிவனடியார்களே, அதைக் கேட்டுக் கொண்டிருந்த நல்லைநாதன் சொன்னார், '' அறுபது எழுவது ஆண்டுகளாக கதிரேசனுடன் நான் பழகி வருகிறேன். இளைஞர்களாக இருந்த போது பகல் இரவு என்று பாராமல் கதைப்போம். அது பலகாலம் நீடித்தது. இப்போ அவனைக்கண்டாலே போதும் என்ற நிலை. சிவனைப்பற்றி ஏதாவது புதிய விடயத்தைக் கேள்விப்பட்டால் கதைப்பார். இல்லாவிட்டால் திருக்கோவில்களுக்குச் செல்ல வேண்டும் சிவனடியார்களுக்குச் சொல் என்பார். அவ்வளவு தான் கோவிலுக்கு வந்தால் தியானம். பின் வீடு நல்லது கெட்டது எதுவும் கதைக்க முடியாது. எனது பேர்த்திக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்து பதினைந்து நாட்களாயிற்று. இன்னும் அவருக்குச் சொல்லமுடியவில்லை. தன்முனைப்பற்று அதன் வழி இயங்கும் மெய்யுணர்வினர் மெய்யடியராவர். அவர்களோடு உறவாட முடியாது. அவர்கள் எந்நேரமும் சிவனுடன் இருப்பார்கள். அப்படி இல்லாதவர்கள் மெய்யடியார் ஆகார். அவர்கள் கொள்ளும் கோலமும் சிவக்கோலமல்ல. என்ன சொல்வது நான் பொறுத்துப் பொறுத்து மனிதத்தன்மையை இழந்து விட்டேன். என்று கவலைப்பட்டவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1645. **ஞானிக்குச் சுந்தர வேடமும் நல்லவாந்**
**தானுற்ற வேடமுந் தற்சிவ யோகமே**
**ஆனவவ் வேடம் அருண்ஞான சாதனம்**
**ஆனது மாமொன்றும் ஆகா தவனுக்கே.**

“ சிவனடியார்களே, சிவஞானிக்கும் சுந்தரமூர்த்தி நாயனாரைப் போன்ற மணவாளக்கோலம் மிகுந்த அழகைக் கொடுக்கும். அத்துடன் பயனையும் கொடுக்கும். சில சமயங்களில் கதிரேசன் பட்டுவேட்டி கட்டிப் பட்டுச்சட்டையும் போட்டுத் தலைப்பாகையுடன் வந்தாரேயானால் மணமகனைப்போலத்தான் இருப்பார். அன்று யாராவது சந்தித்து ஏதாவது உதவிகள் கேட்டால் அவர்கள் கேட்டதிலும் பார்க்க இரட்டிப்பாகக் கொடுப்பார். அன்று மணவாளக்கோலத்துடன் வந்த கதிரேசனை நல்லைநாதன் சந்தித்துத் தான் பூட்டன் ஆகிவிட்டேன் என்று கூற அவர் உடனே நல்லைநாதனின் வீட்டுக்குச் சென்று நல்லை நாதனின் பூட்டனைத் தூக்கி முத்தமிட்டு விட்டு பிரதோச நாளில் பிறந்தமையால் கெங்காதரன் என்று பெயர்வை என்றவர். அதைக்கேட்டு மகிழ்ந்த நல்லைநாதன் தகப்பன் சென்றவாரம் கெங்காதரன் என்று தான் பெயர் சூட்டினவர் என்று சொன்னவர் கதிரேசன் மனம் மகிழ்ந்து வாழ்த்தி விட்டுத் ஒரு சங்கிலியைப் பரிசளித்தவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1646. **ஞானத்தி னாற்பத நண்ணுஞ் சிவஞானி**
**தானத்தில் வைத்த தனியால யத்தனாம்**
**மோனத்த னாதலின் முத்தனாஞ் சித்தனாம்**
**ஏனைத் தவசி இவனென லாகுமே.**

“ சிவனடியார்களே, திருவடியுணர்வாகிய ஞானத்தினால் சிவநிலை எய்துவோன் சிவஞானியாவான். இவன் நடமாடும் கோவிலாவான். இவன் தனிப் பெருங்கோவிலுமாவான். வீண்கதைகள் பேசாது எவ்வேளையிலும் மோன நிலையில் இருப்பதால் அவன் வீடு பேறடைந்த முத்தனாவான். அத்துடன் திருவடிப்பேறடைந்த சித்தனுமாவான். உண்மைக்கோலமில்லாதவேட தாரிகள் இவனோடு ஒத்துப் பேசத் தகுதியில்லாதவராவர். ”

“ சிவனடியார்களே, இப்போது கதிரேசன் கதைப்பதை முற்றாக நிறுத்திக் கொண்டு மோன நிலையில் இருப்பார். உண்மையான மெய்யுணர்வுள்ளவர்கள் அவரைத் தேடிவந்தால் அவருத்தெரியும். அவர் மோனம் கலைத்து வந்த வரை வரவேற்று உபசரித்து அனுப்புவார். அப்போது அவரது மனைவி சொல்வாள் இப்போது வந்தவரோடு மகிழ்ந்து உரையாடுவது போலத் திருமணமான நாளில் கூட அவர் என்னுடன் ஆற அமர இருந்து உரையாடவில்லை. அப்போது நாம் மிகவும் ஏழைகளாக இருந்தமையால் கடுமையாக உழைத்தார். பிள்ளைகளை வளப்பதற்காகப் பொருள்தேடினார். பின் சிவசேவை செய்ய ஆரம்பித்தார். இப்போ மோன நிலையில் இருக்கிறார். சிவனடியார்கள் வந்தால் தான் மகிழ்ந்து சிரித்துக் கதைப்பார். அதற்காக நாம் சிவனடியார்கள் தினமும் வரவேண்டுமென்று சிவனைப் பிரார்த்திப்போம். என்பாள். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1647. **தானற்ற தன்மையுந் தானவ னாதலும்**
**ஏனைய வச்சிவ மான இயற்கையுந்**
**தானுறு சாதக முத்திரை சாத்தலு**
**மேனமும் நந்தி பதமுத்தி பெற்றதே**

“ சிவனடியார்களே, யான் எனது என்ற செருக்கற்ற தன்மையும், சிவனருளால் தான் சிவனாதலும், மற்றய உலகங்களில் காணப்படும் பொருட்கள் அனைத்தும் சிவனருளால் சிவமாகக் காணப்படுத்தலும், தான் கொண்ட கோலத்திற்குத் தக்கவாறு பழக்க வழக்கங்களைக் கைக்கொள்ளலும் நந்தியாகிய சிவனது திருவடி நிலையைப் பெற்றவர்களது அடையாளங்களாகும். ”

“ சிவனடியார்களே, கதிரேசன் பெரும்பணக்காரர். ஆனால் ஆபரணங்கள் எவையும் அணித்ததில்லை. ஒரு வெள்ளை வேட்டி. ஒரு சால்வை. மார்பில் சிவமணிமாலை. காதில் குண்டலங்கள். கையில் பிரம்பு. மறுகையில் உண்கலம். இவைவேற்றுருக்குச் செல்வதனால் மட்டும் அணிந்து கொள்வார். பணம் கையில் வைத்திருக்கமாட்டார். பணத்தை நல்லைநாதன் வைத்திருப்பார். யாருக்காவது உதவி செய்யவேுண்டிவந்தால் நல்லைநாதா சிவன் எனக்குத் தந்த பிச்சைப்பணத்தில் சிவனுக்கு ஐயாயிரம் ரூபா கொடு என்பார். இது ஞான வேடம் பூண்டவரின் செயலாகும்” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

## 12 சிவவேடம்

1648. **அருளால் அரனுக் கடிமைய தாகிப்**
**பொருளாந் தனதுடற் பொற்பதி நாடி**
**இருளான தின்றி யிருஞ்செயல் அற்றோர்**
**தெருளாம் அடிமைச் சிவவேடத் தோரே.**

“ சிவனடியார்களே, திருவருளின் துணையால் சிவபெருமானுக்கு அடிமையாகி அச்சிவனாரின் உடைமையாகிய தன் உடல் சிவனார் உறையும் கோவில் என்று நாடுதலாகிய மெய்யுணர்வு கொள்வதால் அறியாமையாகிய மல இருள் நீங்கும் அவ்விருள் நீங்கியவுடன் தன்முனைப்பால் செய்யும் இருவகைச் செயல்களும் அகலும். இவை அகன்றதும் அகன்றவர் சிவனது மீனா அடிமையாவர். அவர் கொண்ட சிவக்கோலமே மெய்யான தவக்கோலமாகும்.

“ சிவனடியார்களே, ஒரு முறை கதிரேசன் சிவனடியார் கூட்டத்துடன் அயலூரில் உள்ள சிவன் கோவிலுக்குச் சென்றார். அச்சிவன் கோவிலில் கும்பாபிசேகம் பெற்றது. ஒரு சிவனடியார் சிவசின்னங்ளை அணிந்து கொண்டு வந்து அவரை வணங்கிய போது கதிரேசனும் வணங்கினார். அப்போது அவர் சொன்னார், “ நான் சிவபக்தன் ஆகம விதிப்படி சிவனை வணங்கி வருகிறேன். ஆனால் நான் பறைமேளம் அடிப்பதால் என்னைக் கோவிலினுள் விடுவதில்லை. எனது இனததவர்கள் சைவர்கள் செய்யும் கொடுமையால் மனம் மாறிப்புறச்சமயங்களுக்குச் சென்று விட்டனர். எனக்கு விருப்பமில்லை. நான் சிவனுடன் இருக்கிறேன். சிவன் என்னுடன் இருக்கிறார். ஆகையால் கோவிலுள்ச் செலல விரும்பவில்லை. எமக்கென ஒரு சிவன் கோவில் இருக்கிறது. ஆனால் இவர்கள் வருவதில்லை. சிவனில் சாதி குறைந்த சிவன் இருக்கிறாரா? தயவு செய்து ஒரு பூசகனை நியமிக்க ஒழுங்கு செய்யுங்கள் என்றார். அதற்குக் கதிரேசன் சொன்னார், “அடியவரே உமது சிவனைப் பார்ப்போம். என்று கூறி அக்கோவிலுக்குச் சென்று சிவனை வழிபட்டுவிட்டுச் சென்னார், “ சிவன் தன்னை மெய்யன்புடன் வழிபடுவோரை அன்புடன் நேசிப்பான். அந்தநேசிப்புத் திருவடிவரை சென்றால் அவர் சிவஞானியாகி விடுவார். அதன் பின் அவர் சிவனுமாவார். அதனால் நீரே சிவனுக்குத் தமிழ் மந்திரங்களைச் சொல்லிப் பூசியும். நான் இங்கேயே தங்கி ஆகவேண்டியவற்றைக் கவனிக்கிறேன். இன்றிலிருந்து நான் இவ்வூரை விட்டுச் செல்லும் வரை உமது வீட்டில் தான் உணவருந்துவேன் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1649. **உடலில் துவக்கிய வேடம் உயிர்க்காகா**
**உடல்கழன் றால்வேடம் உடனே கழலும்**
**உடலுயிர் உண்மையென் றோர்ந்துகொள் ளாதார்**
**கடலில் அகப்பட்ட கட்டையொத் தாரே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், “ அடியார்களே உடலில் போடப்படும் வேடமாகிய திருக்கோலம் உயிரோடு பொருத்தி அதற்குத்துணையாக அமையாது. உயிர் நீங்கும் போது போட்ட வேடமும் நீங்கி விடும். உடலில் தங்கும் உயிர் அழியாத பொருளாகும். இந்த உண்மையினை உணராதவர் கடலில் மிதக்கும் மரக்கட்டை அங்கும் இங்கும் அசைவதைப் போன்று பிறவிப் பெருங்கடலை நீந்தமாட்டாது. பிறந்து இறந்து துன்பக்கடலில் தடுமாறுவர் என்று பெரியவர்கள் சொல்லியுள்ளனர். நாய் வேடம் போட்டவன் குரைக்காவிட்டால் அவ்வேடமிட்டோர் உயர்வு தாழ்வு சாதி என்பனவற்றைப் பார்த்து பழகினால் நாய் வேடமிட்டவன் குரைக்காது வேறு செயலைச் செய்வதை ஒக்கும். சிவவேடம் போடுவோர் தகுதி பார்த்தால் அது அவவேடமாகி விடும் இதை யாரும் உணர்வதில்லை. பிறப்பால் வரும் சாதி ஒழுக்கத்தால் மாறி விடும் என்று வேதங்களும் உபநிடதங்களும் கூறுகின்றன. அதைப் படித்தபின்பும் அவ்வாறு நடந்து கொள்வோரைச் சிவன் விரும்பமாட்டான். ஏனென்றால் சிவன் எல்லா உயிர்களிலும் உயர்வு தாழ்வு சாதி பாராது சமமாகவே இருக்கின்றான். இதைத் தெரிந்தும் பின்பற்றாதவர்கள் மூடர்கள் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1650. **மயலற் றிருளற்று மாமன மற்றுக்**
**கயலுற்ற கண்ணியர் கையிணக் கற்றுத்**
**தயலற் றவரோடுந் தாமேதா மாகிச்**
**செயலற் றிருந்தார் சிவவேடத் தாரே.**

“ சிவனடியார்களே, உலகப் பொருட்களில் மயங்குதலை விடுத்து அதற்கு அடிப்படையாகிய ஆணவ வல்லிருளை அகற்றி, அதன் மூலம் காரியமாற்றி, மனம் என்நேரமும் நினைத்தேங்கும் கயல் போன்ற பொது மகளிரின் தொடர்புகள் இன்றி, இவை எதுவும் இல்லாத பொதுவான மனம் படைத்த பெண்களின் உறவை வெறுத்தொதுக்கிய மெய்யடியார்களுடன் உறவு கொண்டு வாழ்பவனே உண்மையான சிவக்கோலத்தவராவர். உங்களைப் பார்த்தால் மேற் சொன்ன குற்றங்கள் எவையும் இல்லாதவர் போலத் தெரிகிறீர்கள். நான் சொல்வது சரியா என்று கேட்க அந்தப் பறைமேளம் அடிப்பவன் சொன்னான், “ சுவாமி தங்களைப்பற்றி நான் நிறையக் கேள்விப்பட்டிருக்கிறேன். தாங்கள் மனுநீதி கண்ட சோழனைப் போன்றவர். அதனால் தான் எனது விருப்பத்தைச் சொன்னேன். சிவனை நினைத்துத் திருமணம் கூடச் செய்யாது வாழ்கிறேன். திருமணம் செய்தால் மனைவியை நல்ல முறையில் கவனிக்க வேண்டும். அதற்குப்போதிய வருமானம் இல்லை. அத்துடன் வறுமையும் மனைவியும். எனது சிவத்தொண்டுக்கு இடைஞ்சலாக இருப்பார்கள் என்று எனது அறிவு சொன்னது. சிவன் தான் எனது மனதை நிரப்பியுள்ளான். நான் அவனுடன் கதைத்து விளையாடுவேன். இதையாரும் நம்பமாட்டார்கள். ஆனால் நீங்கள் நம்புவீர்கள் என்று எனக்குத் தெரியும் என்று கூறக் கதிரேசன் உருகிப்போனார். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

1651. **ஓடுங் குதிரைக் குசை திண்ணம் பற்றுமின்**
**வேடங்கொண் டென்செய்வீர் வேண்டா மனிதரே**
**நாடுமின் நந்தியை நம்பெரு மான்தன்னைத்**
**தேடும்இன் பப்பொருள் சென்றெய்த லாமே.**

“ சிவனடியார்களே, அந்தப்பறை மேளம் அடிப்பவனின் கோலத்தையும் அவன் சிவனின் மீது வைத்திருக்கும் பேரன்பையும் கண்ட கதிரேசன் மெய்சிலிர்த்துப் போனார். சிவன் அடியவரே நான் சிவன் மீது நீர் வைத்திருக்குமளவு அன்பு வைத்திருக்கிறேனோ தெரியாது. உமது அன்பு அளவிடமுடியாதது. நீரே சிவனுக்குப் பூசை செய்யும். இன்னொருவரைக் கொண்டு பூசை செய்விப்பதில் உள்ள சிரமங்கள் பல. எமது ஊர்ச் சிவன் கோவிலில் பூசை செய்யவருடன் தினமும் பல பிரச்சினைகள் உண்டாகின்றன. இது உமது கோவில். உமது இனத்தவர்கள் தான் வணங்க வருவார்கள். திருமுறைகளை ராகத்துடன் படியுங்கள். தமிழ் மந்திரமான “ நமசிவய ” சிவயநம ” சிவயசிவ சிவ என்பதனை கணக்கறிந்து ஓதுங்கள். அம்முறையினை நான் கற்றுத்தருகிறேன். செந்தமிழ் மந்திரத்திற்கு இணையான மந்திரம் எதுவும் இல்லை. அதைத்தான் அம்மையும் அப்பனும் விரும்புவார்கள். ஒடும் குதிரையாகிய உயிர்ப்பின் அளவைக் கட்டுப்படுத்தும் கடிவாளத்தை உறுதியாகப்பற்றிப் பிடித்து உயிர்பினை அடங்குங்கள். இன்றியமையாத அச்செயலைச் செய்யாது பொய்க்கோளம் மட்டும் பூண்டு ஒழுகுவதால் பயன் எதுவும் ஏற்படாது. மனிதர்கள் அப்பொய்க் கோலத்தைக் கொள்வது மற்றவர்களை ஏமாற்றித் தாம் சுகமாக வாழ்வதற்கேயாம். நந்தியாகிய சிவனை நாடுங்கள். திருவருளால் சிவனை உணர்விண் கண் தேடுங்கள். தேடினால் இன்பப்பொருளான சிவனது திருவடியை அடையலாம். அதனால் என்றும் பேரின்பம் கிட்டும். நீங்கள் மெய்யடியார். உங்களால் முடியும். சிவசேவையே தன்சேவையென நினைத்துச் செய்யும் ஒரு சிவஞானியை இன்று கண்டதையிட்டு நான் பெருமைப்படுகிறேன். வாழ்வின் தத்துவத்தை உணர்ந்து விட்டதாக நினைக்கிறேன் என்று மகிழ்ந்தவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 13. அபக்குவன்

## (பொய்க்குரு)

**1652. குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்**
**குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வார்**
**குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக்**
**குருடுங் குருடுங் குழிவிழு மாறே.**

“ சிவனடியார்களே, உண்மையான உணர்வுகள் இல்லாதவர்கள் அறியாமையை நீக்கும் மெய்க்குருவினைக் கண்டு கொள்ளமாட்டார்கள். அதற்குக் காரணம் அவர்களுக்கு அகக்கண் குருடாக இருப்பதேயாகும். அறியாமையை அகற்றும் மெய்யான குருவினை உணர்ந்து கொள்ள முடியாதவாகள் பொய்க் குருவின் வேடங்களை நம்பி அவரையே மெய்க்குருவென எண்ணி வழிபடுவர். இது குருடனுக்குக் குருடன் வழிகாட்டுவதைப் போன்றாகும். இவர்கள் அகக்கண் இல்லாத பொய்க் குருவை நம்பி கருக்குழிக்குள் விழுந்து மாய்வர். ”

“ சிவனடியார்களே, கதிரேசன் பறை அடிப்பவனின் கோவியில் தங்கியது அவ்வூரவர்களுக்குப் பிடிக்கவில்லை. அதனால் கதிரேசனுடன் வந்தவர்களைத் தமது கோவிலிருந்து வெளியேறச் சொன்னார்கள். அதற்கு நல்லை நாதன் சொன்னார், “ உங்களை வழிநடத்தும் குருவுக்கு அகக்கண் இல்லை. அகக்கண் இருந்திருந்தால் சிவனைப்பற்றி முழுமையாக அறிந்திருப்பார். சிவன் சுடலைகாப்பவர். சுடலைச்சாம்பலைப்பூசுபவர். சாதி பார்க்காது மனிதர்களைத் தன்னோடு சேர்த்துக் கொள்பவர். நீங்கள் சிவனைத் தரிசிக்க விடாமையால் அவர்கள் கோவிலைக் கட்டினர். அதற்குப் பூசை செய்யவும் நீங்கள் தயாரில்லை. அப்போ அவர்கள் அறியாமையால் மீண்டும் கருக்குழிக்குள் விழுந்து துன்பப்படவேண்டும் என்கிறீர்களா…? புராணங்களையும் இதிகாசங்களையும் படித்துப் பாருங்கள். அதன் நாயகர்கள் எவ்வாறு வாழ்ந்தார்கள் என்று புரியும். சமயம் என்றால் என்னவென்றும், சிவன் என்றால் யாரென்றும் அறியாத உங்களை விட அவற்றை அறிந்து வைத்திருக்கும் அந்த மேளம் அடிப்பவன் எம்மைப் பொறுத்த வகையில் மேலானவன் என்று கூறிய நல்லை நாதன் தம்முடன் வந்தவர்களையும் அழைத்துக் கொண்டு அந்தக் கோவிலுக்குச் சென்றார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1653. மனத்தில் எழுந்ததோர் மாயகடகண் ணாடி**
**நினைப்பின் அதனின் நிழலையுங் காணார்**
**வினைப்பணன் போக விளக்கியுங் கொள்ளார்**
**புறக்கடை இச்சித்துப் போகின்ற வாறே.**

“ சிவனடியார்களே, நல்லை நாதனும் தன்னுடன் கூட வந்த அடியவர்களும் தான் தங்கியிருந்து கோவிலுக்கு வந்த போது கதிரேசன் ஆச்சரியப்படவில்லை. அதற்குக் காரணம் அவ் அடியவர்கள் எல்லோரும் சிவனைப் பற்றிப் பூரணமாக அறிந்திருந்தனர். அங்கு வந்த நல்லைநாதன் சொன்னார், “ அண்ணா அங்குள்ளவர்களுக்குச் சிவனைப்பற்றித் தெரியாது. அவர்களின் குரு பொய்யான வார்த்தைகளைக் கூறித்தவறாக வழிநடத்துகிறான் ” என்ற போது கதிரேசன் கூறினார் , “ நல்லை, தற்போது வாழும் மக்களில் அதிகமானோர் எதையும் சரியாக அறிவதில்லை. யார் எதைச் சொன்னாலும் அதைத் தமது சுய நலத்திற்காக நம்பி ஏமாறுகிறார்கள். இது ஆச்சிரமங்களுக்கும் பொருந்தும் மாமுப் பாற்றலானது மனதை வினைக்கீடாக இயங்கும் ஒரு மாயக்கண்ணாடி. முகம் பார்க்கும் கண்ணாடியின் பின்பக்கம் வண்ணப்பூச்சால் மறைக்கப்பட்டுள்ளதால் அது முகத்தைக்காட்டாது. ஆருயிர்கள் பின்பக்கத்துக் கண்ணாடி போன்றவை. அவ் உயிர்கள் சிவனுடன் சேர வேண்டுமானால் முன்பக்கத்துக் கண்ணாடி போல இருத்தல் வேண்டும். முன்புறம் என்பது சிறப்பாகும். பின் புறம் என்பது மறைப்பாகும். நினைப்பினால் கூட அம்மறைப்பாற்றலின் சாயலைக் காணமாட்டார். ஆருயிர்களின் வினைப்பயனை

நூல்களைப் படித்தும் விளங்கிக்கொள்ளமாட்டார்கள். இந்த கயவர்கள் சிவனைப்பற்றி முழுமையாக அறியாததால் தாம் அறிந்தவையே உண்மை என வாதிப்பர். இப்படியானவர்களைத் திருத்த முடியாது. சிவனை வணங்குவோர் சிவனைப் பற்றி முழுமையாகத் தெரிந்தாலன்றி அவர்களை வேறு எவ்வழியாலும் மாற்ற முடியாது. அதைப்பற்றிக் கதைத்துச் சிவப்பொழுதை அவப்பொழுதாக்காதீர்கள் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1654. ஏயெனில் வன்னென மாட்டார் பிரசைகள்**
**வாய்முலை பெய்ய மதுரநின் றூறிடுந்**
**தாய்முலை யாவ தறியார் தமருளோர்**
**ஊனிலை செய்யும் உருவிலியாம் தானே.**

“ சிவனடியார்களே, அந்தப் பறை மேளம் அடிக்கும் வரதன் சொன்னான், “சுவாமி, அவர்களைத் திருத்த முடியாது. சிவனை முழுமையாக உணராதவர்கள் சிவனை எப்படி வணங்கமுடியும். சிவபக்தன் சிவனாக மாறுவான் என்று எமது சமயம் கூறுவதை ஏற்றிருந்தால் இவர்கள் சொல்வதை நாம் கேட்கலாம். ஆனால் இவர்கள் அதை நம்புவதில்லையே இவர்களை அழைத்து அன்பாகச் சொன்னாலும் கேட்கமாட்டார்கள். பால் உண்ணும் குழந்தை தனது தாயின் முலையில் வாய்வைத்தவுடன் தாய்பால் சுரப்பது போலவும், அப்பால் இனிமை உண்டாவது போலவும் நடப்பாற்றலாகிய அம்மையை விரும்பி அன்பு கொண்டால், அம்மை அவ்வுயிரைச் சிவத்துடன் சேர்ப்பதற்கான அருளுடம்பைத்தருவாள். அதற்காக அவள் அவ்வுயிர் மெய்யுணர்வு பெறுவதற்காகச் செந்தமிழ்த் திருவைத்தெழுத்தையும் அவள் அருள்வாள். அவளது உடம்பு தாயை ஒத்தது. அதனால் அவளது பால் அருளுடம்பாகும். அதன் இனிமை திருவைந்தெழுத்தாகும். வேண்டுதல் வாய்வைத்தலை ஒக்கும். அவளது அருள் பிறவாமையை அருளும். அவள் உருவில்லாதவள் என்று ஒரு சிவஞானி அவர்களது கோவிலில் கூறிய போது ஒலிபரப்பில் கேட்டேன். இவற்றைக் கேட்டும் உணராதவர்களைப்பற்றிப் பேசுவதால் வினைதான் அதிகரிக்கும் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1655. வாயொன்று வொல்லி மனமொன்று சிந்தித்து**
**நீயொன்று செய்யல் உறுதி நெடுந்தகாய்**
**தீயென்றிங் குன்னைத் தெளிவன் தெளிந்தபின்**
**பேயென்றிங் கென்னைப் பிறர்தெளிகி லாரே.**

“ சிவனடியார்களே, வரதன் தொடர்ந்து சொன்னான், “ சுவாமி நீங்கள் பெரியவர். எல்லாம் அறிந்தவர். உங்களைப் போன்ற சிவஞானிகள் அடிக்கடி வந்து அக்கோவிலில் பேசுவார்கள். திரளான மக்கள் வந்து அவற்றைக் கேட்பார்கள். கேட்டால் பின்பற்ற வேண்டும். சிவனின் பெருமைகளை எல்லோரும் ஒரு மாதிரித்தான் பேசுகிறார்கள். ஆனால் கேட்பவர்கள் பலமாதிரி நடந்து

கொள்கின்றனர். சொல்லும் நினைப்பும் செயலும் ஒன்றாக இருந்தால் தான் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு வாழும் உயிர்தான் பெருவாழ்வு பெறும். அதைப் பெரியவர்கள் நெடுந்தகை என அழைப்பர். அந்தகைய நெடுந்தகையே ஒன்றுபட்டுச் சிவனை வழிபட்டால் அவ்வுயிர் தீயுருவாகிய சிவனாகும். என்று ஒரு சிவஞானி கூறியதை நான் கேட்டுத் தெளிவடைந்தேன். அப்படித் தெளிந்த பின்பு பெரும்பத்தும் பிடி விலகாமையும் உள்ள பேயென்று பிறர் என்னைத் தெளியமாட்டார். இவற்றையெல்லாம் இவர்கள் ஏன் கேட்கிறார்கள். பொழுதுபோக்கிற்கா….? இல்லைப் பேர்புகழ் பணம் சம்பாதிக்கவா. எனக்குப்புரியவில்லை என்று கூறும் போது கதிரேசன் சொன்னார், “ சிவனடியார்களே, ஊர் உலகு மக்களைப் பற்றி எண்ணாது சிவச்சேவையைச் செய்யுங்கள். நடக்காத ஒன்று நடக்கவேண்மென்று விரும்பலாகாது. அது தானாகவே நடக்கும். இல்லை நடக்காமல் விடும் அதன் தாக்கம் உம்மைப் பாதிக்கக்கூடாது என்றவர். ” சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1656. பஞ்சத் துரோகதடதுப் பாதகர் தம்மையும்**
**யஞ்சச் சமயத்தோர் வேந்தன் அருந்தண்டம்**
**விஞ்சச்செய் திப்புவி வேறே விடாவிடிற்**
**பஞ்சத்து ளாய்ப்புவி முற்றும்பா ழாகுமே.**

“ சிவனடியார்களே, வரதன் தொடர்ந்து சொன்னான், “ சுவாமி பொய், கொலை, களவு, கள், காமம் என்னும் ஐம்பெரும் பாவங்களையும் அஞ்சாது செய்வோர் பெரும்பாதகராவர். அவர்களையும் ஏனையோரையும் அவ்வாறு செய்யாமல் காப்பவன் அரசன். அக்காலத்தில் அதற்கான தண்டனை குற்றவாளியை நாடு கடத்துவதாகும். அவ்வாறு செய்யாவிட்டால் மழை பெய்யாது. விளைவு குன்றும். இப்போது அவை எதுவும் இல்லாததால் மழை பெய்தும், பெய்யாதும் அழிக்கிறது. இதை உணர்வார் யாரும் இல்லை. அக்கோவிலின் தர்மகர்த்தா தர்மராசா என்பவர் அவர் தர்மராசா அல்ல அதர்மராசா. கோவிலுக்குள் வைத்துப் பஞ்சமா பாதகங்களைச் செய்கிறார். இருப்பினும் அவரைத் தடடிக் கேட்பதற்கு யாருக்கும் துணிவு இல்லை. அவர் அரசியல் பிரமுகர். உயர்ந்த உத்தியோகத்தில் இருப்பவர். அவரைத் தட்டிக் கேட்டால் தமக்கு ஆபத்து வந்து விடும் என்று பயப்படுகிறார்கள். எனது தங்கையின் மகன் பராபரன் இளஞ்ஞன் ஆசிரியராகக் கடமை புரிகிறான். அவன் தீமைகளைப் பொறுக்கமாட்டான். தட்டிக்கேட்பான். அதனால் அவன் வேறு மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டான். கல்வி அதிகாரிகள் தமக்கு வேண்டியவற்றைத் தர்மம் பாராது செய்கின்றனர். இவர்களுக்குச் சிவன் தான் தண்டனை வழங்கவேண்டும் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1657. தவத்திடை நின்றவர் தாமுண்ணுங் கன்மஞ்**
**சிவத்திடை நின்றது தேவர் அறியார்**
**தவத்திடை நன்றறி யாதவர் எல்லாம்**
**பவத்திடை நின்றதோர் பாடது வாமே.**

“ சிவனடியார்களே, வரதனுக்குக் கதிரேசன் சொன்னார், “ தீயவர்களுக்கு நல்லவற்றைச் சொல்லமுடியாது. சொன்னாலும் கேட்கமாட்டார்கள். அதனால் நான் எதையும் அவர்களுக்குக் கூறுவதில்லை. சிவனுக்குக் கூறுவேன். அவர் கவனித்துக்கொள்வார். அதனால் கவலைப்படாது சிவசேவையைச் செய்யுங்கள். சிவனை மறவாது செந்தமிழ் மந்திரமான திருவைந்தெழுத்தை ஓதித் தவம் செய்யும் பெரும் தவமுடையவர்களது ஊழ்வினை நுகர்வு நீங்காததால் அந்தவத்தோர்க்கு அந்நுகர்வு உடலோடு நின்றுவிடும். அவரது உள்ளத்து நினைவுகள் யாவும் சிவநுகர்வாகவே இருக்கும். இதைத்தேவர்கள் கூடஅறியமாட்டார்கள். சிவவழிபாட்டின் மூலம் அறியமாட்டாதவர்கள் பிறப்புக்கள் எடுத்துத் துன்பப்படுவர். அதனால் நாம் உலக விடயங்களைப்பற்றி நினைக்காது அவற்றைச் சிவனிடம் விட்டு விட்டு சிவ நினைவாக இருந்து திருவடியை அடைய முயலவேண்டும் என்றவர். ” என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1658. கன்றலுங் கருதலுங் கருமஞ் செய்தலும்**
**தின்றலுஞ் சுவைத்தலுந் தீமை செய்தலும்**
**பின்றலும் பிறங்பலும் பெருமை கூறலும்**
**என்றிவை இறைவன்பால் இயற்கை அல்லவே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் வரதனுக்குச் சொன்னார், “ அடியவரே, உம்மிடம் சிவனிடம் உள்ள குணங்களே காணப்படுகின்றன. செருக்கு இல்லை. பலர் துன்புறுத்திய போதும் தாங்கள் சினக்கவில்லை. யாரையும் நட்புள்ளவராகவோ உறவினராகவோ தாங்கள் கருதவில்லை. பயனின்றி எந்தச் செயலையும் நீங்கள் செய்வதில்லை. உணவு வகைகளை ஆசைப்பட்டு தின்பதில்லை. சுவைப்பதில்லை. யாருக்கும் தீமை செய்ய நினைப்பதில்லை. தேவையில்லாமல் தாழ்ந்து போவதில்லை. உம்மை உயர்வாக நினைப்பதும் இல்லை. தற்பெருமை கொள்வதும் இல்லை. இவற்றை நீங்கள் மறந்ததும் செய்வதில்லை என்று உங்களோடு பழகிய சில நாட்களில் உணர்ந்து கொண்டேன். இதற்குக் காரணம் நாம் வழிபடும் சிவனிடம் மேற் சொன்ன குணங்கள் இல்லை. மிருகங்களுக்குக் கூட அவற்றை வளர்க்கும் எசமானின் குணங்கள் தான் இருக்கும். எனது நாய் யாரையும் குரைத்துக் கூட வெருட்டாது. பூனை, ஆடு, மாடு யாவும் அதற்கு நண்பர்கள். எமது ஊரில் வாழும் தங்கராசா என்பவன் நாயைத் துரத்தி மிருகங்களை வேட்டையாடுபவன். அவனது குணங்கள் யாவும் அந்த நாயிடமும் உண்டு. அதனால் நாம் பழகுவோரைப் பொறுத்தே எமது குணங்களும் அமையும். நீர் பழகும் சிவன் குற்றம் குறை இல்லாதவர். அதனால் உம்மிடமும் அவை இல்லை என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1659. கன்றலுங் கருதலுங் கருமஞ் செய்தலும்
தின்றலுஞ் சுவைத்தலுந் தீமை செய்தலும்
பின்றலும் பிறங்பலும் பெருமை கூறலும்
என்றிவை இறைவன்பால் இயற்கை அல்லவே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் வரதனுக்குக் கூறினார், “ மிக்க பெருந்தன்மையோடு வாழ்கிறீர்கள். சிவனை நம்புபவர்கள் வேறு யாரையும் நம்பத்தேவையில்லை ஏனென்றால் அத்தேவைகளைத் தாமாகவே உணர்ந்து கொள்ளும் சிவன் அதற்குப் பொருத்தமானவர்களை அனுப்பிவைப்பார். சித்தத்தைச் சிவன் மேல் வைத்தவர்கள் விடியலை உணரமாட்டார்கள். அறிவுப் பெருவெளியையும் காணமாட்டார். அச்சமில்லாத அப்பெருவெளியில் நினைப்புக் கொள்ளவும்மாட்டாகள். காவலாக உள் நோக்கம் கொள்ளும் பொருட்டுக் கண்ணிமையை அடக்குதல் வேண்டும். அதே நோக்கத்துடன் பார்க்க வேண்டும். பிறக்கும் தன்மையை நீக்காத ஆணவ வல்லிருளைத் தடுத்து நீக்கும் திருவடியுணர்வாகிய விளக்கு அவையாகும். அதனால் எல்லாம் தெரிந்த உமக்கு நான் எதையும் சொல்லத்தேவையில்லை என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1660. வைத்த பசுபாச மாற்று நெறிவைகிப்
பெத்த மறமுத்த ணாகிப் பிறழ்வுற்றுத்
தத்துவ முன்னித் தலைப்படா தவ்வாறு
பித்தான சீடனுக் கீயப் பெறாதானே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் வரதனைக் கேட்டார், “அடியவரே ஆன்மாவை மிகத்தொன்மையான காலத்திலிருந்தே ஆணவம் பற்றிப்பிடித்துள்ளது. அதைவிலக்க வீடு பேற்றைத்தந்தருள்பவனான மெய்ப்பொருளான சிவபெருமானை இடையாறாது நினைத்து அவனது திருவடியை அடைய நினைப்பதே நன்மாணாக்கரது கடமையாகும். இதை நினையாது உலகியவில் நாட்டங் கொண்டு பொழுது போக்கிற்காக வணங்கும் மாணவர்களுக்கு அருமறையை வழங்கக் கூடாது என்று சொன்னீர்கள். அது ஏன் என்று தெரிந்து கொள்ளலாமா….?” அதற்கு வரதன் சொன்னார், “ சுவாமி, தாங்கள் நாளைக் காலையில் அந்தச்சிவன் கோவிலில் பிரசங்கம் செய்யவுள்ளதாக அறிந்ததால் அப்படிச் சொன்னேன். அக் கோவிலின் நிர்வாக சபையினர் பஞ்சமா பாதகங்கள் அனைத்தையும் செய்பவர்கள். அவர்கள் பிழைப்புக்காகத் தான் கோவிலை நடத்துகின்றனர். கோவில் தலைவரின் பெயரில் பெருந்தொகையான பணத்தை வெளிநாடுகளில் இருந்து இவ்வூரவர் அனுப்புகிறார்கள். ஆனால் தலைவர் வரும் பணத்தின் பெரும் பகுதியைத்தனக்கும் தனது குடும்பத்தினருக்கும் தான் செலவு செய்கிறார்” என்று கூறும் போது கதிரேசன் சொன்னார், “ அவ்வாறு தான் பலரும் சொல்கின்றனர். அதனால் நான் பேசமறுத்து விட்டேன். தீவினையாளருக்குச் செய்யும் உபதேசம் ஓட்டைக்குடத்தில் நீரூற்றுவது

போன்றது. ஒரு சில நிமிடங்கள் கூடத் தங்காது என்றார். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவரிகள்.

**1661. மன்னும் மலம்ஐந்தும் மாற்றும் வகையோரான்**
**துன்னிய காமாதி தோயுந் தொழில்நீங்கான்**
**பின்னிய பொய்யன் பிறப்பிற பஞ்சாதான்**
**அன்னிய னாவன் அசற்சீட னாமே.**

“ சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், “ உண்மை தான் அடியவரே. மாறாத தன்மை கொண்ட ஆணவம் கன்மம் மாயை மறைப்பாற்றல் மாயேயமாகிய காரியத்தன்மை ஆகியமலங்கள் ஐந்தும் மாற்று வழிகளை ஆராயாது மாயா சக்திகளான செருக்கு, சினம், சிறுமை, இறவல், மாண்பிறந்தமானம், மானாவுகை என்னும் தீய கருமங்களை மீண்டும் மீண்டும் செய்வதிலிருந்து நீங்காது. முழுமையான பொய்மை உடையவர்கள் பிறப்பு இறப்பைபற்றிக் கவலைப்படுவதேயில்லை. இவர்கள் புன் நெறியாளர்கள். இவர்கள் உண்மைக்கு மாறான பொய்மையான மாணவர்கள் இவர்கள் உருப்படமாட்டார்கள். தலைவர் படித்தவர். அரச உத்தியோகம் பார்ப்பவர். இருந்தும் அவர் கோவில் பணத்தைக் கையாளுகிறார் என்றே பெரும்பான்மையான மக்கள் கருதுகின்றனர். பெரும்பாலான கற்றவர்களின் அறிவு தீயவழியில் செல்வதால் தான் நாடு சீரழிகிறது என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 14. பக்குவம்
## (மெய்க்குரு)

**1662. தொழிலறி வாளர் சுருதிகண் ணாகப்**
**பழுதறி யாத பரம குருவை**
**வழியறி வார்நல் வழியறி வாளர்**
**அழிவறி வார்மற்றை யல்லா தவரே.**

“ சிவனடியார்களே, வேதாகமங்களைக் ஒரு சிறிதும் குற்றம் செய்யாத மேலான சிவகுருவிடமே கற்றல் வேண்டும். அவ்வாறு செய்யாதவர் ஒரு போதும் வீடு பேற்றை அடையமாட்டார். இதை அறியாதவர்கள் திரும்பத் திரும்பப் பிறந்து இறந்து துன்பப்படுவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1663. பதைத்தொழிந் தேன்பர மாவுனை நாடி**
**யதைத்தொழிந் தேன்இனி யாரொடுங் கூடேன்**
**சிதைத்தடி யேன்வினை சிந்தனை தீர**
**உதைத்துடை யாயுகந் தாண்டரு ளாயே.**

“ சிவனடியார்களே, ஒரு நாள் யாருமில்லாத வேளை ஆச்சிரமத்திற்கு வந்த கதிரேசன் சிவலிங்கத்தின் முன்னால் அமர்ந்திருந்து பிரார்த்தித்தார், “ என்னை ஆளும் சிவபெருமானே! பிறந்தமையால் படும் துன்பங்களை அனுபவித்துக்

களைத்துப்போனேன். உனது திருவடியையே தினமும் நினைத்திருக்கிறேன். அறியாதவர்கள் தான் உடலையும் உலக இன்பங்களையும் இனியவை என்று கூறி இன்புறுகின்றனர். எனக்கு எனது உடல் மீது வெறுப்பு உண்டாகிவிட்டது. ஆகையால் அடியேனது இருவினைகளையும் நீக்கி எனது மனக் கவலைகள் தீர பிறப்பினை உதைத்து அழித்து என்னை உனது திருவடியில் சேர்த்தருள் என்று மனமுழுகி வேண்டிக் கொண்டிருந்தார். அன்று அடியவர்களின் கூட்டம் மிகமிகச் குறைவாக இருந்தமையால் அவர் சற்றுப் பலமாகப் பலதடவைகள் கூறிக்கொண்டிருந்தார். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1664. பதைக்கின்ற போதே பரமென்னும் வித்தை**
**விதைக்கின்ற வித்தினை மேல்நின்று நோக்கிச்**
**சிதைக்கின்ற சிந்தையைச் செவ்வே நிறுத்தி**
**இசைக்கின்ற அன்பருக் கீயலு மாமே.**

'' சிவனடியார்களே, கதிரேசனின் உடல் உறுதியானது எண்பது வயது கடந்த போதும் நோய் நொடி இல்லாது இருக்கின்றது. போதிய பணம் இருக்கிறது. இருப்பினும் அவருக்கு வாழ்க்கை வெறுத்து விட்டது. அவர் சொல்வார், '' சுவாமி, பிறப்பு இறப்புக்களால் வரும் துன்பத்தை நினைத்தால் உள்ளம் தடுமாறுகின்றது. மேலான சிவனைச் சேரும் திருவடியுணர்வைப் புருவ நடுவில் நிறுத்தி நோக்கி, அந்த நோக்கத்திற்கு இடையூறாக உலகளவில் செல்லும் மனதைத் தடுத்து நேரே நிறுத்திச் சிவனது திருவடியில் சேர்க்கின்ற மெய்யன்பர்கள் திருவைந் தெழுத்தை ஓதத்தகுதியுடையவராவர். கதிரேசன் தினமும் திருவைத்தெழுத்தை ஓதுபவர் ஓதும் போது தன்னைத் திருவடி நிழலில் சேர்க்குமாறு வேண்டுவார். இதைப்பக்குவப்பட்டவர்களால் மட்டுமே வேண்டமுடியும். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1665. கொள்ளினும் நல்ல குருவினைக் கொள்ளுக**
**உள்ள பொருளுடல் ஆவி யுடன்ஈக**
**எள்ளத் தனையும் இடைவிடா தேநின்று**
**தெள்ளி யறியச் சிவபதந் தானே.**

'' சிவனடியார்களே, ஆன்மாவின் உய்வுக்காக நெறிகளைச் சொல்லித்தரும் குருவினைத் தேர்த்தெடுக்கும் போது மிகவும் கவனமாகத் தேர்ந்தெடுங்கள். அச்சிவகுருவிடம் உடைமை, உடல், உயிர் ஆகிய மூன்றினையும் ஒப்படையுங்கள். நிழல் ஒரு போதும் உடலை விட்டு நீங்காது. அது போலக் குருவின் நிழலாக இருங்கள். அவரை விட்டு நீங்காது அவருடன் இருங்கள். அவரின் அருளால் பொருள் உண்மையையும், தத்துவங்களின் உண்மைகளையும் அறிந்து கொண்டவர்கள் தான் சிவனின் திருவடியைச் சேர்வர் '' என்று புதிதாக

ஆச்சிரமத்திற்கு வந்த மாணவர்களுக்குக் கதிரேசன் உபதேசம் செய்தவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1666. சோதி விசாகந் தொடர்ந்திரு தேள்நண்டு**
**ஓதிய நாளே உணர்வது தானென்று**
**நீதியுள் நீர்மை நினைந்தவர்க் கல்லது**
**ஆதியும் ஏதும் அறியகி லானே.**

'' சிவனடியார்களே, மாணவச் செல்வங்களே, இன்று சுவாதி நட்சத்திரம். அருமறைகளைக்கற்பதனால் சுவாதி, விசாகம் ஆகிய நட்சத்திரம் வரும் நாட்களிலும், விருச்சிகம், கடகம் ஆகிய ராசிகள் உள்ள வேளைகளிலும், திங்கட் கிழமையிலும் கற்பது தான் மிகமிகச் சிறந்தது. அதனால் தான் இன்றைய நாளைத் தெரிவு செய்தேன். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1667. தொழிலார மாமணித் தூய்தான சிந்தை**
**ஏழிலால் இறைவன் இடங்கொண்ட போதே**
**விழலார் விறலாம் வினையது போகக்**
**கழலார் திருவடி கண்டரு ளாமே.**

'' சிவனடியார்களே, சீலம், நோன்பு, செறிவு, அறிவு ஆகிய நன்னெறிகள் நான்கையும் மனதில் இருத்தி லிங்கத்தை நினைத்து வழிபட்டு வந்தால் சிவபெருமான் வழிபடுவோரின் மனதில் அமர்ந்து அருளுவான். அப்படி அவன் வந்து அமர்ந்ததும் ஆணவமலத்தையுடைய தீயவர்களின் தொடர்பு அறும். அவ்வேளை சிவன் தோன்றி அருள்வான். ''

'' சிவனடியார்களே, வரதன் கதிரேசனுக்குச் சொன்னார், '' சுவாமி ஆரம்பத்தில் நல்லவர்கள் யார், தீயவர்கள் யாரென்று கண்டு கொள்ள முடியாததால் பெருந்துன்பப்பட்டேன். சிவனில் உள்ள பேரன்பு காரணமாக நான் சிவன் கோவிலுக்குச் சென்றால் அக்கோவிலைத் துப்பரவு செய்யுமாறு தலைவர் கூறுவார். சிவ சேவை என்று நினைத்து நானும் எனது இனத்தவர்களும் தொண்டுகளைச் செய்வோம். ஒரு நாள் அக்கோவிலின் தொண்டர் ஒருவர் வந்து சொன்னார், '' இப்போ கோவிலால் உங்களுக்கு நல்ல வருமானம். அதனால் திமிராக நடக்கிறீர்கள். இனி மேல் இங்கு வேலை செய்ய வேண்டாம்'' என்று கோபித்தார். எனக்கு ஏதாவது துன்பம் நேர்ந்தால் நான் லிங்கப்பெருமானுக்குத் தான் முறையிடுவேன். முதல் நாள் சபையின் செயலாளர் என்னை வாய்க்கு வந்தபடி காரணமின்றிப் பேசினார். அதைச் சிவனிடம் அழுதழுது முறையிட்டேன். அக்கோவிலின் தலைவர் நாம் செய்யும் தொண்டிற்கு கூலி போட்டு எடுத்திருக்கிறார். அதனால் தான் அவ்அடியவர் கோபம் கொண்டார் என்று தெரிந்து கொண்டேன். லிங்கப்பெருமானை

வழிபட்டால் அவர் நெஞ்சில் உறைந்து தீயவர்களின் தொடர்பை நீக்குவார் என்று பலரும் கூறக்கேட்டிருக்கின்றேன். அது தான் நடந்தது என்றவர். '' என்றார் சுந்தர மூர்த்தி சுவாமிகள்.

**1668. சாத்திக னாய்ப்பர தத்துவந் தானுன்னி**
**ஆத்திக பேத நெறிதோற்ற மாகியே**
**ஆர்த்த பிறவியி னஞ்சி யறநெறி**
**சாத்தவல் லானவன் சற்சீட னாமே.**

'' சிவனடியார்களே, தன் முன் சிவனைக் கண்டவர் போல மகிழ்வுடன் நின்ற வரதனைப் பார்த்து மிக்க மகிழ்வுடன் சிரித்த கதிரேசன் சொன்னார், '' அடியவரே, அறிவும் அமைதியும் பொறுமையும் உடையவனாக இருந்து உண்மைப் பொருளான சிவனை மறவாது நினைத்து, கடவுள் உள்ளார் என்ற திடமான நம்பிக்கையுடன் எல்லையில்லாது தொடர்ந்து வரும் பிறவிகளை தொடரும் என அஞ்சிச் செந்நெறியாகிய அறநெறியின் கண் உறைந்து நிற்பவன் தான் நல்மாணாக்கனாவான். அப்படிப்பார்த்தால் நீர் நல்லதொரு சைவன், மாணவன், சிவன் அடியவன், கவலை கொள்ளாது உமது செயல்களைத் துணிவுடன் செய்யும் என்றவர். '' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1669. சத்தும் அசத்துமெவ் வாறெனத் தானுன்னிச்**
**சித்தை யுரக்கிச் சிவனருள் கைகாட்டப்**
**பத்தியின் ஞானம் பெறப்பணிந் தானந்தச்**
**சத்தியில் இச்சைத் தகுவோன்சற் சீடனே.**

'' சிவனடியார்களே, அன்று மாணவர்களுக்கான கல்வி முறையைப் பற்றி ரவீந்திரன் உரையாற்றினார், '' மாணவர்களே, குருவைச் சிவனாக நினையுங்கள். சிவனுக்குச் செய்யும் செயல்கள் அனைத்தையும் மகிழ்வுடன் அவருக்குச் செய்யுங்கள். அவரை விட்டுப் பிரியாது இருங்கள். நினைப்பும் அறிவும் உள்ளவனான சிவமும், நிலையில்லாதனவும் அறிவில்லாதனவுமாகிய கன்மமும் மாயைகளும் குருவருளால் நீங்கும். அறிவு மயமான ஆன்மாவை மலப்பிணிப்பில் இருந்து வேறுபடுத்திச் சிவபெருமானது திருவருளை உண்டு பண்ணுபவர் குரு. அதனால் சிவபெருமான் மீது ஆன்மா காதல் கொண்டு அவனைச் சென்றடையும். அதற்கான வழிவகைகளைக் கூறித் திருவடி உணர்வை உண்டாக்குபவர் குரு. அந்நிலை ஏற்பட்டால் ஏற்படுபவர் இடையறாது சிவனை நினைத்து உருகுவர். திருவடிப்பேரின்பத்தை அடைய வேண்டுமென்ற ஆவல் அதிகரிக்கும். அவ்வாறான நிலையை அடைபவன் தான் நன்மாணாக்கனாவான். இப்பொழுது எமது ஆச்சிரமத்திற்கு அயலூரில் இருந்து ஒரு சிவனடியாரான வரதன் என்பவர் வந்திருக்கிறார். அவரது செயல்களை அவதானியுங்கள். அவர் ஒரு தலை

சிறந்தமாணவர் என்று கதிரேசன் அடிக்கடி கூறுவார் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1670. அடிவைத் தருளுதி யாசானின் றுன்னா**
**அடிவைத்த மாமுடி மாயப் பிறவி**
**அடிவைத்த காய அருட்சத்தி யாலே**
**அடிபெற்ற ஞானத்த னாசற்று ளோனே.**

“ சிவனடியார்களே, ரவீந்திரன் தொடர்ந்து உரையாற்றினான், “ மாணவர்களே, சிவனை நேசிப்பவர்கள் தீய செயல்களைச் செய்யமாட்டார்கள். தீயவர்களுடன் அவர்கள் தொடர்பு வைத்திருந்தால் சிவன் அதை நீக்கி வைப்பார். எனது அலுவலகத்தில் வேலை செய்யும் சிற்றூழியனான வைகுந்தன் என்பவனோ நான் அன்புடன் பழகினேன். அவன் அதைப் பயன்படுத்தி என்னிடம் உதவிகள் பெற்றுத்தருவதாகக் கூறி லஞ்சம் பெற்று வந்தான். ஒரு நாள் எனது அலுவலகத்திற்கு வந்த சிவனடியார் ஒருவர், “ மகனே, யாரையும் நம்பாதே. சிவனை நம்பு. நீ இரக்கப்படாதே. சிவனுக்குச் சொல்லு. அவர் இரக்கப்படுவார்” என்று கூறிவிட்டுச் சென்றார். அவர் சென்ற பின் எமது காரியாலயத்தில் வேலை செய்யும் ஒருவர் வந்து என்னை வணங்கி விட்டுச் சொன்னார், “ஐயா, சிவனடியார் சொன்னதைக் கேட்டேன். வைகுந்தன் உங்களை ஏமாற்றுகிறான்” என்றவர். அதனால் தீயவர்களைச் சிவன் இனங்காட்டுவார். நான் எனது குருவான கதிரேசனை வணங்கும் போது, “ சிவ குருவே, உனது திருவடியை அடியேனது தலையின் மீது வைத்து என்னை ஆசீர்வதியென்று கேட்பேன். அவர் சிரிப்பார். அவ்வாறு உள்ளன்புடன் நினைத்தால் தொன்மைக்காலமாகப் பின் தொடரும் ஆணவ வல்லிருளும் பிறப்புக்களும் திருவருளம்மையின் அருளால் நீங்கும். அவ்வாறு நீங்கினால் திருவடி ஞானம் பெற்ற திருவாளனாவான். அவனே குற்றமற்ற நற் தவத்தவனாவான். நாம் குருவை வேண்ட வேண்டும். பக்குவப்பட்டாலும் உரிய நேரம் வராமல் குரு தனது திருவடியைத் தூக்கித்தலை மீது வைக்க மாட்டார் என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1671. சீராரு ஞானத்தின் இச்சை செலச்செல்ல**
**வாராத காதல் குருபரன் பாலாகச்**
**சூராத சாதக நான்குந்தன் பாலுற்றோன்**
**ஆராயும் ஞானத்த னாமடி வைக்கவே.**

“ சிவனடியார்களே, ரவீந்திரன் மாணவர்களுக்குத் தொடர்ந்து உரையாற்றினான். அவன் சிறந்த பேச்சாளன். சபையை அறிந்து பேசுபவன். அவன் பேசும் போது சிறுவர்களும் கவனத்துடன் கேட்பார்கள். எமது குருகுல மாணவர்களுக்கு ரவீந்திரன் மீது அளவற்ற பிரியம் உண்டு. அவன் ஆச்சிரமத்திற்கு

வந்தால் அவனைச் சுற்றிப் பிரியாது நிற்பர், “ எனது அருமை மாணவர்களே, திருவடிப்பேற்றை அளிக்கும் சிவஞானத்தின் மீது நீங்காத காதல் கொண்டோர் மிகத் தீவிரமாகக் காதலை ஏற்படுத்திக் கொள்வர். அக்காதல் ஏனையோர்கு ஏற்படாத பெருங்காதலாகும். குருவருளாலன்றி எய்தப்படாத திருவடிப்பேற்றிற்குத் துணையாகச் சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்னும் நன்னெறிகள் நான்கும்கைகூடும். சிவ குருவின் திருவடி அவனது தலை மீது சாத்தத்திருவருள் சிவஞானத்தைச் சேர்ப்பிக்கும். அதனால் அவன் சீரியோனாவன். ஆகையால் பொறுமையாக இருங்கள். அவசரப்படாதீர்கள். அவசரம் தவறுகளைச் செய்யவைக்கும் என்றவன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1672. உணர்த்து மதிபக் குவர்க்கே யுணர்த்தி**
**இணக்கிற் பராபரத் தெல்லையுள் இட்டுக்**
**குணக்கொடு தெற்குத் தரபச்சி மங்கொண்டு**
**உணர்த்துமி னாவுடை யான்தன்னை யுன்னயே.**

“ சிவனடியார்களே, ரவீந்திரன் தொடர்ந்து உரையாற்றினான், “முன்பு செய்த தவப் பயனால் தான் சிவஞானம் எய்துவதற்குரிய நல்ல பயன் கிடைக்கும். இவ்களுக்குத் தான் திருவைத்தெழுத்தை உணர்த்தலாம். எப்பொருளையும சாராது நிற்கும் சிவனின் திருவடி எல்லைக்குள் சிவகுரு உயிரைப் புகுவித்து, முறையே கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு என்னும் நான்கு திசைகளையும் அடக்கி நன்னெறியினைச் சிவன் அறிவுறுத்தி அருள வைப்பான் சிவகுருவாவான். ஆகையால் சிவகுருவாகவந்து நமது ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிவிடுப்பவன். சிவபெருமான் என்று உணர்பவர்கள் தான் சிவனது திருவடியை அடையத் தகுதியுள்ளவராவர். அதனால் அச்சமின்றிக் குருவோடு இணைந்து கருமமாற்றுங்கள். உங்களை அறியாது செய்யும் தவறுகளைச் சிவகுரு பொறுத்தருள்வார் என்றவன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1673. இறையடி தாழ்ந்தை வணக்கமும் எய்திக்**
**குறையது கூறிக் குணங்கொண்டு போற்றச்**
**சிறையுடல் நீயறக் காட்டிச் சிவத்தோ**
**டறிவுக் கறிவிப்போன் சன்மார்க்கி யாமே.**

“ சிவனடியார்களே, ரவீந்திரன் மாணவர்களுக்குத் தொடர்ந்து உரையாற்றினான், “ முழுமுதற் சிவபெருமானின் திருவடியின் மீது பேரன்பு கொண்டு தாழ்ந்து, நெஞ்சின் மீது இருகைகளையும் கூப்பல், தலை மீது கூப்பல், தலை, கை இரண்டு, முழங்கால் இரண்டு, ஆகிய ஐந்து உறுப்புக்கள், இவற்றுடன் நெஞ்சு, தலை, காது இரண்டு, கையிரண்டு, கால் இரண்டு நெஞ்சு ஆகிய எட்டுறுப்புக்கள். இவற்றால் வணங்குவது ஐவகை வணக்கமாகும். எமக்கு வேண்டிய இன்றியமையாத

பொருட்களை வேண்டி விண்ணப்பித்தல், இறைவனது எண்குணங்களையும் போற்றுதல், யான் எனது என்ற ஆகிய இப்பண்புகளைச்சிவகுரு அறிவுறுத்துவார். மேலும் சிவபெருமானின் அளவிட முடியாத பண்புகளையும் அறிவுத்துவார். இவற்றை அன்புடன் ஏற்றுக் கொள்பவர் தான் நன்னெறியுடைய மாணாக்கராவர். உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களைச் குருவிடம் கேட்டுத் தெளிவடைதல் வேண்டும். பயமோ சந்தேகமோ கொண்டால் குருவுக்கும் மாணவனுக்கும் இடையே இடைவெளி தோன்றும். அது மெய்யுணர்வைத் தராது என்றவர். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1674. வேட்கை விடுநெறி வேதாந்த மாதலாம்**
**வாழ்க்கைப் புனல்வழி மாற்றிச்சித் தாந்தத்து**
**வேட்கை விடுமிக்க வேதாந்தி பாதமே**
**தாழ்க்குந் தலையினோன் சற்சீட னாமே.**

“ சிவனடியார்களே, ரவீந்திரனை ஈஸ்வரன் என்ற மாணவன் கேட்டான், “ சுவாமி, மறை முடிவு என்பது என்ன?” ரவிந்திரன் சொன்னான், “ மகனே, மறை முடிவு என்பது வேதாந்தம். வேதாந்தமென்பது இயற்கை உடைமையாகிய நிலம் முதலியனவும், செயற்கையாகச் செய்யப்படுகின்ற உடை, உறையுள், ஊர்தி போன்ற மனிதனின் தேவைகளுக்கு உதவும் பொருட்களுமாகும். உயிர்நிலையாகிய உடம்பும் அதோடு சேர்ந்த மூவகைப் பற்றுக்களும் விட்ட நிலையாகும். மூன்று பற்றுக்களாவன மண், பொன், பெண் என்பனவாகும். புலன்களின் விருப்புக்கேற்ப வாழும் தீய வாழ்க்கையை மாற்றி, அப்புலன் வாழ்க்கையை நல்ல வழியிற் செலுத்தி நலமுற வாழ்ந்தால் உலக விருப்பை விட்டு நீங்கிய வேதாந்தியாகலாம். அவன் சிவகுருவின் பாதத்தைத் தலையினால் வணங்குவன். அவன் தான் நன்னெறி நன்மாணாக்களாவன். இவன் தான் மறை முடிபான வேதாந்தி என்றவன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**1675. சற்குணம் வாய்மை தயாவிவே கந்தண்மை**
**சற்குரு பாதமே சாபைபோல் நீங்காமே**
**சிற்பர ஞானந் தெளியத் தெளிவோர்தல்**
**அற்புத மேதோன்ற லாகுஞ்சற் சீடனே.**

“ சிவனடியார்களே, ரவீந்திரன் தொடர்ந்து உரையாற்றினான், “ நாம் இது வரை நன்மாணக்கனின் உருவாக்கம் பற்றியப் பார்த்தோம். இந்நன்மாணாக்கன் பத்து நல்ல குணங்களை உடையவன். அவையாவன, நற்பண்பு, வாய்மை, இரக்கம், நல்லறிவு, பொறுமை, குருவோடு இசைந்து இணைந்திருத்தல், உண்மையான அறிவினைப் பெறும் பொருள் உணர்வு, தெளிவு, ஓர்வு, அருள் நிகழ்ச்சி என்பனவாகும். இப்பண்புகளை

உடையவர்களே மெய்யறிவுள்ள நன்மாணாக்ராவர் என்றவன். ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

# ஆறாம் தந்திரம் முற்றும்.